பெப்ரவரி 2007

# எரிமலை
# ERIMALAI




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உள்ளே...

# எரிமலை



**5வது ஆண்டில் போர்நிறுத்தல் உடன்பாடு:**
**சர்வதேச சமாதான முயற்சி பற்றிய மீள்பார்வை**

**04**

**இலங்கையின் போர்ப் பாதீடு - 2007**

**12**




## கட்டுரைகள்


| | |
|---|---|
| நாதன் | 04 |
| பு.சத்தியமூர்த்தி | 08 |
| ச.பாலகிருஷ்ணன் | 12 |
| பொன் பூலோகசிங்கம் | 14 |
| விஜேந்திரன் | 57 |


## சந்திப்பு


| | |
|---|---|
| ஒலிபர் நீதன் | 26 |


## சிறுகதைகள்


| | |
|---|---|
| போ.நிலாப்பரி | 32 |
| தேவகாறு | 42 |
| எஸ்.பி.கிருஷ்ணன் | 46 |
| தமிழ்க்கவி | 58 |




**4வ பெப்ரவரி**
**சாத்வீகப் போராட்டம்**

**14**



சந்திப்பு

ஒலிபர் நீதன்

**26**

## மாபாடியம்


| | |
|---|---|
| க.வில்வரத்தினம் | 17 |


## கவிதைகள்


| | |
|---|---|
| அம்புலி | 24 |
| நா.காணகன் | 45 |
| த.பாலகணேசன் | 49 |


## தொடர் கதைகள்


| | |
|---|---|
| தமிழ்க்கவி | 35 |
| திசேரா | 38 |
| கலைச்செல்வி | 50 |




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




போர்நிறுத்தம் செய்து, சமாதானப் பேச்சுக்கள் நடாத்தி, ஐந்து ஆண்டுகள் அமைதி காத்தபோதும் எம்மக்களுக்குச் சமாதானத்தின் பலாபலன்கள் எவையுமே கிட்டவில்லை. அவர்களது வாழ்வு இருண்டுபோய் நரகமாக மாறியிருக்கிறது. தாங்கமுடியாத அன்றாடு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எம் மக்களை வாட்டி வதைக்கிறது. தொடரும் போரினால் எமது மக்கள் மிகவும் அவலமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டிருக்கிறார்கள்.

பல்லாயிரம் மக்கள் தமது சொந்த வீடுகளிலிருந்து குடிபெயர்க்கப்பட்டு, நோயும் பிணியும் பசியும் பட்டினியும் வாட்ட, அகதிமுகாம்களில் அல்லற்படுகிறார்கள். எம்மக்களது உயிர்வாழ்விற்கான உணவையும் மருந்தையும் மறுத்து, பாதையைப் பூட்டி, பட்டினி போட்டுப் படுபாதகம் புரியும் சிங்கள அரசு எம்மக்களுக்குக் கருணைகாட்டி, கருணையம் செய்து, அரசியல் உரிமைகளை வழங்கிவிடும் என நாம் எதிர்பார்க்கமுடியாது. அப்படி எதிர்பார்ப்பது அரசியல் அசட்டுத்தனமே அன்றி வேறொன்றுமல்ல.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்
மாவீரர் நாள் 2006 உரையிலிருந்து...



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# தலைவாசல்

## சிறீலங்கா அதிசயங்கள்

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
பெப்ரவரி 2007

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 5வது ஆண்டில் போர்நிறுத்தல் உடன்பாடு:

## சர்வதேச சமாதான முயற்சி பற்றிய மீள்பார்வை



■ நாதன்

இலங்கை இனச்சிக்கல் தீர்ப்பு முயற்சிகளில் நோர்வே மத்தியத்துவத்துடனான போர்நிறுத்தல் உடன்பாடும், பேச்சுவார்த்தை முயற்சிகளும் முக்கியமான நகர்வாகும். தென்னாசிய பிராந்திய வட்டத்திற்குள் முடங்கிக் கிடந்த இனச்சிக்கலை சர்வதேச அனுசரணை என்கின்ற சர்வதேசத் தலையீட்டு எல்லைவரை இழுத்துவந்த இந்த நகர்வானது, பனிப்போரிற்குப் பிந்திய காலத்து புதிய உலக உருவாக்க முயற்சிகளின் நோக்கங்களைப் பரிசோதிக்கும் இடமாகவும், உருவாக்கும் இடமாகவும் விளங்குகின்றது. இத்தகைய முக்கியத்துவம் பெற்ற போர்நிறுத்தல் உடன்பாடு தனது 5வது ஆண்டை 2007 பெப்.22ல் பூர்த்தி செய்கின்றது. எனினும், தோற்றுவரும் உடன்பாடாக அல்லது இறந்துபோன உடன்பாடாகவே இது இன்று நடைமுறையில் உள்ளது.

திருமலை - வாகரை பிராந்தியம் மீதான வலிந்த தாக்குதல்கள், துணைப்படை நடவடிக்கைகள், ஏ-9 மூடப்பட்டது, வாகரை மீதான படையெடுப்பு என பலவகைப்பட்ட போர்நிறுத்த மீறல்களைப் புரிந்தவாறு சிங்கள தேசம் போர்நிறுத்தல் உடன்பாட்டை 'நடைமுறையில்' முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டின் கண்காணிப்பாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இலங்கைத் தீவில் கால்பதித்த மேற்குலகு, இந்தப் போர்நிறுத்தல் மீறல்களை 'நடைமுறையில்' அங்கீகரித்தவாறே இலங்கைத்தீவில் சமாதானம் நிலவ வேண்டும் என்று போதிக்கின்றது. சர்வதேச உறவுகளை வெறுமனே நீதிசார் அச்சில் பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றும் இந்த முரண்பாடு, 2002ல் செய்யப்பட்ட போர்நிறுத்தல் உடன்பாடு தொடர்பான மேற்குலக மூலோபாயத்தின் அடிப்படையிலேயே இயங்குகின்றதா? என்பதை ஆராய்வதே இந்த மீள்பார்வையின் நோக்கமாகும்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முக்கிய கடல்பாதையில் அமைந்துள்ள இலங்கைத் தீவில் அமைதி நிலவவேண்டும் என அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் எனப் பலதரப்பும் விரும்புவதன் நோக்கம் என்ன என்பதை அறிவதற்கு மிகவும் சர்வதேசக் கல்வி தேவையில்லை. இது இந்து சமுத்திரப்பிராந்தியத்தின் பொருளாதார, அரசியல், இராணுவக் கட்டுப்பாட்டுடன் தொடர்புபட்ட மேற்குலக மூலோபாயத்தின் அடிப்படையில் வெளிப்பட்ட விசைகள் தான் என்பதை அனைத்துலக ஆய்வாளர்க



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ளுடன் இணைந்து தமிழின் முன்னணி ஆய்வாளர் மாமனிதர் சிவராம் தெரிவித்திருந்தார். தனது நலன்களுடன் தொடர்புபட்ட கிழக்காசிய நாடுகளின் எரிபொருள் மற்றும் பொருளாதாரப் பாதையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க அமெரிக்கா விரும்புகின்றது என்பதும், இந்தக் கட்டுப்பாட்டிற்கு இலங்கைத் தீவின் மீதான அமெரிக்க செல்வாக்கும் ஒரு முக்கிய விடயம் என்பதும் பொதுவாகவே இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும். கூடுத்த வருட இறுதியில் சிறீலங்காவின் தேசிய தொலைக்காட்சிக்கு செவ்வியளித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜெவ் லுண்ஸ்ரெட் ஜெப்ரி லன்ஸ்ரெட் (Jeffrey Lunstead) பெர்ட் பிளேக் இந்தக் கருத்தினை பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டிருந்தார். இந்த சமாதான நோக்கினை ஆராய்ந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைமை காலஞ்சென்ற மேஜர் ஜெனரல் புரூகோவ (Maj. Gen. (retd) Trond Furuhovde) அவர்கள், மாற்றும் கண்டுவரும் ஆசிய தொடர்பான நலன்கள் சார் மூலோபாயத்திற்கு ஏற்ப புதிய வியூகங்களை அமெரிக்கா வகுக்கின்றது என்கின்றார். இலங்கையின் திருமலை துறைமுகமும், மட்டக்களப்புக் குடாவும் அமெரிக்காவிற்கு மிக வாய்ப்பான கடல் மூலோபாய சாத்தியங்களை வழங்குகின்றது என்றும் அவர் கோடிட்டுக் காட்டுகின்றார்.

இலங்கைத் தீவில் அமைதி நிலவுவதற்கும் அமெரிக்க அல்லது மேற்குலக நலன்களுக்கும் தொடர்பு என்ன என்பதை இப்போது விளாதிக்கும் கொழும்பு மேட்டுக்குடி தமிழ் ஆய்வாளர் பாக்கியசோதி சரவணமுத்து இலங்கைத் தீவில் பிற சக்திகள் நிலையூன்றாது மறுக்கும் வியூகமே (strategy of denial) இது என்று கூறுகின்றார். அமெரிக்கா உட்பட்ட மேற்குலகுக்கும், இந்தியாவுக்கும் புவிசார் மூலோபாயத்தின் அடிப்படையில் முக்கியமான இலங்கைத் தீவில் சீனா போன்றன செல்வாக்குச் செலுத்துவதை நிராகரிக்கும் நோக்கே இலங்கை தொடர்பான கொள்கையின் முக்கிய அச்சாகவுள்ளது என அவர் இனங்காட்டுகின்றார்.

இலங்கைத் தீவில் போர் நிலவுவதும், இனத்துவக் கிளர்ச்சி நிலவுவதும் இந்த நிராகரிக்கும் மூலோபாயத்திற்கு பாதகமானது என்பதை சில ஆய்வாளர்கள் கோடிட்டுக்காட்டுகின்றனர். போரும், குழப்பங்களும் இலங்கைத் தீவை இரு தேசியங்களையும் தூரமாக்கப்படுத்துகின்றது. இந்த கடுமையான தூரமாக்கப்பட்ட நிலைமையும் பிற தேசியமாற சக்திகளைப் பிரயோகிக்கின்றது. சீனா போன்றன தலையிடுவதற்கும் போர் வழிவகுக்கின்றது என்று மேற்குலகு கணிக்கிறது. மேலும், இலங்கைத் தீவினை தாங்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான பாதுகாப்பினை போர் ஏற்படுத்தாது என மேற்குலகு கணித்தது. இதிலிருந்து தான் அமைதி உருவாக வேண்டும் என்ற மேற்குலகின் தீர்வு கரிசனை உருவாகியது. சிறீலங்காவின் மனிதவுரிமை நடவடிக்கைகள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உட்பட்ட தார்மீக காரணங்கள் இந்த சமாதான முயற்சியில் தாக்கம் செலுத்தின என்று கூறுவது சற்று அப்பாவித்தனமானது.

2002ல் கைச்சாத்திடப்பட்ட இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கை இலங்கையில் சமாதானத்தினை உருவாக்குவதற்கான முக்கிய நடவடிக்கை என்றுதான் அனைத்துலக சமூகம் எனப்படும் மேற்குலகம் வரையறை செய்தது. எனினும், ஒருபகுதி மூலோபாய ஆய்வாளர்கள் இதனை கிளர்ச்சி ஒடுக்கும் தந்திரோபாயமாகவே (counter insurgency strategy) பார்த்தனர். கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு நேரடியான இராணுவ மார்க்கங்கள் மட்டும் வழியல்ல என்பதை தமது வரலாற்று அனுபவங்கள் ஊடாகக் கற்றறிந்த வல்லரசுகள் கிளர்ச்சிகளில் ஈடுபடும் மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தி, கிளர்ச்சிக்கான வலுவாதாரமாகத் திகழும் அடிப்படைச் சூழல்களை பலவீனப்படுத்துவதை ஒரு தந்திரோபாயமாகவே வரைந்தெடுத்துள்ளன. போர்நிறுத்தமும், பேச்சுவார்த்தைகளும் கூட ஒருவகை கிளர்ச்சி ஒடுக்கும் தந்திரோபாயமாகும்.

இலங்கை இனச்சிக்கலின் முரண்பட்டு நிற்கும் தமிழ் சிங்கள தரப்புக்களை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவது நீதியான தீர்வை ஏற்படுத்தி, தமிழ் மக்களிற்கு வழங்கும் நோக்கிலேதான் என்று மேற்குலகு வரையறை செய்து கூறவில்லை. அல்லது, தீவுக்கு அடிப்படையாக இருக்கக் கூடிய தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளான தேசியம், தாயகம், தன்னாட்சி என்பவற்றை ஏற்றுக் கொள்ளும் விடயத்தில் கூட மேற்குலகம் உறுதி வெளியிடவில்லை. மாறாக, சிறீலங்கா அரசுடன்



தமிழீழ தேசியத் தலைவருடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற மேஜர் ஜெனரல் புரூகோவ (Maj. Gen. (retd) Trond Furuhovde) அவர்கள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது இராணுவ வலுவுக்கான போட்டியிற்குத் துணைநிற்கும் அரசியல் வழிப்பட்ட அதிகாரப் போட்டியாகும். இங்கு சிங்கள தேசத்தின் நோக்கமானது தமிழர்களின் தற்காப்பு இராணுவ வலுவை உடைப்பதும், நடைமுறை தமிழர் நாடாக (de - facto state) உருவாகி வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றுவதுமாகும்"



[illegible]

இணைந்து இனச்சிக்கலை [illegible], பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வைக் கொண்டு வருவது, புலிகள் வன்முறையைக் கைவிடல் வேண்டும் போன்ற சர்வதேச ஒழுங்குக்கு உட்பட்ட அறிவிப்புக்களுடன் [illegible] வெளிப்பட்டது.

இதனை இன்னொருவிதமாக ஆய்வு செய்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் [illegible] பொன்னம்பலம் "சிறிலங்காவால் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை 2000 - 2001 தோல்விகளை அறிந்துணர்ந்த சர்வதேச சக்தியின் புலிகளை மட்டுப்படுத்துவதற்கான தந்திரோபாயமாகவே இந்த போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை உத்தியை ஆரம்பித்தார்கள்" என்று [illegible] சர்வதேச ஆய்வாளர்கள் முன்பு இடம்பெற்ற மாநாட்டில் விபரித்தார்.

தமிழ் மக்களுடனான [illegible] சிறிலங்கா இந்த சர்வதேச நோக்கினை சரியாகக் கணித்து செயற்பட்டு போர்நிறுத்தம், சமாதான நடவடிக்கைகளை தன்னை வலுப்படுத்துவதற்கான இடைவெளியாக பாவித்துக் கொண்டது. அத்துடன், சர்வதேச நலன்களுடன் தனது நலன்களை [illegible] ஊடாக சர்வதேச பாதுகாப்பு வலையை அது உருவாக்கிக் கொண்டது.

தமிழீழ மக்களும், அவர்களின் தேசியத் தலைமையும் இந்த சர்வதேச உத்திகளையும், நோக்கங்களையும், தந்திரங்களையும் அறிந்து தங்கள் [illegible] மேற்கொண்டு [illegible] சர்வதேச சமூகத்துடன் உறவுகளை வளர்க்கும் முயற்சிகள், சிங்கள தேசியவாத கட்டமைப்புகளை அம்பலப்படுத்தும் நடவடிக்கைகள் [illegible]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அரசியல் - இராஜதந்திர தளத்தில் புலிகள் செயற்பட்டனர். மறுபுறம், உளவாளிகள், துணைப்படைகள் போன்றன உட்பட பல வகைப்பட்ட சிங்கள இராணுவ செயற்பாடுகளை நிராகரிக்கும் இராணுவ நடவடிக்கைகளையும் புலிகள் மேற்கொண்டனர். கருணா என்ற தேசத்துரோகி உருவாக்கியமையை தமது கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையின் முக்கிய வெற்றியாக சிங்கள தேசம் கருதிச் செயற்பட்ட போது, தமிழ் மக்களின் விடுதலையை விழுங்கும் நோக்குடன் பின்னப்பட்ட சமாதான பேச்சுக்கள் எனப்பட்ட கிளர்ச்சி ஒடுக்கும் நடவடிக்கைகளையே புலிகள் தோற்கடிப்பதற்கான வாய்ப்பை புலிகளுக்கு வழங்கிவிட்டது என சில சர்வதேச ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

நூரிச்சில் 2006 ஏப்ரிலில், சர்வதேச ஆய்வாளர்கள் முன்பு இந்த விவகாரத்தினை ஆய்வு செய்த அறன் பொன்னம்பலம், சர்வதேச சமூகத்தின் சமாதான உத்தியினை புலிகள் அறிந்திருந்த போதும், சமாதான முயற்சிகளில் பங்குபற்றுவதன் வாயிலாக சிங்கள பெருந்தேசியவாதமே இலங்கையின் அடிப்படைப் பிரச்சனை என்பதை அம்பலப்படுத்தி - அதனைத் தனிமைப்படுத்த முயன்றனர் என்று கூறினார்.

போர்நிறுத்தல் உடன்பாட்டின் 5வது ஆண்டு நிறைவின் கள யதார்த்தம் வெளிப்படையில், இலங்கை சமாதான முயற்சிகளின் நோக்கம் கிளர்ச்சி ஒடுக்கும் தந்திரோபாயமாக இருந்தாலும் அல்லது புலிகளை மட்டுப்படுத்தும் வியூகமாக அமைந்தாலும், புலிகள் அந்த வியூகத்தினை விட்டு பாதுகாப்பாக வெளியே வந்துவிட்டனர்.

'இந்த சமாதான மூலம் பூசப்பட்ட பொறிக்குள் இருந்து பெரும் சேதாரமின்றி வெளியே வந்துவிட்டோம் என்பதை வெற்றியாகவே பார்க்கின்றோம்' என அண்மையில் தமிழ் தேசியத் தொலைக்காட்சியின் 'நிலவரம்' விவாதத்தின் போது விடுதலைப் புலிகளின் அரசியற்துறை மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் சுட்டிக்காட்டினார். பல்வகை அர்த்தங்களை வெளிப்படுத்தும் வார்த்தை அது.

* * * * *

போர்நிறுத்தல் உடன்பாட்டின் இன்றைய நிலையை மேற்குலகு தெளிவாகவே உணர்ந்துள்ளது. தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடு புலிகளின் இராணுவ வலுவுடன் இணைந்து உருக்கொண்டிருக்கின்றது என்ற கள யதார்த்தம் ஒருபுறம் உணரப்பட்டது. மறுபுறம், போரற்ற சமாதானம் உருவாகுவதற்கு தடையாகவுள்ள சிங்கள தேசியவாதத்தை கையாள்வது என்பது மேற்குலகின் மூலோபாய நிலைப்பாடுகளுக்கு பாதகமாகவே இருக்கின்றது என்ற யதார்த்தமும் உணரப்பட்டது. சிங்கள தேசியவாதம் தனது வெளிவிவகாரப் பார்வையை விரிவுபடுத்தி சீனா உட்பட பலதரப்பு வலுவுடன் செயற்படுகின்றது என்பதால் மேற்குலகின் அழுத்தங்கள் அதீத தாக்கத்தை சிறிலங்காவிற்கு ஏற்படுத்தாது. சூடான் மீது டாபூர் (Darfur) விவகாரம் மூலம் ஏற்படுத்தப்படும் மேற்குலக அழுத்தமானது சீனா உட்பட நாடுகளின் பொருளாதார - வணிக உதவிகளுடன் சூடான் முறியடிக்கின்ற சர்வதேச அனுபவம் சிங்களத்திற்கு கைகொடுக்கின்றது.

> தமிழீழத்தின் இறைமையை வலுவுடன் மண்ணில் எழுதி, அந்த அச்சிலிருந்து உலகுடன் பேசவே தமிழீழ மக்களின் சமாதானக் குரலுக்கு வலுச் சேர்க்கும். அந்தக் கள யதார்த்தத்தை எழுதும் வலுவைப் புலிகளுக்கும், போராடும் மக்களுக்கும் தமிழீழப்பலம் வழங்குவதே முதன்மையான விடுதலைக்கான பணியாகும். இதுவே போர்நிறுத்தல் ஊடாக நாங்கள் மேற்கொண்ட பயணத்தின் 5வது ஆண்டின் முடிவில் வெளிப்படும் அனுபவ பாடமாகும்.

இதனால், போரிடும் இருதரப்புக்களுக்கும் இடையே ஏற்பட்ட இராணுவச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டு சிறிலங்கா இராணுவ வழிமூலம் கள நிலைமைகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நடவடிக்கையை அனுமதிக்க மேற்குலகு முடிவு செய்தது.

இந்த நிலையை இன்னுமொரு விதமாக புது தில்லி நேரு பல்கலைக்கழக பேராசிரியர் சதானந்தன் விவரிக்கின்றார். "சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது இராணுவ வலுவுக்கான போட்டிக்குத் துணைநிற்கும் அரசியல் வழிப்பட்ட அதிகாரப் போட்டியாகும். இங்கு சிங்கள தேசத்தின் நோக்கமானது தமிழர்களின் தற்காப்பு இராணுவ வலுவை உடைப்பதும், நடைமுறை அரசாக உருவாகிவரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றுவதுமாகும்" என்கின்றார். இலங்கைத் தீவில் சிறிலங்காவின் கட்டுப்பாட்டிற்குட்படாத இன்னுமொரு கட்டுப்பாட்டுப் பகுதியும், அரசும் செயற்படுவதை உடைத்து சிறிலங்கா தனது இறைமையை மீள நிலைநாட்டும் கொள்கையையும் நடவடிக்கைக்கு அமெரிக்கா உட்பட உலகின் வல்லரசுகள், இன்றுள்ள பனிப்போரிற்குப் பிற்பட்ட காலத்து சர்வதேச நெறிமுறைக்குள், ஆட்சேபம் தெரிவிக்க மாட்டாது என்று சதானந்தன் போன்ற மூலோபாய கற்கையாளர்கள் கருதுகின்றனர்.

அப்படியாயின், போர்நிறுத்தல் இன்னமும் இருப்பதாக மேற்குலகு பாவனை பண்ணுவதன் நோக்கம் என்ன? போர்நிறுத்தல் உடன்பாடும், நோர்வே தலையீடும் தான் இலங்கைத் தீவின் இனப்பிரச்சனையை பிராந்திய மேலீட்டிலிருந்து சர்வதேச அரங்கிற்கு அழைத்து வந்த ஆயுதம். இந்தியாவை ஓரங்கட்டிய ஆயுதமும் அதுதான். உடன்பாடு நடைமுறையில் இறந்துவிட்ட போதும் அதன் பயன்பாடு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

புலிகள் இதனைக் கணித்தே தங்களின் அரசியல், இராணுவக் காய்களை பொறுமையுடன் நகர்த்துகின்றனர். சிறிலங்காவுடனான தமது போர், சிறிலங்காவை மையப்படுத்தி இடம்பெறும் சர்வதேசப் போர் என்பவற்றைப் பற்றிய தெளிவுடன் தான் புலிகள் நிலைமைகளை ஆராய்கின்றனர்.

தமிழீழத்தின் இறைமையை வலுவுடன் மண்ணில் எழுதி, அந்த அச்சிலிருந்து உலகுடன் பேசவே தமிழீழ மக்களின் சமாதானக் குரலுக்கு வலுச் சேர்க்கும். அந்தக் கள யதார்த்தத்தை எழுதும் வலுவைப் புலிகளுக்கும், போராடும் மக்களுக்கும் தமிழீழப்பலம் வழங்குவதே முதன்மையான விடுதலைக்கான பணியாகும். இதுவே போர்நிறுத்தல் ஊடாக நாங்கள் மேற்கொண்ட பயணத்தின் 5வது ஆண்டின் முடிவில் வெளிப்படும் அனுபவ பாடமாகும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொழும்பிலே ஏற்பட்ட தீள் அரசியற் திருப்பங்களும் அதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கருத்துக்களும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பல்வேறு விடயங்களை வெளிக் கொண்டு வந்திருக்கின்றன.

இந்த விடயங்கள் இதுவரையும் திறக்காத கண்களைத் திறக்க உதவ வேண்டும் என்ற விருப்பார்வம் தமிழ்மக்களிடம் ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா அரசு தமக்கு ஏற்படுகின்ற சிக்கல்களையெல்லாம் - சிக்கல்களை ஏற்படுத்துபவர்களையெல்லாம் பயங்கரவாதமாகவும் பயங்கரவாதத்துக்கு அளிக்கப்படும் ஆதரவாகவும் பயங்கரவாதத்துக்கான ஆதரவாளர்களாகவும் [illegible] குற்றஞ்சாட்டி வருகின்றனர். இவ்வாறான மிகத் துலக்கமான நான்கு சம்பவங்களை நாங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்வோம்.

1. அலன்ரொக் விவகாரம், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் ஐரோப்பிய ஒன்றியம் பக்கச்சார்பாக நடப்பதாக மகிந்த ராஜபக்சவின் குற்றச்சாட்டு.

2. புகையிரதத் திணைக்களத் தொழிற்சங்கம்.

3. பத்திரிகையாளர்கள் மூவர் கைது விவகாரம்.

4. பதவிநீக்கப்பட்ட அமைச்சர்கள் மூவர் விவகாரம்.

ஆசியாவிற்றில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்ட விதம் குறித்து உற்றுநோக்கினால் இது பற்றி தெளிவானதொரு முடிவுக்கு நாங்கள் வரமுடியும்.

கொழும்பின் ஆட்சிக்கதிரை எந்தவொரு இக்கட்டிலிருந்தும் விடுபடுவதற்கான 'மந்திரக் கோலாக' விளங்குவது 'புலிப் பூச்சாண்டி' இந்தப் பூச்சாண்டியைத் திட்டமிட்டு எவ்வாறு மகிந்த ராஜபக்ச பயன்படுத்துகிறார் என்பதைக் கவனிப்போம்.

"நாட்டின் உறுதியான தன்மைக்கு

# ஒரே பானையும் ஒரே அகப்பையும்

# கொழும்பின் அரசியல் சக்தி









சனால் ஏற்படக்கூடிய எந்தவித நடவடிக்கை களிலும் ஈடுபடவேண்டாமென மிகவும் பொறுப்புடன் உங்களை நான் வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்; இறுதி மூச்சுவிடு கின்ற பயங்கரவாதத்திற்கு ஒட்சிசன் வழங்க தெரிந்தோ, தெரியாமலோ செயற்பட வேண் டாமென குறிப்பாக இந்நாட்டின் உழைக் கும் மக்களிடம் வேண்டு கோளிடுக்க இன்று இந்தமேடை மிகவும் பொருத்தமான தென நான் நம்புகின்றேன்"

இது மகிந்தராஜபக்ச கடந்த பெப்ரவரி 4ம் திகதி காலை காலிமுகத்திடலில் ஆற் றிய சிறீலங்காவின் 59வது சுதந்திர தினத் தன்று ஆற்றிய உரையின் ஒரு கீற்று. இந்த உரை ஆற்றப்பட்டு ஒரு நாள் கழிந்த நிலையில் கொழும்பின் புறநகர்ப்பகுதி யிலிருந்து மூவர் காணாமற் போயிருக்கின்ற னர். சிறீலங்காவிலே 5மணிநேரத்திற்கு ஒரு வர் கடத்தப்படுகின்றனர். அங்கு கடத்தப் பட்ட மூவரும் தமிழர்கள் அல்ல. சிங்களவர் கள் 'உழைக்கும் மக்களின்' இயக்கு சக்தியாக விளங்கும் தொழிற்சங்கவாதி கள். அதிலும் குறிப்பாகப் பத்திரிகையாளர் கள் (லங்காதீப - கிவ - பத்திரிகைக் குழுமின ரயில்வே தொழிற்சங்க வெளியீடு). இவர் கள் காணாமற்போனது, கடத்தப்பட்டது கொழும்பில் சமூக அமைப்புகளிடையே பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கண் டனங்கள் எழுந்தன. சுதந்திர ஊடக இயக் கம் கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மட்டுமன்றி பாரிசையும் நியூயோர்க்கை யும் மையமாகக் கொண்டிருக்கும் இரு சர்வ தேச ஊடக இயக்கங்களும் இவர்களது விடு தலைக்காக குரலெழுப்பின. கண்டனங் களை வெளியிட்டன. ஆனால் அரசதரப்பி லிருந்து 7ம் திகதி (கடத்தல் நடை பெற்று 48மணிநேரம் வரை) காலைவரை எந்தவிதமான பிரதிபலிப்புக்களும் வர வில்லை. மாறாக விசேடமாகக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாடொன்றில் அரசின் காட்சிகள் அரங்கேற்றப்பட்டன. காணாமற் போனதாக அல்லது கடத்தப்பட்டதாகக் கரு தப்பட்ட மேற்குறித்த மூவரும் பத்திரிகையா ளர்களையும், தொழிற்சங்கவாதிகளையும் தாமே 'கைதுசெய்துள்ளதாக' அரச பாது காப்பு பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல அறிவித்தார்! அம் மூவரும் புலிகளின் கையாட்கள் எனவும், கிளிநொச்சியில் வெடி குண்டுகளையும் வெடிக்கவைக்கும் பயிற் சிகளையும் பெற்றவர்கள் என்றும், வெடி பொருட்களையும் ஆயுதங்களையும் கொழும்பிலே கைமாற்றினர்கள் எனவும் அவர்கள் குற்றம்சாட்டப்பட்டார்கள். டிசம்பர் 30 ஆம் திகதிகளில் நீர்கொழும்பிலும் நுகே கொடையிலும் வெடித்த பேருந்துக் குண்டு களின் பின்னணியில் செயற்பட்டார்கள் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் குண்டு வெடிப்புக்களை நடத்தியதன் மூலம் பாது காப்புச் சூழ்நிலையை பலவீனமாக்க முயன் றனர் எனவும் அடுக்கடுக்கான அதிர்ச்சிப்பூட் டும் வகையிலான குற்றச்சாட்டுக்களை அவர்கள் மீது இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் பிரசாத் சமரசிங்க சுமத்தினார். அது மட்டுமன்றி மேற்படி விபரங்களை அம் மூவரிலொருவரின் ஒப்புதல் வாக்குமூல வீடியோ நாடாவையும் பத்திரிகையாளர்களுக் கும் காண்பித்தனர். ஆக கடத்தல் இவ் வாறாக 'கைதாக' அரங்கேறியது. ஆனால் இதன் பின்னே மறைந்து கிடப்பவை மிக முக்கியமான விடயங்கள். அதனை உணர்ந்து கொள்ள சிறீலங்காவின் இன் றைய அரசியல் பொருளாதார நிலைமையைப் புரிந்து கொள்ளவேண்டும். மகிந்தராஜபக்ச 2005 ஒக்ரோபரில் மகிந்த சிந்தனையை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளி யிட்டபோது அவருக்கு பக்கபலமாகத் தோளோடு தோளாக நின்றவர்கள் மங்கள சமரவீரவும் அவரது கட்சியான சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுமே.

2005 நவம்பர் 17ம் திகதி நடைபெற்ற தேர்தலில் மகிந்த வெற்றியீட்டுவதற்காக தென்னிலங்கையின் படித்தொடர் பெரும் புறுத்தி நின்றாக ஜே.வி.பி யினர் உழைத்தனர். பிரச்சார நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழிப் படுத்தினார் சமரவீர. இதன் காரணமாகவே இவர்கள் மகிந்தவின் மீது தமது செல் வாக்கைப் பிரயோகிக்க முயன்றுவருகின் றார். ஜே.வி.பி தமது அரசியற்தளத்தைப் பலப்படுத்தவும் சுதந்திரக்கட்சியின் தளத் தைப் பலவீனப்படுத்தி தன்னில் தங்கி யிருக்கச் செய்யும் செய்து வரும் செயற் பாடுகள், மகிந்தராஜபக்சவுக்கு பலத்த நெருக்கடிகளை ஏற்படுத்திவருவதால் அவர் களை தட்டிவைக்க அல்லது வெட்டிவிட வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இதன் விளைவாகவேதான் அவர் ஐ.தே.கட்சியுடன் கைகுலுக்கியதுடன் அக்கட்சி யின் அதிருப்தியாளர்களை உள்வாங்கித் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளவும் முக மாகவும் ஜே.வி.பியில் தங்கியிருக்கவேண் டிய தனது பலவீனத்தை நிவர்த்திசெய் யவும் முயற்சிக்கிறார். அவரது உத்தி ஒரு கல்லில் இருமாங்காய் அடிக்கும் இலக்கு டையது. முதலாவதாக பாராளுமன்ற அறுதிப்பெரும்பான்மைக்காக ஜே.வி.பியில் தங்கியிருப்பதை இல்லாமற் செய்வது. அடுத்தது துணைத்திறனான தன்னைச் சுற் றித்துக்கொண்டு தங்கும் பாரம்பரிய சுதந்திரக் கட்சிக்காரர்களான கண்டிய, கொழும்புச்சிங்களத் தலைவர்களுக்கு மாற்றாகக் கட்சிதாவி வந்த 'அருவருப்பான' ஐ.தே.கட்சிக்காரர்களை அரணாக நிறுத்து வது. ஒப்பீட்டளவில் பலவீனமாக இருக்கும் கட்சிதாவிய எம்பிக்கள் தம்மிக்க முடியாத படிக்குத் தனக்கு விசுவாசமாக இருக்கு மென்ற எதிர்பார்ப்புடன் திருமகிந்த பாரம்பரிய சிங்களவாதத் தடையையுடைக்க அவர்களைப் பயன் படுத்துகிறார். இப்போது ஜே.வி.பி அரசாட் பாம்பாகிவிட்டது தன்னைக் 'கதிரையுள்ளே' யாகப் பார்த்துவிட்ட மகிந்தவுக்கெதிராக அது விடுவிக்கப்பட்டது தனது கைகளுக்கு அமைப்பான தொழிற்சங்கப் போராட்டங் கள், போராட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவர் ஒட்டிகள் நடத்தப்படும் பொதுக்கூட்டங் கள் என அது கோதாவில் இறங்கிவிட்டது. கட்டுக்கடங்காமல் அதிகரித்துவரும் வாழ்க் கைச்செலவு, அரச நிறுவனங்களில் தலை விரித்தாடும் ஊழல், லஞ்சம், போலாதியே

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நேற்றுவரை தனது சகாவாக இருந்த ஒருவரும் சக்திமிகுந்த அரசியல்வாதியுமான மங்கள சமரவீரவின் மீதே இவ்வளவு இலகுவாகப் புலிச்சாயம் பூசும் அரசு, தமிழ்மக்கள் மீது, சாதாரணதுப்பாக்கி தமிழ்மக்கள் மீது எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை இப்போது உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?

காரம், அதாரிநுறைகள்கள் தனியார் மயமாக்கப்படுதல், அதிகரித்துவரும் சர்வதேசத் தலையீடு, மகிந்த சிந்தனைக்கெதிராக மகிந்த செயற்படுகின்றார் என்ற பிரதான விடயங்களை தென்னிலங்கையில் ஏற்கனவே உருவேற்றப்பட்டிருக்கின்ற மக்கள் மத்தியில் ஜே.வி.பி கொண்டு செல்லுமாயின் அது தனக்கு தீராத தலைவலியாக நாளடைவில் மாறிவரும் என்பதை அவர் நன்குணர்ந்திருக்கிறார். தென்னிலங்கை மக்கள் வாழ்க்கைச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவஸ்தைப்படுகையில் ஜே.வி.பி வீட்டுக்கு வீடு சென்று நடத்தக்கூடிய பரப்புரை நன்கு எடுபடுமென்பதும் மகிந்த அறிந்ததே. எனவே இந்த விவகாரங்களுக்கு ஆப்புவைப்பதற்காக அவர் அதனைப் புலிப்பூச்சாண்டியுடன் சேர்த்து முடிந்து விட்டிருக்கிறார். அதைத்தான் அவரது சுதந்திரதின உரையில் மேற்சொல்லிற்று உணர்த்துகிறது. உழைக்கும் மக்கள் விழிப்பிறங்குவதைத் தடுக்க முயற்சிக்கும் மகிந்த எந்தளவுக்கு முனைப்பாக உள்ளார் என்பதை அது தெளிவுபடுத்துகிறது. இதில் இன்னுமொரு விவகாரமும் இருக்கிறது. மகிந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களது சம்பளத்தையும் ஏனைய கொடுப்பனவுகளையும் வசதிகளையும் பலமடங்காக அதிகரித்திருந்தது. அரச ஊழியர்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ எந்தவித சம்பள அதிகரிப்புக்களும் வழங்கப்படாத நிலையில் வாழ்க்கைச் செலவு மட்டும் கிடுகிடுவென அதிகரித்துச் செல்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரமும் வாங்கும் சக்தியும் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கையில் அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மட்டும் வழங்கப்பட்ட இந்த வரப்பிரசாதம் மக்களைச் சீற்றமுறச் செய்திருக்கிறது. இந்த அபாய சூழலை ஜே.வி.பி நன்கு பற்றிப் பிடித்துக் கொள்ளுமென்பதும் மகிந்தவுக்கு நன்கு தெரியும். இதனிடையே இந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதிகரிப்புக்கெதிராக நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. ஆகவே தனக்கெதிராகத் 'தாமியில் வெண்ணெய் திரள்வதை' மகிந்த உணர்ந்ததோடு தாமதிக்கும் ஒவ்வொருநாளும் தனக்கு கண்டம் நெருங்கி வருவதையும் அவர் கணிப்பிட்டார். விலைவு? மூன்று தொழிற்சங்கவாதிகளின் கடத்தல், கைது நாடகம் அரங்கேறியது. இதிலுள்ள விசேடம் என்னவென்றால் கடத்தப்பட்ட மூவருள் ஒருவர்தான், நீதிமன்றில் பாராளுமன்ற அரசியல்வாதிகளின் சம்பளம், கொடுப்பனவு அதிகரிப்புக்கெதிராக வழக்குத் தொடுத்தவராவார். உங்களுக்கு இப்போது அனைத்தும் தெளிவாகியிருக்கும். இனி 'உழைக்கும் மக்களுக்கு பயங்கரவாதத்துக்கு ஒட்சிசன் வழங்கும் காரியத்தை தெரிந்தோ தெரியாமலோ செய்ய வேண்டாமென' மகிந்த விடுத்த 'சுதந்திர தின எச்சரிக்கையை' விளங்கிக்கொள்வதிலும் எதுவித சிரமங்களுமிருக்கப் போவதில்லை. அனைத்தும் புலிப்பூச்சாண்டிக்குள் அமுக்கப்பட்டுவிட்டன. அடுத்தது அனுரா, சிறிபதி, மங்களவினுடையதும், இம்மூவரது அமைச்சர்களையை விட்டுத் தூக்கி வீசப்பட்ட பின்னர் இருவிடயங்கள் அரசதரப்பால் வெளியிடப்பட்டன. ஒன்று 'இம்மூவரும் புலிகளின் தேவையை நிறைவு செய்ய முயற்சித்தார்கள் என கட்சியின் செயலாளர் திருமைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்ட குற்றச்சாட்டு. அடுத்தது, இவர்கள் தனக்கு உடல்ரீதியாக பாதிப்பு ஏற்படுத்தச் சதிசெய்தார்கள். அதற்கான பொலிஸ்விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மகிந்த, 24புதிய கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் தெரிவித்தார். இதனிடையே மங்கள அவசரகாலச்சட்டத்



Tamileelam Archive


தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. கொழும்பிலே சந்திப்புக்களும் பாதுகாப்பு மேலாதிக்கத்தின் உத்தரவின்பேரில் பொலிஸாரால் தடுக்கப்பட்டன. மங்களவின் குடும்பத்தினர் தவிர வேறு யாரும் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படக்கூடாது என்பதாக அந்த உத்தரவு அமைந்தது. தனக்கெதிராக ஜனநாயக உட்கட்சிப் புரட்சியையும், எதிர்க்கட்சிகளின் ஒன்றுதிரள் நிலையையும் ஒடுக்கும் மகிந்த புலிப்பூச்சாண்டியையே கையிலே எடுத்தார் என்பது கவனிக்கவேண்டியது. அத்தோடு அவசரகாலச்சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் மிகைசதியாக அவரின் இருவருடங்களிலும் இருப்பது இப்போது தான் தென்னிலங்கையின் தரப்புகளுக்கு உறைத்திருக்கக்கூடும். அலன்றொக் விவகாரம், சிறுவர்விவகாரமும், ஆயுதமுரண்பாடுகளுக்கான ஐ.நா.ஆணையாளரின் பிரதிநிதியான அலன்றொக் தனது 10 நாள் இலங்கைவிஜயத்தின் பின், 'சிறுவர்களை ஆட்சேர்ப்பதற்கான கருணாகுழுவின் செயற்பாட்டுக்கு அரசபடைகள் உதவுகின்றன' எனப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். இதனைச் சகித்துக்கொள்ள முடியாத மகிந்தவின் அரசாங்கம், அலன்றொக் தனது தாய்நாடான கனடாவில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஒருவர் எனக்குற்றஞ்சாட்டியது. சிறிலங்காப் பாதுகாப்பமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் இக்குற்றச்சாட்டு இன்றுள்ளது. அடுத்து அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் குற்றச்சாட்டு விவகாரம். இலங்கைத்தீவில் அதிகரித்துவரும் மனித உரிமைமீறல்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்த கருத்தைச் சகித்துக் கொள்ளாத மகிந்த தனது அண்மைய மாலைதீவு விஜயத்தின்போது, அங்குள்ள சிறிலங்கர்களின் மத்தியில் உரையாற்றுகையில் 'ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்தை மட்டுமே குற்றஞ்சாட்டுகிறது. புலிகள் மனிதஉரிமைகளை மீறுவது குறித்து அது அக்கறையாகக் காட்டவில்லை' எனச் சீறியுள்ளார். ஆக, தனக்கெதிரான அனைத்து விடயங்களையும் ஒரே பானையில் இட்டு ஒரே அடுப்பிலேயே அவித்துவிடுகிறது சிறிலங்கா. அது புலி அல்லது பயங்கரவாதம் அதற்கான ஆதரவு என்பதே. இப்போது தென்னிலங்கையின் மக்களையும் அரசியல்வாதிகளையும் சர்வதேச சமூகத்தையும் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்கத் தமிழ்மக்கள் விரும்புகின்றனர். நேற்றுவரை தனது சகாவாக இருந்த ஒருவரும் சக்தி மிகுந்த அரசியல்வாதியுமான மங்கள சமரவீரவின் மீதே இவ்வளவு இலகுவாகப் புலிச்சாயம் பூசும் அரசு, தமிழ்மக்கள் மீது, சாதாரணத்தமிழ்மக்கள் மீது எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை இப்போது உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பவை எவ்வளவு பயங்கரமானவை என்பதையும், அவற்றை வைத்துக்கொண்டு அரசு என்ன ஆட்டமெல்லாம் போடமுடியும்? தனக்கு உவப்பில்லாத விடயங்களை வேறுக்க எவ்வளவு தூரம் துஸ்பிரயோகம் செய்யலாம் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? ஒரு மிகச்சிறிய உதாரணமாக இந்த இரு சட்டங்களும் பல்லாயிரம் படுகொலைகளுக்கும் நிலையில் கொழும்பில் நடக்கும் கடத்தல்களைத் தடுக்கமுடியவில்லையாயின், அவற்றையா செய்கிறார்கள் என்பது புரியாத புதிர. சர்வதேச சமூகம் தருந்த ஆதாரங்களுடனும் வெளியிடும் கருத்துக்களையே தூக்கியெறிபவர்கள், சிறுபான்மைத் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிகொடுப்பார்களா. ■

> “பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பவை எவ்வளவு பயங்கரமானவை என்பதையும், அவற்றை வைத்துக்கொண்டு அரசு என்ன ஆட்டமெல்லாம் போடமுடியும்? தனக்கு உவப்பில்லாத விடயங்களை வேறுக்க எவ்வளவு தூரம் துஸ்பிரயோகம் செய்யலாம் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?”



ஓவியம்: வாசகன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





# இலங்கையின் போர்ப் பாதீடு – 2007

# srilankan war budget 2007

க.பாலகிருஷ்ணன்
பொருளாதார ஆய்வாளர்
தமிழீழம்

முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்றபோது உலகப் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் உள்ளானது. உலகின் உற்பத்தி வீழ்ச்சி பொருளாதார மந்தம் எனப் பல பிரச்சனைகள் எதிர்நோக்கப்பட்டன. இதே நிலைக்கு சிங்களப் பேரினவாத அரசு இலங்கையை வழிநடத்திச் செல்லுகின்றது. சமாதானம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என சர்வதேசத்திற்கு முன் கூட நாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றது. மறுமுனையில் இராணுவ வழிமூலமே தீர்வு காணுதில் முழு நம்பிக்கை கொண்டு இயங்குகின்றது. 2007 ம் ஆண்டுக்கான போர் பாதீடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும் விட்டது. இதனூடாக 2007ல் பாரிய உற்பத்தி வீழ்ச்சி, பொருளாதார இழப்புக்கள், பாரிய மானிட துயரங்கள், மனித உயிரிழப்புக்கள், அளவிடமுடியாத பெறுமதி இழப்புக்கள் என்பவற்றை அறுவடையாக சிறீலங்கா பேரினவாத அரசு பெறவுள்ளது. அரசாங்கம்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யுத்தத்தில் ஈடுபடுவதற்கு தேவையான நிதியை வரவு செலவுத் திட்டத்திலிருந்தே பாதுகாப்புத் தேவைக்கு என பெருமளவு ஒதுக்கீடு செய்கின்றது. இவ்வாறு பெருந்தொகைப்பணம் ஒதுக்கீடு செய்யும்போது பல முக்கிய சமூக நலச்சேவைகள், முதலீட்டுச் செலவுகள் குறைக்கப்படுகின்றன. இந்நகைய அதிகரித்த பாதுகாப்புச் செலவுகள், புதிதாக பொருட்கள், சேவைகள் எதனையும் உருவாக்கப்போவதில்லை; மாறாக பொருளாதார உயிர் அழிவுகளை ஏற்படுத்தப் போகின்றது. யுத்தத்தின் மீதான நிதி ஒதுக்கீடு அதிகரித்துச் செல்கின்ற போது அச்செலவுகளைநாட்டு மக்கள் அனைவருமே தாங்கிக் கொள்ள வேண்டும் எவ்வாறெனில் அரசாங்கம் பாதுகாப்புச் செலவை ஈடு செய்வதற்காக பலவகையில் வருமானத்தை அதிகரிப்பதற்காக பொருட்கள் சேவைகள் மீது நேர் நேரில் வரியை அறவிடுகின்றது. 2007ம் ஆண்டிற்கு இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு செலவினத்திற்கு 13966 கோடி ரூபா (139660 மில்லியன் ரூபா) ஒதுக்கியுள்ளது. இது 2006ம் ஆண்டு பாதுகாப்பு செலவினத்தை விட 45வீதம் அதிகரிப்பாகும். இது 2007ம் ஆண்டிற்கான மொத்த அரசின் வருமானத்தில் 23.28 வீதமாகும் மொத்த அரசசெலவினத்தில் 16.72 வீதமாகும் 2007ம் ஆண்டிற்கான துண்டுவிழும் தொகை 23503.08 கோடி ரூபா (235038 மில்லியன்ரூபா) ஆகும். பாதீட்டுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை அரசு வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு நன்கொடைகளைப் பெறுவதிலேயே கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது. எனவே சர்வதேசத்திற்கு தான் 'சமாதானம் மூலமாக இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்போகிறேன்' என்ற மகிந்த சிந்தனையின் கோசத்துடன் 2007ல் உள்நாட்டில் தீவிர யுத்தம் முன்னெடுக்கப்படும் என்பதை இப்பாதீடு உணர்த்துகிறது. உள்நாட்டு தீவிரயுத்தத்தை மறைத்து சர்வதேசத்திற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என கூறுவதற்கு 2007ம் ஆண்டு சிங்கள அரச ஊடகங்கள் தீவிர முனைப்புக் காட்டுகின்றன.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்பு செலவின் பங்கு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உயர்வானதாக உள்ளது.

| | |
|---|---|
| ஜப்பான் | 1.0வீதம் |
| ஜேர்மன் | 1.5வீதம் |
| நோர்வே | 1.9வீதம் |
| பிரிட்டன் | 2.4வீதம் |
| பிரான்ஸ் | 2.5வீதம் |
| இந்தியா | 2.7 வீதம் |
| அமெரிக்கா | 3.3வீதம் |
| சீனா | 3.9வீதம் |
| இலங்கை | 4.3வீதம் |
| பாகிஸ்தான் | 4.4வீதம் |

உள்நாட்டு உற்பத்தியில் (G.D.p) பாதுகாப்பு செலவின் பங்கு சராசரியாக 2.6சதவீதமாக காணப்படுகின்றது. இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது இருக்கவேண்டிய இராணுவத்தின் எண்ணிக்கை, சராசரியாக 64,485பேர் இருக்கவேண்டும். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிர யுத்தத்தை முன்னெடுப்பதற்காக அச்சமநிலை மாற்றமடைந்து 151000 ற்கு மேற்பட்ட இராணுவம் உள்ளனர்.

ஒரு இராணுவ வீரருக்கான மக்களின் எண்ணிக்கை (சராசரியாக)

| | |
|---|---|
| இந்தியா | 820 |
| சீனா | 580 |
| ஜப்பான் | 533 |
| ஜேர்மன் | 290 |
| பாகிஸ்தான் | 251 |
| பிரான்ஸ் | 236 |
| அமெரிக்கா | 203 |
| இலங்கை | 130 |
| யாழ்குடாநாடு | 15 |

"தமிழ் மக்கள் சிறீலங்கா அரசின் தீவிர யுத்தத்தை எதிர்கொண்டு வெற்றிகளை ஈட்டி சுதந்திரமான அரசியல், பொருளாதார விடுதலையைப் பெறுவதே ஒரே வழி என மகிந்த அரசின் இலங்கையின் போர்ப் பாதீடு 2007 உணர்த்திநிற்கிறது"

பொதுவாக உலகத்தில் சராசரியாக 305 மக்களுக்கு 01 இராணுவ வீரன் என்ற சமநிலை காணப்படுகின்றது ஆனால் சிறீலங்காவில் 130 மக்களிற்கு யாழ் குடாநாட்டில் 15 மக்களுக்கும் ஒரு இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது ஒரு நபருக்கான ஒருவருட சராசரி பாதுகாப்புச் செலவு

இந்தியா - 1300 ரூபா
பாகிஸ்தான் - 1770 ரூபா
சீனா - 3708 ரூபா
இலங்கை - 7100 ரூபா

எனவே மகிந்த அரசு தயாரித்துள்ள 2007ற்கான பாதீடு இராணுவத்திற்கு தேவையான ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து அதனைப் பயன்படுத்துகின்ற போது அது சொத்துக்களை அழிவடையவே செய்யும். அதாவது மெய்ச்சொத்துக்கள் மற்றும் வளங்களை நாசப்படுத்தவும் மதிப்பிடப்பட முடியாத உயிரிழப்புக்களும் ஏற்படும். இதனூடாக இலங்கையில் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள்ளாகும். எனவே தமிழ் மக்கள் சிறீலங்கா அரசின் தீவிர யுத்தத்தை எதிர்கொண்டு வெற்றிகளை ஈட்டி சுதந்திரமான அரசியல், பொருளாதார விடுதலையைப் பெறுவதே ஒரே வழி என மகிந்த அரசின் இலங்கையின் போர்ப் பாதீடு 2007 உணர்த்திநிற்கிறது.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





# 1961 பெப்ரவரி சாத்வீகப் போராட்டம்

■ பொன் பூலோகசிங்கம்

1960ம் ஆண்டு ஆடி மாதம் இடம் பெற்ற இலங்கையின் 5வது பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோற்கடிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் 75 ஆசனங்களைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமந்திரியாக தெரிவு பெற்றார். இவரது கணவரான காலஞ்சென்ற பண்டாரநாயக்காவுடன் தந்தை செல்வா 1957ல் செய்து கொண்ட உடன்பாட்டிற்கு முரண்படும் வகையில் சிங்கள மொழியைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடலானார். பிரதமராக நியமிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா போதிய அரசியல் அனுபவமற்றவர். ஆனா தமது உறவினரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் முடிவுகளுக்கு ஒப்பம் போடும் ஒருவராகவும் எத்தகைய முடிவுகளுக்கும் மறுப்புத் தெரிவிக்காதவராகவுமே இருந்தார். திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் சிங்கள மொழியை அரச கரும மொழி என்ற அடிப்படையில் இலங்கைத் தீவு முழுவதும் வெளியிட்டார். இதன் முதற்கட்டமாக சிங்கள சிறீ எழுத்துப் பொறிக்கப்பட்ட ஊர்திகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது. இதற்கு இலங்கை தமிழரசுக்கட்சி தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டது இதற்கு எதிராக வெகுஜன எழுச்சிப் போராட்டங்களை நடத்தப்போவதாகவும் அறிவித்தது. அதன் படி செயற்பாட்டுத்திட்டங்களும் வகுக்கப்பட்டன. நீதிமன்ற மொழி சிங்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





கள மொழி. ஒருபுறத்தே ரீபிக்கல் டயஸ் பண்டாரநாயக்கா உத்தியோக மொழி அறிவிப்புச்செய்ய மறுபுறம் அப்போதைய நீதியமைச்சர் சி.பெர்னாண்டோ நீதிமன்ற மொழி மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பித்தார் இம் மசோதாவில் இலங்கைத் தீவு முழுமைக்கும் நீதிமன்ற மொழியாக சிங்கள மொழி இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. 1960ம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதிவாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நீதி மன்ற மொழி மசோதா 30.11.1960 அன்று பாராளுமன்றத்தில் முழு நாளும் விவாதிக்கப்பட்டது. வடக்கிலும் - கிழக்கிலும் தமிழ் மொழியும் நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என இலங்கைத்தமிழரசுக் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள் யாவும் பேரினவாதிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டன. எத்தனை தியாகம் வேண்டும். திருமதி சிறிமாவின் அரசின் முடிவைக்கண்டித்து 31.12.1960 அன்று ஒரு அறிக்கையைத் தந்தை செல்வா விடுத்தார். அந்த அறிக்கையில் தமிழினை ஒழிப்பதற்கு எதிராக தமிழ்மக்கள் தமது பலமான எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும் என்றும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எத்தகைய துன்பங்களை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிவரினும் அவற்றை எதிர்கொள்ள மிகப்பெரிய தியாகங்களைச் செய்யத்தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டார். மேலும் நீதிமன்ற மொழி திணிப்புக்கு எதிராகவும் பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தமிழ்பேசும் மக்களது எதிர்ப்பைக்காட்டு முகமாக 02.01.1961 அன்று தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கு எங்கும் ஹர்த்தால், கடையடைப்பு, பாடசாலை பகிஷ்கரிப்பு, அரச அலுவலகங்கள் மற்றும் தமிழ்ப் பிரதேச நீதிமன்றங்களில் பணிப்புறக்கணிப்பும் இடம்பெறும் என்றும் தந்தை செல்வா அறிவித்தார். இதன்படி அன்றைய குறிப்பிட்ட தினம் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு கடையடைப்பு ஹர்த்தால் என்பன பூரண வெற்றி பெற்றன. இவ்வெற்றி காரணமாக 21.01.1961ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏழாவது மாநில மாநாட்டுத் தீர்மானப்படி 1961 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வடக்குகிழக்கிலுள்ள கச்சேரிகள் அரச அலுவலகங்களின் வாசல்முன் மறியல் போராட்டமும் சத்தியாக்கிரகமும் செய்வதென்று முடிவு எடுக்கப்பட்டது.

சாத்வீகப்போராட்டமும் இராணுவ அடக்குமுறைகளும். 1961ம் ஆண்டு திட்டமிட்டபடி இலங்கைத் தமிழரசுக்கட்சியால் பெப்ரவரி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணம் பழைய கச்சேரி வாசலில் சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது பின்னர் படிப்படியாக தமிழர் தாயகம் எங்கும் விரிவாக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரிவாசலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவர் தந்தை செல்வநாயகம் தலைமைதாங்கினார். தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரமும் கலந்துகொண்டார். வல்வெட்டித்துறையிலிருந்து கைக்குழந்தைகளோடு தாய்மார்களும் பல பொதுமக்களும் கலந்து கொண்டனர். மாதர் அணிகள், இளைஞர் அணிகள், மாணவ அணிகள், தொழிலாளர்கள் ஊழியர்கள் துறைசார் உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மதகுருமார்கள் என எல்லாத்தரப்பினரும் தமது சொந்தக்கிராமங்களிலிருந்து ஊர்வலமாக வந்து கலந்துகொண்டனர். புங்குடுதீவு பெரியார் ஏரம்பமூர்த்தி மாஸ்டர், வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி ஐயா, உடுப்பிட்டி சிவசம்பு, கரவெட்டி தாமரைக்குளம் செல்லையா, அரியாலை கணபதிப்பிள்ளை மாஸ்டர், அத்தியடி சதாசிவம், உடுவில் முத்துலிங்கம், இணுவில் இராசையா மாஸ்டர், அளவெட்டி சிதி முருகன், கொக்குவில் அருணாசலம் என கிராமம் கிராமமாக தமிழ் உணர்வாளர்கள் மக்கள் மத்தியில் பரப்புரைசெய்ததோடு சத்தியாக்கிரகிகளையும் அழைத்து வந்து தாமும் கலந்துகொண்டனர். மக்கள் மத்தியில் தமிழ் உணர்வும் உரிமைப் போராட்டவேட்கையும் மேற்கிளம்பியது.

ஏனைய மாவட்டங்களின் நிலைமைகள். யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. மட்டக்களப்பு கச்சேரிவாசல் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் என்.எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மட்டு எம்.பி.இராசதுரை, அரியநாயகம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கேட்டபின்பு, தேவநாயகம் முதலானோர்களோடு பெரும் தொகையான சமயத்தலைவர்களும் சமூகத்தலைவர்களும் பங்குபற்றினார்கள். இதே போல திருகோணமலை கச்சேரிவாசலில் பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இராஜவரோதயம், மூதூர் முதல்வர் ஏகாம்பரம் முதலான தலைவர்கள் தலைமையில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் பெருமளவு எழுச்சியை ஏற்படுத்தியது. இதே போல மன்னார் கச்சேரி வாசலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு மன்னாரத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி.ஏ.அழகக்கோன் தலைமை தாங்கினார். அங்கு திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலனசபைத்தலைவரும் ஐ.தே.க பிரமுகருமான சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களும் மற்றும் பல சமூகத்தலைவர்களும் மதத்தலைவர்களும் பங்குபற்றினார்கள். இதே போல வவுனியாக் கச்சேரிவாசலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு அப்போதைய



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழரசு, காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் தா.சிவசிதம்பரம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் முன்னணித்தலைவர் சிவசுந்தரலிங்கம் அவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டார்கள். இப்படியாக எழுச்சியுடன் வடக்குக்கிழக்கு மாகாணம் எங்கும் இடம்பெற்ற இந்த வெகுஜன எழுச்சிப் போர். கிராமம் கிராமமாக நகரங்கள் தோறும் உரிமைப் போராட்ட உணர்வுகள் உத்வேகத்தன்மையது இதே வேளையில் அப்போதைய செனட்சபையில் உரையாற்றிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அரசாங்கம் கடந்த மூன்று மாதகாலமாக வடக்கு கிழக்கில் செயலற்றுப் போய்விட்டது என்றும் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளின் பார்வையில் இப்போராட்டம். 1961ம் ஆண்டு இடம்பெற்ற இந்த சாத்வீக வெகுஜன எழுச்சிப் போர்பற்றி விடுதலைப்புலிகள் தமது நூல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். '1961ம் ஆண்டில் தமிழ் அரசியல் அரங்கில் பிரவாகமெடுத்த சாத்வீகப்புரட்சி வெள்ளம் எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு மகத்தான வரலாற்று நிகழ்வாகும். சத்தியாக்கிரகமாக ஒத்துழையாமை இயக்கமாக வெடித்த அரசியல் கிளர்ச்சி, மாபெரும் தேசிய எழுச்சியாக உருவம் எடுத்தது. ஒன்றுபட்ட மக்களின் எதிர்ப்பு இயக்கமாக அது வடிவம்பெற்றது.' (ஆதாரம் 'சோசலிசத் தமிழீழம்' பக்கம் 06) தனியான தமிழ்த் தபால்சேவை இலங்கை அரசின் நிர்வாகச்சட்டங்களை மீறி நடத்தப்பட்ட சத்தியாகிரகப் போராட்டத்தின் பரிமாணங்கள் மேலும் விசாலிப்பெற வேண்டும் என விரும்பிய முன்னாள் ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் நாட்டுப்பற்றாளர் வி.நவரத்தினம் அவர்கள் இலங்கையின் தபாற் சட்டங்களை மீறி முத்திரையும் கடித உறைகளையும் தபால் அட்டைகளையும் வெளியிடும் ஒரு இயக்கத்தை நடைமுறைப்படுத்த ஆலோசனை வழங்கினார் தந்தை செல்வா அதனை ஏற்றுக் கொண்டார். தபால் மா அதிபராக செனட்டர் சுப்பிரமணியம் நடராசா என்பவர் நியமிக்கப்பட்டார். பல இடங்களுக்கும் தொண்டர்கள், தமிழ்த்தபால் முத்திரை ஒட்டப்பட்ட தபால்களை விநியோகம் செய்தனர். அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எம். ஸ்ரீகாந்தாவுக்கு முதல் தபால் உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. இப்படியாக இந்த சட்டமறுப்பு போராட்டம் மேலும் மேலும் விரிவாக்கப்பட்ட நிலை கட்டுக் கடங்காமல் போவதையும் அடக்கு முறைகளை மக்கள் உடைத்துக் கொண்டு வளர்வதை, ஆர்ப்பாட்டம் என கடுமு வதையும் அவதானித்த சிறிமாவோ அம்மையாரும் அவரது ஆலோசகரும் அமைச்சருமான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் முப்படைகளின் தளபதிகளையும் அழைத்து மாநாடு கூட்டினார்கள். இம்மகாநாட்டின் முடிவில் நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதென்றும் யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது என்றும் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இராணுவமயமானது தமிழர் தாயகம். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தை நசுக்குவதற்காக யாழ்ப்பாண மாவட்ட கட்டளை அதிகாரியாக நியமனம் பெற்ற கேணல் ரிச்சட் உடுகம தலைமையில் ஒரு படையணி அங்கு அனுப்பிவைக்கப்பட்டது. மட்டக்களப்புக்கு இராணுவ அதிகாரியான லெப்.கேணல் கிராமநாயக்காவை அனுப்பிவைத்து. திருகோணமலைக்கு இராணுவ அதிகாரி லெப்.கேணல் எல்.என்.விக்கிரமசூரிய தலைமையில் ஒரு இராணுவப்படை அனுப்பப்பட்டது. மன்னார் மாவட்டத்திற்கு இராணுவ மேஜர் பீ.எஸ்.பீ.சாமி தலைமையில் ஒரு படை அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை 17.04.1961 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அப்போதைய இலங்கையின் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் விஜயகோன் யாழ்ப்பாணத்தில் இருந்த சகல படைகளையும் தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவந்தார். இதன்படி தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கிலுள்ள சகல தமிழ் மாவட்டங்களிலும் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவ இரும்புப்பிடிக்குள் வைக்கப்பட்டார்கள். தமிழ்த் தலைவர்கள் யாவரும் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்கள். இவ்வாறாகத் தமிழ்பேசும்மக்களது நியாயமான கோரிக்கைகளையும் இராணுவரீதியாக ஒடுக்கியதோடு இராணுவத் தலைமைகளிடம் சிவில் நிர்வாகமும் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய காலம் தொடக்கம் இன்றைவரை கொடூரமான இராணுவஆட்சி இன்னும் தொடர்கிறது தமிழ் மக்களது பிறப்புரிமைகள் சுதந்திரமான உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு இராணுவ சப்பாத்துக்களின் கீழ் மிதிபடும் அவலநிலையை பேரினவாதம் விரிவாக்கி விட்டுள்ளது. இதற்கு எதிராக மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்படைந்து எழுந்து நின்றது ■

**அன்றைய காலம் தொடக்கம் இன்றைவரை கொடூரமான இராணுவஆட்சி இன்றும் தொடர்கிறது தமிழ் மக்களது பிறப்புரிமைகள் சுதந்திரமான உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு இராணுவ சப்பாத்துக்களின் கீழ் மிதிபடும் அவலநிலையை பேரினவாதம் விரிவாக்கி விட்டுள்ளது இதற்கு எதிராக மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்படைந்து எழுந்து நின்றது**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# குருதியிலறையப்பட்ட தீவுகள் | ஒரு மாபாடியம்

க.வில்வரத்தினம்


## சங்கிராந்தித் தீவுகள்

பசளுக்கு விட்ட கெலித்து பாதாளத்தில்
பாய்கின்றான் பரமன்
அவர்தான் அறிவார் இந்த உண்மையை
விசித்திரப் பெருங்கடல்
துகளின் நடுவில் நிலத்தோடு நிலம் நழுவிக் கிடக்கும்
தீவுகளின் ஆணிவேர் தீபகற்பத்திற்குக் கைகட்டும்
தீவுக் கூட்டங்களை எண்டங்களை அழைக்கிடும்.

இங்கிருந்து திசைபெயர்ந்தும் எல்லாரும் எல்லாரும்
ஒன்றுபட்டே இணைகின்றோம்
கிழக்கு முதல் மேற்கு வரை
துருவம் முதல் துருவம் வரை
கணப் பொழுதில் மாறுகின்ற மனுடத்தின்
உணர்விலா ஒப்பிலனையை உணர்வுந்து
காண்கின்றோம்.

நிலத்தின் தங்கக்கோடாம் திசைகாட்டித்துணைகொண்டு
தொல்புரப் பயணத்தின் சுவடுகளையல்லாமல்
வேறென்ன நம்மால் கண்டிட முடியும்! தீவும் நானும்
நானும் பிறரும் எதுவும் அறிந்தவர் இல்லையெனினும்
எல்லாம் அறிந்துவோம் என்றே எண்ணிலே பிறவிப்
பெருங்கடல் தன்னில் நானும் வாழ்க்கையும் சாவுக்கும்
இடையில் பிரிந்து மர்மமக்கர்ப்பத்தில் பயணம் செய்கின்றோம்.
பொய்மை மனத்துப் போலிக் காட்சிகள் மலிந்த வையத்தின்
ஞமிய விந்தைதான் அற்புத மாக்கிடும் நம் அதிபாவைதனை

([illegible] எழுதிய சங்கிராந்தித் தீவுகள் என்ற கவிதை (1983)
[illegible]
நன்றி - [illegible] இதழ் - [illegible] 1985)



## தொன்மக்காதை

தீவொன்றில் நானிருந்தேன்
என்றொரு தீவிருந்தது
தீவிருந்த என்னுள் நானிருந்தேன்
ஒரு குகை வாழ் மனிதனாக.
குகை வாழ் மனிதனுள் இருந்தது
ஒரு குகைத் தீவு
குகைத் தீவின் மர்மத் தீவினுள்
நானிருந்தேன்
என்னுள் இன்றொரு புதிர்த்தீவு
புதிர்த் தீவுள் மர்மம் குடியிருந்தது
மர்மத்துள் ஒரு புதிர்த் தீவு
புதிர்த் தீவைத் தோண்டிப்போக வொரு பாதாளத்தீவு
பாதாளத் தீவுள் புகுந்தால் அங்கொரு
நரகம் குடியிருந்தது
நரக தீவு

தீவொன்றில் நான் வசித்தேன்
என்னுள் தீவு வசிக்கிறது
அந்தத் தீவின் வாசலைத் திறந்தால்
இன்னொரு தீவு : அதனுள்ளும் நான்
நானுள் இன்னொரு தீவு
தீவுள் இன்றுமொரு நான்
என்னுள் தீவு, தீவுள் நானுமாய்
பின்னிப் பின்னி குகையின் வாசலில் மூடிய
சிலந்தித் திரையை விலக்கிப் போனால்
தீவுகளின் மர்மம் மர்மத் தீவு.

* * * * *





'கடலம்மா நீ மடி
எனந்தத் தீவுகளை அநாதரவாய்
தனியேவிட்டாய்?

கடலம்மா கவிதை - நிமந்தன.

* * * * *

தனித்து விடப்பட்ட தீவுகள் ஒருவகைச் சிறைச்சாலைகள்
இயற்கையின் கொடுங்கைகள் இரக்கமின்றித் துண்டிக்க
நீராய் சிறைபிடிக்கும் தீவுகள்
உப்புக் கரிக்கின்ற தீவுகள்.

கங்கையின் மௌனத்து நிலையை கடலலைகளிடம்
சொல்லிப்பருகின்ற சோகச் சிறையிருப்பின் கொடுமையை
தீவுகளின் மக்கள் தான் அறிவர்.
சிறையிருத்தலின் தனிமையை, தனிமையின் வெந்துயரை
சிறைக்கைதிகளே அறிவது போல்.

யாருமே இலகுவில் தப்பிச் செல்ல முடியாத
சிறைச்சாலைகளாய்
பல தீவுகளிலிருந்தமைக்கு வரலாற்றில் சான்றுகள் உண்டு.
நெப்போலியன் சிறையிருந்த எல்பா, ஹெலினா தீவுகள்
வெள்ளையரால் கூலிப்படைகளாய் கொண்டு செல்லப்பட்ட
இந்தியத்தமிழர் 'கரும்புத் தோட்டத்திலே கால்களும்,
மகளும்
நொந்துவிழும்படி வருந்துகின்றார்' பிஜித்தீவு, மொரிஷியஸ் தீவு,
தேயிலைச் செடிகளுக்கும், ரப்பர் மரங்களிற்கும் உரமாகி
இந்தியத் தமிழ் தொழிலாளர் தம் வாழ்வழிந்த இலங்கைத் தீவு,
இந்தியச் சுதந்திரப் போராளிகளின் கடூழியச் சிறைவாசமும்
கொலைபடு தலைகளும் இருந்தது மன்றி
சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தக்காரம் நாடு கடத்தப்பட்ட நமது
மலையகத்தமிழரை இரத்த உறவுகளோடு ஒன்றவிடாமல்
இந்திய அரசால் தூர்த்தி விடப்பட்ட அந்தமான் தீவு,
ஜார் மன்னனாலும், ஸ்டாலினாலும் பழி தீர்க்கப்பட்டவராய்
மன்னிறந்த புரட்சியாளர்க்கும் இலட்சக்கணக்கான புரை
விவசாயிகளுக்கும் ஒரு வகை 'மரண சாசனத்தீவாய்'
மாற்றப்பட்ட
சைபீரியக் கொடும் பனிப்பாலை வெளி எல்லாமும்
மனிதனையும், மனித உரிமைகளையும், உணர்வுகளையும்
உயிரோடு வேட்டையாடித் தீர்த்த
குரூட்டுத் தீவுகள் தான் கண்ணற்ற தீவுகள்.
காட்டுக்கணங்களின் வேட்டைப் புகலிடப் போய்விட்ட
குரூட்டுத் தீவுகளே
கைவிடப்பட்ட மனிதர்களின் ஓலங்களால் நிரம்பியுள்ள
கல்லறைத் தீவுகளே, உங்களுக்கெனது இரங்கல்கள்

அழுகொண்டிருக்கும் தீவுகளை தத்தெடுத்துப் பேணாமல்
அடிமைத் தீவுகளாய் மாற்றிய ஆட்சியாளரே
உங்களுக்கு ஐயோ!

பலவுப்பட்ட தீவுகளினைக் குறையிட தங்கவிட்ட
கடந்த கொள்ளையர் போல்
ஆட்சிக்கு வேலிபறைந்த அந்நியமாகிவிட்டிருப்போரே
உங்களுக்கு ஐயோ!



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பாலங்களின் இறங்குதுறைகளாய் தீட்டுப்படுத்தப்பட்ட
எனது அம்பான தீவுகள் வாசல்களே, காத்திருங்கள்
நல்லோர்கள் கால் பதிக்கின்ற நாள் வரும்

[2]

எங்கும் அலைகள் எறியும் கடல் நடுவே
குந்தியிருக்கும் றொபின்சன் குருசோ போல்
பேரறியா நச்சுப் பிரண்டை விளைகின்ற
ஓர் தீவில் வந்தே ஒதுங்கிக் கிடக்கின்றேன்

மதுப்பிரி கவிதையிலிருந்து - மு.பொ.

* * * * *

ஆதித் தனிமைபெறும் என் தீவுக்குள் அகப்பட்டு
எனக்காகவே ஆக்கப்பட்ட தோணி
என் கரைகளை வந்தடையும் காலம் வரை
நான் காத்துக் கிடந்தேன்.

'ஆதியிலே தனிமையிருந்தது' கவிதை வரிகள்
வாசுதேவன் - பாரிஸ்.

* * * * *

யாழ்ப்பாணத்தின் தீவுகள் இன்று நீரால் மட்டுமல்ல
முட்கம்பிவேலிகளினாலான சூழ்நாமைக்குள்ளும்
சிறையிருக்கின்றன.
சிறைக்குள் ஒரு சிறை!
படை முகாம்களாலும், காப்பரண்களாலும்,
முட்கம்பிவேலிகளாலும்
சிறைப் படுத்தப்பட்ட தீவுகள்
பாழின் தொடுதாம்புகள் போல்
தோல் உறவை மீட்டியிருந்த தீவுகள்
இன்றோ முட்கம்பிவேலிகளின் பிடிக்குள்
குருதி சிந்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து பண்ணைப் பாலம் ஊடாகப்
பயணிக்கும் போதே
பேரரசன் ஒருவனின் கோடவாய் வழியே
நுழைவது போலிருக்கும் பண்ணை.
பாலத்தின் இரு கரையும் அரைப்பட்ட முட்கம்பிகளின் வரிசை
பல்லினை உறுத்தும்
இடையிடை இராணுவ விறைப் பேறிய காவலரண்கள்
துப்பாக்கி முனைகளாய் துளைத்தெடுக்கும் இராணுவ விழிகள்
'பழ' 'இறங்கு' 'ஐ.சி.யை எடு' 'பதிக்கவிடு' எனச்
சோதனையிடும் இறங்கு துறை தோறும் முட்பாயும்!
வீடுபோய் சேரும் வரை முட்பாய்தலின் ரணங்கள்
வலியெடுக்கும்.

வீடென்பதுவும் முற்றுகையின் உட்புறச் சுவர்கள் போல் தான்



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வீடுகள், வீதிகள், மனிதர்கள், மனங்கள் யாவுமே
கம்பியம்பலை! சம்பீரம் குன்றிப்பலையாய்
முற்றுகையின் உட்குலைக்கிருந்து மூச்செறிபலைதான்.
முற்றுகையிடப்பட்ட தீவுகளின் உள்ளிருந்து பெருமூச்செறிய
நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளவர்களே உங்களுக்கெனது
இரங்குதல்கள்
வெட்டுண்ட சிறகுகளின் சின்ன நோக்காடுகளையும்
வெளியிட முடியாத உங்களின் வெந்துயரம் எனது
இரத்த கசிந்து நரம்புகளில் மெலிதூர்ந்து
விசும்புதல் கேட்கின்றன
வீதிகளில் மெதுவாய் நடந்து செல்கிறீர்கள்
தோள் பட்டைகளில் வெறுமனே தொங்கிக் கொண்டிருக்கும்
கைகளை வெட்டிக்கடலிலே வீசினால் எப்படியிருக்கும்
வெட்டியெறியப்பட்ட, கைகளைப் போல்தான் கடலிடை
விறைத்தகட்டைகளாய் மிதக்கின்றன எங்கள் தீவுகளும்
துடுப்பிழந்து 'மோதுண்டு கல்லில் ஓடமாய் ஓடமாகி
ஓரம் கிடக்கின்ற' ஓடங்கள் போல
ஒதுங்கிக் கிடக்கின்ற தீவுகள்.

ஒதுங்கிக் கிடக்கின்ற இத்தீவுகளில் யாரும் கொண்டுபோய்
சிறைவைக்கப்படவில்லை
சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் - தீவுகளின் சொந்தமக்கள்
முற்றுகையிடப்பட்டிருப்பவை அவர்களின் சுதந்திர மூச்சுகள்
பாவம் அந்தத் தீவுகளின் மக்கள்! சிலுவை சுமக்கின்ற மக்கள்
குருதியில்வரையப்பட்டுள்ள சிலுவைத் தீவுகளின் மக்களே
உங்களுக்காக இறைவனிடம் எனது இரங்கல் விண்ணப்பம்
'இறைவா இறைவா ஏன் இவர்களைக் கைவிட்டாய்'

3.

'குமுதினி ஏன் பிந்தி வந்தாள்'


கடைசிக் கவிதையின் முதல் வரிகள் - [illegible]

* * * * *





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கடலம்மா என்னும் மடியினால் சூழப்பட்ட தீவுகளில்
நெடுந்தீவு ஒருநெடிய தீவு மட்டுமல்ல
யாழ்ப்பாணத்திலிருந்தும், ஏனைய தீவுகளிலிருந்தும்
நெடுந்தொலைவிலுள்ள தீவும்தான்.
நெடுக்கும் பருத்த பலமுள்ள மனிதர் வாழுகின்ற தீவும் கூட
ஆனாலும் பாவம் அந்த மக்கள் தங்களின் பயணவழியாக
ஏழாற்றுப் பிரிவின் ஆழ நீரோட்டம் ஊடறுக்கும்
கடல் வெளியையே கொண்டிருந்தார்கள்.
குமுதினி என்றொரு பெரிய படகு அவர்களை ஏற்றிவரும்:
போகும்
புங்குடுதீவின் குறிகாட்டுவான் அதன் இறங்கு துறை.
அது முதலாம் ஈழப் போர்க்காலம்
ஈழத்தின் கடற்போர் வீரர் உருவாகாத காலம் என்பதால் எங்கள்
கடல் சிறீலங்கா கடற்படையினர் வசமே இருந்தது
காரை நகர்க் கடற் படை தளத்தின் பெரிய கப்பல்களும்
காவற் படகுகளும் இரைச்சலிட்டபடி கடலை உழுது திரிய
அவற்றின் இராட்சத ஊடுருவல்களால் புரந்தள்ளப்படும்
அலைகள்
இறங்கு துறையில் மோதி எழுப்பும் ஓசைகளில்
எப்போதோ நிகழப் போகும் அவலம் ஒலித்திருத்தல் கூடும்
யார் அதனைக் கூர்ந்து கேட்டோம்.

ஆனால் அன்றைக்கு குறிகாட்டுவான் துறையில்
ஒரு பரபரப்பு கரை மோதும் அலையாகத் தொற்றிக்
கொண்டது.
தொலை வெளிக்கடற் பரப்பில் இன்னமும் குமுதினி
வருவதற்கான
அடையாளம் இல்லை நெடுநேரத்தின் பின்
நெற்றியில் கையுயர்த்திப் பார்த்திருந்த பயணிகளின்
பார்வை விளிம்பில் புள்ளிக் கறைபோன்று புலனாகி நிற்கிறது.
பிறகு கறைப்புள்ளி பெரிதாய் விரிந்து
பெரும் பாடிறைக்கும் ஒரு பிள்ளைத் தாய்ச்சியைப் போல்
குமுதினி அலைகளின் நடுவே தள்ளாடி வருவது தெரிகிறது.
குருதிக் கறையோடு கடல் நடுவே ஒரு படுகொலைக்களம்
மிதந்து கொண்டிருக்குமென யாரறிவார்
ஆனால் ஏதோ விபரீதமென்று அறைந்து சொல்கிறது
உயிர்நாளங்களின் துடித் தருணத்திலே
படகின் முன் அணியத்தில் இரத்தக் கறை தோய்ந்த
ஆடை போன்று காற்றில் அசைவது கண்டார்
பரபரப்போடு படகுகள் விரைந்தன, இழுத்துவரப்பட்ட
குமுதினி கரையில் நங்கூரமிட்டதும் குருதியுறைந்தான் கதை
கொலைபடு காதையை.
துறையினில் இறங்கும் மீட்புப் படகுகளாய் தீவில்
நிலை கொண்டிருந்த பல இயக்கத்தவரும், ஏனைய மக்களும்
இணை நின்றிப் பலரின் தோள்களில் தூக்கிக் கரைசேர்க்கில்
தோள்வழி பெருகி சொரிந்த குருதிவெள்ளம்
வாளினால் வெட்டுண்டோரும் துவக்கின் கத்தி முனையினால்
குத்துண்டோரும் கொப்பூழில் சின்னக் குருதிப் பூப்பூத்தபடி
சென்றிருந்த பட்ட வழுவையும் ஏற்றப்படுகிறார்
வாகனங்களில்!
பல்லைக் கடித்தபடி இயங்கினாலும் கண்களில் பாய்கின்ற
கண்ணீரும், சம்பவமாய் இளைஞரும், மக்களும்.

புங்குடுதீவு மருத்துவ மனை நிறைந்தது பிணங்களால்
காயம் பட்ட காயங்களால் ஊனம் பட்டு மனதுழுன்றோரால்
தீவெங்கும் ஒரு பெருந்துயரப் புயலெழுந்து ஊளையிட்டது
திரிந்தது: வேறு வேறு திசைகளிலும் விழிகள் சொரிந்தது.
ஒரேசமயத்தில், பலப் பல பாரவண்டிகளில், பலப்பலவாய்
பிணப் பாரங்கள் நாம் கண்டது இதுவே முதல் முறை.
துறைமுகத்தில் தொற்றிய விறைப்பு எல்லா முகங்களிலும்
தொக்கிற்று.
நெஞ்சில் நெடுநாட்களாய் நங்கூரமிட்டுக் கிடக்கிறது
மாபெரும் படகுத் துயரம் தொடர்ந்தும்
தீவின் பல கரைகளிலும் அலைகள்
பிணமுருட்டுவதாய் சொல்வார்கள்.

பிணமுருட்டுதல் இலங்கைத்தீவில் ஒரு பழிவாங்கும்
கண்கெட்ட சுவாரசியமாயிற்று.
அநுராதபுரத்தில் நிகழ்ந்த சிங்களமக்களின் மீதான
படுகொலைகளுக்கு பழிவாங்கலாம் இது.
மாறி மாறிப் பழிவாங்குதல் ஏதும் தொடர்கதைதான்
வரலாறு அதுவுமெனில்
கன்றுகுத்தித் தான் வாங்கும் பசலாற்றுக் குருட்டுத் தனம்
தானே
கேள்விகள்?
நெடுந்தீவுப் படகுப் படுகொலையோடு நின்றா போயிற்று
இக்குருட்டுத்தனம்?
மறுபடியும் மண்டைதீவுப் படுகொலை
அகதிப் படகுப் படுகொலைகள்.
ஆனையிறவில், கிளாலியில் பயணிப் படகுப் படுகொலைகள்
இலங்கைத் தீவின் எல்லாக் கரைகளிலும் வெளிச்சமிடுகள்
இருண்டு போயின.
இருட்டுக்குள் பிணமுருட்டி விளையாடுகிறது குருட்டுக்கடல்
கடல் நடுவே திசையறியாத ஒரு குருட்டுப் படகைப் போல்
தத்தளிக்கிறது இலங்கைத் தீவு!

4.

'படகேறி வந்தோமையா பாலைத் தீவனே - எங்கள்
பயணத்தைக் காத்தருள்வாய் பாலைத் தீவனே'

- பாலைதீவு அந்தோனியார் பக்திப் பாடல்

* * * * *

தீவுகளின் கடல் வெளியில்
மீன் பிடிக்கச் செல்லுவோர் தம்மைக் காத்தருளுமாறு
கடலுளை வேண்டிக் கொள்வார்
ஆனால் தீவுகளில் உருவம் ஒன்றை ஆதர்சமாக நிறுவியிருப்பர்
காலப் போக்கில் அது குடிகைக் கோயிலாகும்:
பாலை தீவில் அப்படியொரு அந்தோனியார் கோயிலுண்டு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தொழில் புரியப் போகையிலே காலநிலை மாறுபட்டால் மீனவர்
கடலிலே தங்கிக் கொள்வதுண்டு
மனைவி தீவாளே சகத்துருவென்று வேண்டுவர்
வேண்டுதல் என்பது ஒரு நேர்த்தியாக இருக்கும்.
சூழ்ந்த தீவில் தனியாட்சி செய்யும் அந்தோனியாருக்கு
நேர்த்தியை
நிறைவேற்றும் நாளில் எல்லாரும் படகுகளில் வந்து கூடுவர்
மீனவர்கள் மட்டும் என்றில்லை எல்லா மதத்து மக்களிடத்தும்
பாலை தீவின் மீதான நம்பிக்கை பரம்பிருந்ததால்
அவர்களும் வருவதுண்டு.

சிறுதெய்வ மதப் பரம்பலுக்கு முன்னர்,
பிராமணியச் செல்வாக்கிற்குட்படாத
காவல் தெய்வங்கள் இவர்களைக் காத்தன.
இவை பெரும்பாலும் தாய்த் தெய்வங்களாகவே இருந்தன
கடல் நாச்சியம்மன் இதில் முக்கியமானவரு. கடல்வெளியாள்
கடலாட்சியம்மன் என்றும் கடலாச்சியம்மன் என்றும்
வழக்குண்டு.
மட்டக்களப்பில் கடல் நாச்சியம்மன் கோயிலொன்றிருந்தது.

'என்ர கடல் நாச்சியாரே' வெனக் கைதொழும் மீனவர்க்கு காகொடுப்பாள் இந்தக் கடலாட்சியம்மன். இலங்கையில் மட்டக்களப்பில் மட்டுந்தான் கடலாட்சியம்மன் கோயில் இருக்கிறது. தமிழ்நாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை. கடல் அம்மையென்று கடலைத் தாயாகக் காணும் மரபு மலையாளத்தில் உண்டு என்பதால் அங்கு கடல் நாச்சியாருக்கு கோயில் இருக்கலாம். கன்யா குமரியும் கடல் வெளியைக் கண்நோக்கி நிற்கும் காவல்தெய்வந்தான். யாழ்ப்பாணத்தின் கடலோரத்தின் தீவு முனைகளில் குடிகொண்ட கன்னிநாயகரும் கன்யாகுமரியின் அம்சமான கடல் வெளிக்காவலாளி தான்.
இந்தக் கடல் காவல் தெய்வங்களையும் கடல்பெருக்குகள் காவு கொண்டதையுமுண்டு. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மட்டக்களப்பு நாவலடியிலிருந்த கடலாட்சியம்மனும் காவு கொள்ளப்பட்டவள்தான். கடல் பெருகி வருதுகள் கரையோர மக்களுக்கு அதை முன்னறிவித்துவிட்டு இவள் உப்புப் படுகை கடலில் இறங்கிக் கரைந்து போனதுபோல் காணாமல் போய்விட்டாள். கடல்சார் வாழ்வின் உப்பாய்ந்த உவைகூற்று உருவகந்தான் இந்தக் கடலாட்சி அம்மன் என்பதைப் புரிந்துகொண்டால், எல்லா நிலத்தெய்வங்களுமே அந்தந்த நிலத்தின் வாழ்வின் சாராய் வுதுந்தவை என்பது புரியும். நிலத்தின் தன்மை தெய்வங்களிற்கும் உரைக்கும் போலும்.
வன்னி நிலத்தின் வற்றாப்பளையம்மன், மருதமும் நெய்தலும் இணைந்த இருநிலத்திணையின் வடிவம். வைகாசித்திங்களில், பொங்கும் முழுநிலாநாளின் பெரும் பொங்கல் நெஞ்சு மருத நிலத்தின் அறுவடைக்காலத்தினைப் படைத்தளிப்பது. நந்திக் கடல் நீரெடுத்து ஏற்றப்படும் உப்பு விளக்கு நெய்தல் நிலத்தின் உப்பில் விளைந்த வாழ்வின் ஒளிப்பேற்றுமை. கண்ணகை வற்றாப் பளையில் இருநிலத்திணையின் சாரமும் வடிவமாய் இருக்கிறாள். வன்னியிலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையின் சில பிரதேசங்களிலும், அவள் அம்மனாகத்தான் உள்ளாள்.
யாழ்ப்பாணத்தில் இவள் பெரும்பாலும் கடலோரப் பிரதேசங்களிலேதான் குடிகொண்டுள்ளமையால் இவள் நெய்தல் நிலத்தின் இயல்புடையவளாகவேதான் உள்ளாள்.
யாழ்ப்பாணத்தில் இவளுக்குக் கோயில் எடுத்தவர்கள் மீனவர்கள். கடலிலே பேழையிலே மிதந்து வந்தவளை, ஒருமாதிரியில் கீழே கொணர்ந்துவைக்க அவ்விடமே கண்ணகையின் பதிகொண்ட கோயாக மாறிய கதைகள் பலவுண்டு. அவ்விடங்கள் கடலோர பிரதேசங்களாயிருப்பதே மீனவர்கள் தான் கண்ணகைக்கு கோயில் செய்தனர் என்பதற்குச் சான்றாகிறது. தொப்கடக்கு மரபுகளுடன் கூடிய தெய்வவழி பாட்டுமுறைகள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உள்ளார்ந்தமேட்டமின் வடிவ வழிபாட்டு முறைகளே தான்.
பின்னாட்களில் சாதி பெருத்த வெள்ளாள சமூகம், ஒடுக்கப்பட்ட மக்களிற்கு சொந்தமான, தாய்த்தெய்வ வழிபாட்டிடங்களையும், வேலன் வழிபாட்டிற்குரிய இடங்களையும் தமது கலாசார வல்முறை ஆதிக்கத்துட் கொண்டு வந்தனர். ஒடுக்கப்பட்ட மக்கள் பூசாரிகளாக இருந்த இடத்தை பிராமணர் பிடுங்கிக் கொண்டனர். பின்னர் அவர்கள் வழிபட்ட தெய்வவடிவங்களாக்கி, சமஸ்கிருத மயப்படுத்தி பெருந்தெய்வங்களை, ஒடுக்கப்பட்டோர் தெய்வங்களை சிறுதெய்வங்களாக்கினர். கண்ணகைக்கும் நடந்த கதை இதுதான்.
கண்ணகையைச் செட்டிச்சி என்று வாய் கூசாமல், செட்டிச்சிக்கு ஒரு கோயிலா எனவும் கேட்ட தோடல்லாமல், சைவத்தின் மார்க்கத்தில் சிறுநெறிகளைச் செய்யைப் படுத்துவதாய்க்கூறி கண்ணகை கோயில்களை சமஸ்கிருதமயப்படுத்தி, பிராமணிய மரபுகளை நிறுவியது யாழ்ப்பாணம். கண்ணகையை வெளியேற்றியவையோடு, அவளை வழிபட்ட, சமூகங்களையும் வெளியில் விட்டனர். சாதிய கலாசாரத்தை யாழ்ப்பாணத்தில் மேலோங்கச் செய்தனர். அதைப்போடு கருத்தியலாகவும் மாற்றியமைத்தனர். கண்ணகைகுளித்தி, சிலம்புகூறல் எனும் நாட்டுப் புறப் பக்திமரபு நசிந்துபட்டது கந்தபுராணம், பெருநெறிக் கலாசாரமாகி, ஒடுக்கப்பட்ட மக்களை வெளியில் விட்டு உள்வாங்கப்பட்ட வெள்ளாள சமூகத்தின் செவிகளில் ஓதப்பட்டது.
சாதிய மேலாண்மை,
வெள்ளாள ஆதிக்கம்.
பிராமணிய கலாசாரம் மிக்கோங்க அவற்றின் கூட்டு கந்தபுராண கலாசாரமாயிற்று.
ஒடுக்கப்பட்டவர்களின் தெய்வங்கள் வெளியில் விடப்பட்டன
ஒடுக்கப்பட்டவரும் வெளியில் விடப்பட்டனர்
சாதிய மேலாண்மையின் சிறைப்படுதலுக்கிடமாயினர்
ஒடுக்குவோரின் முன்னிலையில் ஒடுக்கப்படுவோர் அமைதிப்படுத்தாயினர்.
சுதந்திரமான வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு
யாழ்ப்பாணத்தவராய் தீவின் மக்களும் கூட
சீண்டத்தகாதவர்களாய்
தீட்டுக்குரியவர்களாய் கருதப்பட்ட காலம் ஒன்றிருந்தது.
தீவார் என்று அவர்கள் யாழ்ப்பாணத்துப் பெருந்தலைகளால் இகழப்பட்டனர் இழித்துரைக்கப்பட்டனர். காலம் செல்ல தீவின் வாழ்வோரிலும் சாதி பெருத்த வெள்ளாளர் தலையெடுத்தனர். நாயன்மாரின் வந்தவைப் பண்டிதச் செருக்கர்களும், கடலோ



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நின்றனர். நாகப் பெருந்தலைவர்கள் கோவில் கட்டவும், பண்டிதச் செருக்கர்கள் கந்த புராணக் காவலர் ஆக்கினர். அடடே சிவனார் காக பெரும் பார்ப்பார் ஆயினர். இலங்கையின் அட்டிதல் தீவுகளிலும் சமஸ்கிருத வைதீகப் பண்பாடு காலூன்றியது; கண்ணகையின் கோவில் பெயர் மாற்றம் பெற்றது. சாதிய வேலி மரபுக்குள் தன்னை நிறுவிக் கொண்டது. ஒடுக்கப்பட்டோரின் உடனாகி நின்ற காவல் தெய்வங்களின் இடத்தை வெள்ளையர் பிடுங்கிக் கொண்டு உடனாகிய ஒலமின்றி ஒடுக்கப்பட்டவரின் உள்ளங்களில் ஒரு வெற்றிடம். அந்த வெற்றிடத்தை நிரப்புவதாக குழந்தை ஏசுவைக் மகவிலேந்திய புனித அந்தோனியார் வந்து புகுந்தார். தூக்கடல் தாண்டி தொழில் செய்யப்போகும் மீனவர் குழந்தையைப் போல் கையணைக்கும் ஒருவர் ஆகினார். கோவில் கூட அமைக்கத் தேவைப்படாது. ஒரு திரு உருவம் போதும்: இப்படித்தான் தீவுகளின் கடல்வெளியில் தொழில் செய்யும் மீனவர்க்கு ஆதாரமாய் சில ஆலயத்தீவுகள் இருந்தன. பாலை தீவு அவற்றுள் ஒன்று. அந்தப்படும் மீனவர்க்குரிய சிறிய புகலிடத்தில், அந்தோனியாரின் புகல் இடமும் ஆயிற்று. புகலிடத்திலும் ஒரு புகலிடமாக மக்களால் புனித அந்தோனியார் வந்து சேர்ந்தார். இந்தப்பாலை அண்மித்திருக்கும் கச்சதீவிலும் அந்தோனியார் குடிகொண்டது இப்படித்தான்: இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடைநின்ற புள்ளியாய் இருப்பதனால் இது இரு தரப்பு மக்களுக்கும் சந்திக்கும் புள்ளியாகி, பின்னர் வர்த்தகத் தீவாகி, அரசியல் சர்ச்சைக்குரிய தீவும் ஆயிற்று. பாலை தீவு மட்டும் மீனவர்க்கும், மற்றும் கத்தோலிக்க மதம் சார்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், கரையோர பகுதிகளின் (கரை) விளிம்பு நிலைக்குரிய ஒதுக்கப்பட்ட மனிதர்க்கும் ஒரு யாத்திரைத் தீவாக மாறியது.

படகு யாத்திரை போதும் என்பதே ஓர் இனிய அநுபவம்; அந்தக்கடல் பயணம் என்றால் ஆபத்துடன் கூடிய திகில் நிறைந்த அநுபவமும் தான்: பாலைத்தீவு யாத்திரை ஒரு நேர்த்தி வழிகாட்டியாய் வருவதற்கான யாத்திரை என்பதால் பாலை தீவானே பாலை தீவானே என்று பாலை தீவானைத் துணைக்கு அழைத்தபடி பயணம் தொடரும். புனித அந்தோனியார் கூட ஒரு படகுயாத்திரையின் போது ஆபத்து நிறைந்த கடலில், புயல் வீசிய போதில் இயேசுவைத் துணைக்கழைத்தபடிதானே போனார். புயலில் அகப்பட்ட படகு சிக்கித் தீவில் கரையொதுங்கியது.

அந்தோனியார் குடிகொண்ட பாலைதீவு யாத்திரை போலவே அந்தப் பாலைத்தீவானை அழைத்தபடி போவார்கள் பாலைத்தீவின் கரையை படகுகள் அண்மித்ததும் போதும் போது பாலை தீவானைக் கூவியழைக்கும் குரல்கள் நன்றிப் பெருக்கால் நனைந்திருக்கும்.

பாலைதீவின் பற்றைத் தரையைத் துப்பரவாக்கித் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்ற பக்தர்கள் எல்லாம் ஆயத்தமாகுவர். நேர்த்தி என்பது இங்கு ஒரு வித்தியாசமான அவியல் வேள்வி நிகழ்வாக இருக்கும். மூட்டைக் கணக்கில் அரிசி, சாமான்களைக் கொண்டு வந்திருப்பர். மீன், இறைச்சி வகையெல்லாம் கலந்த்சிச் சோறு சமைத்து படைத்து யாவரும் கூடி உண்ணும் அதுதான் வேள்வி இது. நேர்த்தி என்பது இங்கு கூடியிருந்து சாதி இன மத பேதம் தாண்டி உணவுண்டு, உணர்வுகள் சங்கமிக்கும் ஓர் பண்பாட்டு குதிர்ச்சியின் அழகு முதிர்ப்பதாதம் வளங்களின் நேர்த்தி, ஒதுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களிடத்தில் மட்டும் தான் இந்த உன்னத குதிர்ச்சியின் வடிவம் சாத்தியம்: போலித் தனங்கள் பொய்மை இல்லாத மெய்யழகு. இந்த நேர்த்தியில் இலசந்த தீவக மக்கள் பலரும் எங்கிருந்தாலும் பாலைதீவான் இருக்கும் கடல் வெளிநோக்கி 'என்ர பாலை தீவானே' என்று கைகூப்பித் தொழும் போதில் அதில் இருக்கு உயிர் நிறைந்த உணர்ச்சி பாவத்தை நாம் காணலாம். ஆனந்தத்தீவு ஓர் ஆன்மீக சுற்றுலாவாய்த் திகழ மக்களெல்லாம் முண்டியடித்துக்கூடிக் கைதொழுத ஓரிரு நாட்களுக்கு இருந்த உயிர்ப்பும், ஒத்திசைந்த வாழ்வின் வடிவும் நேர்த்தியும் இன்று காணாமல் போய் விட்டன.

கடல் பாதுகாப்பு வலயச் சட்டங்கள், கடலை உழுதுதிரிகின்ற கடற்படைக் காவற் படகுகள், மீனவர் படகும் படுகொலைகள் எல்லாமும் பாலை தீவுக்கான இனிய பயண அநுபவத்தை இல்லாமற் செய்துவிட படகு யாத்திரைகள் நின்று போயிற்று. பாவம் கோடி அற்புதமாகிய புனித அந்தோனியார் தன்னிடம் தேடிவரும் பக்த கோடிகள் யாரும் இல்லாததால் தன் காவல் கழுவும்

குழந்தை ஆவலையிடம் தன் குறைகளைச் சொல்பவராகினார். குற்றங்களிடம் தனது பழமை உபதேசங்களை வழங்குபவராகினார்.

ஆனாலும் பாலையின் தனிமை அந்தீவைச் சூழ்ந்திருந்தது. அதன் தனிமையும், துயரும் எல்லாத் தீவுகளிலும் பற்றிப் படர்ந்தது.

கடல் வெளி படகுகளின் பயணவழிச் சலனமற்று மௌனம் காத்தது: துயர் சூழ்ந்த மௌனம் காற்றிலும் தொற்றிக் கொண்டது:

மீனும், இறைச்சியும், சோறும் ஆக்கிப்புண்டு அமர்க்களப்படுத்திய

நேர்த்தித் திருவிழா காணாத தீவின் கரை தன்னில் காய் பதிக்கும் மனிதருக்காய்க் காத்துக் கிடக்கிறது. அந்தீடகயின் ஓரம் காத்திருக்கும் ஒரு பழிய மீனவனின் ஒவாட்டம் கொண்ட நிழல் வீழும் இருட்டின் நீர்ப்பரப்பில் தூங்கிக்கிடக்கிறது சாயத்துண்டும்.

புனித அந்தோனியாரே நீங்கள் அறிவீர்களா
அற்புதங்களிற்காகக் காத்திருந்த மக்கள் இப்போது
முதலாம் ஈழப்போரின் ஓடிவற்ற தொடர்ச்சியின் பலிபாடுகளால்
படகு அகதிப் பயணம் போய்க் கொண்டிருக்கிறார்கள்
இராமேஸ்வரத்திற்கு அண்மித்த, காம்புகையும் சேற்றுமணற்
தீவுகளில் அவர்கள் கைவிடப்படுவார்கள்
அவர்களுக்காக இரக்கப்படுவீர்களா.

[illegible]




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# நிகழ் காலம்

வீட்டுப்படலை திறந்து
ஒரு குதிப்போடு
அவன் வந்தான்
தலைகலைந்திருந்தது
சீராக்க நினைத்தேன்
உடையில் சிறு கிழிசல் இருந்தது
தைத்துக் கொடுக்க எண்ணினேன்
முகம்வியர்த்துக் களைத்திருந்தது
வயிற்றில் பசியின் சுவடு தெரிந்தது
நிரப்புவதற்காய்க்
குழையல் சோற்றுக் கவளம் இரண்டும்
கொதிக்கும் தேனீரும் கொடுத்தேன்
தையலூசியும் சீப்பும்
எடுத்துக் கொடுத்தேன்
தலைசீவினான்
உடைதைத்தான்
சோர்ந்திருந்த முகத்தைக்
குளிர் நீரால் அலம்பினான்
இது எத்தனையாவது வீடு
முப்பத்தி எட்டாவது
அவன் பதில் இலக்கடைந்த
வெற்றியிருந்தது
நம்பிக்கை இருந்தது
இளமை துளிர்த்த முகத்தில்
மீண்டும் உற்சாகம் பிறந்தது
போகும் போது
ஒரு பிள்ளையை என்னுடன் அனுப்பு என்றான்
அது முடியாது என்றேன்
என் பாசப் புராணங்களை
விரித்து விரித்துக் கூறினேன்
எதிர்காலக் கனவுகளை
இராகம் போட்டுக் கூறினேன்
எரிகின்றது தீவம்
சொந்தங்கள் தீயில்
மீட்க வேண்டும் உரிமையை
நீ தந்த சீப்பிலும்
பசியாற்றிய சோற்றுக்கவளத்திலும்
கிழிசல் தைத்த ஊசியிலும்
எல்லை வேலியே போர்த்து என்றான்
உன்னைப் போல ஒரு தாய்தான்
என்னையும் பெற்றெடுத்தாள்
அவளின் பிரிவு பொழிந்த
கடல் கடந்து தான்
நெருப்பாற்றைச் சேர்ந்தேன்
அதை நீந்தித்தான்
விடுதலைச் சிகரமேறுவேன்
கரம் கொடுக்க
உனதொரு பிள்ளையைத்தா!
இடையில் நான் விழுந்தால்
அவன் மேலே ஏறவேண்டும் என்றான்

தோள் பையில் இருந்த படபடக்கும் செங்கொடியை
எடுத்துக்காட்டினான்
குருதி படிந்த அதன் சிவப்பைப்பார்த்துப்
பிரமித்தேன்
எமது உதிரம் கலந்து சிவப்பாகினாலும்
இதை நிச்சயம் உச்சியில்
ஏற்ற வேண்டும் என்றான்
அதை இமயத்தில் ஏற்றிய
பெருமை பேசிய நாளைக் கடந்தேன்
உள்ளே உறங்க விட்ட பிள்ளையைத்
தட்டியெழுப்பினேன்
அவன் உடன் நடந்து போவதற்காய்
பாதங்களில் வலிய செருப்பு அணிவித்தேன்
படலை தாண்டும் போது
அவனுடன் இவனையும் அனுப்பினேன்
மனம் நெகிழும் பார்வையால்
என்னைக் கைகுவித்து வணங்கியபடி
அடுத்த படலையைத் தட்டினான்
தூரத்தே பாசக்கடல் தாண்டி
நெருப்பாற்றைச் சேரும்
என்பிள்ளையைப் பார்த்தேன்
அவனது கைகளில் செங்கொடி
மிளிர்ந்தது
உச்சியில் ஏறுவதற்காய்க்
கால்கள் நடந்தன
அந்தக் கொடியின் பின்னே
பேரொளி தெரிந்தது
இன்னமும் நான் படலையடியில்
நிற்கிறேன்
உள்ளே திரும்ப மனம் மறுக்கிறது
எனது பிள்ளை மீண்டும் வரும்வரை
எங்களது செங்கொடி
உச்சியேறும் வரை
படலையடிக் காத்திருப்பே சொந்தமாகிப்போனது
நிச்சயம் அந்தக் கொடி ஏறவேண்டும்
விரைவில் விரைவில்
எமது பிள்ளைகள் மீள வேண்டும்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## துயரங்களே சாட்சியாக

பெருகியோடும் உதிரமே சாட்சியாக
சுருக்கிக்கிடக்கும் வாழ்விடமே சாட்சியாக
கனவுத்துண்டுகளின் சிதறலில்
உயிர் பறைத்த நிமிடங்களே சாட்சியாக
பசித்த வயிறுகளின் கொதிப்பே சாட்சியாக
மருந்தின்றி சூழ்ந்திட்ட நோய்களினும்
பிழைக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை
சூட்சமங்களால் மூடப்பட்ட பெரு விதியின்
மூடியில்
முறிந்து போனபோது
எழுந்த கைவிரிப்பே சாட்சியாக
குண்டுதீர்க்கும் குத்தூசியாய்
விலைகள் ஏறியபோது
வாங்கமுடியாத பண்டங்களே சாட்சியாக
கற்றதை இடைநடுவில் விட்டு
உறவுகளைப் பறிகொடுத்து
காணாமல் போன பட்டியல்களினூடும்
கைதானோர் வரிசையிலும்
தேடுகின்ற மனங்களே சாட்சியாக
ஆக்கிரமிப்பின் இரும்புக் கால்களுக்குள்
அடங்கிக் கிடக்கும்
மைதானங்களே சாட்சியாக
அங்கு எதிர்த்தெழுந்து மேலெழும்
மனத்தீயே சாட்சியாக
எமது தாயகத்தை நாங்கள் மீட்டெடுப்போம்
எமது விடுதலையை நாங்கள் மீட்டெடுப்போம்
மண்ணுள் உறங்கியவரின் நினைவு சுமந்து
உயிர் கலந்த உன்னதங்களின் கனவு சுமந்து
தலைவனின் வழியில்
தமிழரின் படைபலத்தில்
புலம் வாழ் உறவுகளின் தோள் பலத்தில்
எமது தாயகத்தை நாங்கள் விரைவில்
மீட்டெடுப்போம்.





## அழுகும் சுவர்களை இடிப்போம்

தாயகத்தின் நிலப்பரப்பு
திசைக்கொன்றாய்ப் பிரிந்து கிடக்கின்றது
பிரிவினால் ஆற்றாது சுற்றும்
உறவுகளிடையே
அழுகும் சுவர்கள் மெது மெதுவாய் உயர்கின்றன
ஒரே இடத்திலல்ல
திசை தோறும் இருக்கின்றன அவை
ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும்
முளைக்கின்றன அவை
சடலத்துக்கு நடுவில்
கண்டங்களுக்கு இடையில் எம்மைப்
பிரித்து வைக்க அவர்
விலாசங்களைத் தகர்க்க வேண்டும்
இந்த அழுகும் சுவர்களை இடித்தால் தான்
எங்கள் வாழ்வு சுகப்படும்
அழுதழுது விம்மல்களையும்
நாட்கள் அகலும்
எங்களிடையே பார்த்து கிடக்கும்
அழும் சுவர்களை இடிப்போம்
வெற்றுப் பார்த்து மிதக்கும்
பசியாய் இருக்கும்
நாட்களை எரிப்போம்
மன உக்கிரத்தால் அழும் சுவர்களை
இடித்துக் கொட்டுவோம்
கண்ணெதிரே
காவல்வேலிகளைப் போடுவோம்
உறவுப்பாலங்களைக் கட்டுவோம்
அழுகல் பற்றிய குறிப்புகளையும்
அவலங்கள் பற்றிய நினைவுகளையும்
அழித்தெழுதுவோம்
எமக்கான கல்லறைகளிற் கூட
வசந்தத்தின் வருகை பற்றிய
பாடல்களே ஒலிக்கட்டும்
கண்ணீரால் சேமிப்புகள்
அது கூடக் கல்லாக முடியும்
சுற்றலையும் கருவிகளாக்குங்கள்
பொழுதெழுந்தால் விடியும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தூரிகையில் பிறந்த விடுதலையின் வெளிப்பாடு

போராளி ஓவியர் நீதனின் 'விழிவின் நிறங்கள்' ஓவியக்காண்பிய நிகழ்வு

உ.நிதர்சன்



காலத்தின் பதிவுகளை காவிச்சென்று எடுத்தியம்பும் கலைப்படைப்புகளில் ஓவியமும் உன்னதமானதொரு இடத்தை வகிக்கின்றது. மனிதர்களிடம் மொழி தோற்றம் பெறும் முன்பதாகவே ஓவியம் மொழியாக பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான சான்றுகள் உள்ளன. இவை தொடர்பாக குகை ஓவியங்கள், ஆய்வு நூல்கள் என்பனவற்றின் மூலம் அறிய முடிகின்றது. இவ்வகையான ஓவியங்கள் சித்திர ஓவியங்கள் என்று அழைக்கப்பட்டன. தற்போதுள்ள ஓவியக்கலையின் பரிணாமமென்பது நீண்டகால ஓவிய வரலாற்றின் தொகுப்பாகும். பாரம்பரிய ஓவிய முறைகள் மருவி 1900 ஆண்டுகளின் பின் நவீன ஓவியங்களாக உருவெடுத்துள்ளன. இவ்வகையிலான ஓவியங்கள் இன்று நவீன உலகத்தில் பெரும்பான்மையாக ஆதிக்கம் செலுத்துகின்றது.

ஆழமான சிந்தனைப்பார்வையை தூண்டுவதனூடாக வெவ்வேறு விதமான கருத்துக்கள் பிறப்பெடுக்கின்றன. இவ்வாறு இருக்க நவீன ஓவியத்தின் அதீத வளர்ச்சி உயிர் ஓவியத்துக்கு கிடைத்த கேடு என ஒரு சாரார் கருதினர். எப்படியிருந்தபொழுதிலும் மின்னல் வேகத்தில் பயணிக்கும் இந்த உலகத்தில் கருங்கோடுகள் பெரியதாய் விளங்குதலே பொருத்தமானதாகவும் ஏற்புடையதாகவும் உள்ளது. ஆனால் நவீன ஓவியம் அதற்கேற்புடையதாய் இசைந்து கொடுக்கின்றது.

எனவேதான் அதிகளவிலான புரட்சிக் கருத்துக்களைத் தூண்டும் ஓவியங்கள் அன்றும் சரி இன்றும் சரி நவீன பாணியூடாகவே படைக்கப்படுகின்றன. இதற்கு சான்றுகளும் பலவாக நவீன ஓவியத்தின் தாயகத்தார் பிக்காசோ தனது குவர்னிக்கா எனும் நவீன படைப்பின் மூலம் ஸ்பெயின் நாட்டின் உள்நாட்டுக் கலவரத்தை வெளிப்படுத்தினார்.

தமிழீழ ஓவிய வரலாற்றை நோக்குமிடத்து எமது மக்கள் பட்ட, படுகின்ற அவலத்தையும் எமது போராளிகளின் உயர்ந்த தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் கருவாகக்கொண்டு உள்ளத்து தூரிகையால் எண்ணம் தீட்டி மக்களை எழுச்சியடைய



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வைப்பதுடன் வரலாற்றைக் காவிச்செல்லும் முக்கிய ஊடகமாக வும் ஈழத்து ஓவியர்களது கைவண்ணம் திகழ்கின்றது.

அந்த வகையிலேதான் ஈழத்து ஓவியர்கள் வரிசையில் நமக்கு அறிமுகப்படுத்தப்போராளியுமான நீதன் விளங்குகின்றார். அண்மையில் கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரியில் அவரது ஓவியக் கண்காட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அக்கண்காட்சியின் தலைப்பு 'விடுதலை நிறங்கள்' ஆகும். அக்காண்பிய நிகழ்வு அனைத்துத்தரப்பினர் மத்தியிலும் பலத்த வரவேற்பை பெற்றது.

நீதன் அவர்களது மனப்பதிவு வெளிப்பாட்டின் வாசைத் தூறல்களில் நனைந்தபடி ஓவியர் நீதனை அடைந்தேன். கலைஞன் என்பவன் அவன் படைப்புகளின் ஊடாகவே இனம் காணப்படுகின்றான் என்பது போல அவரது படைப்புக்களோ அவரை யார் அவர் நீதன் நாம் எவை என்றும் கேள்வி களிற்கு விடையாய் அமைந்துள்ளன. அத்துடன் அவரது ஓவி யங்கள் பிரமிப்பூட்டுகின்றன.

உண்மையில் போராளி நீதன் அவர்கள் போராளியாக மாத்திரம் களத்தில் நின்று களமாடவில்லை மாறாக போர்க்களத்தில் மறந்த மாவீரர்களது உன்னத தியாகங்களையும், மக்களின் அவலங்களையும் ஓவியங்களாகவும் சிற்பங்க ளாகவும் படைத்து ஆவணப்படுத்துவதோடு மாத்திரமல்லாது கணனி வரைகலையிலும் தனது முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை.

இத்தகைய பன்முக ஆற்றல்மிக்க போராளி நீதன் அவர்களை எரிமலை சஞ்சிகைக்காக சந்தித்த போது.

எப்போது போராட்டத்தில் இணைந்து கொண்டீர்கள் உங்களது சொந்த இடம் என்ன?

நான் 1990ஆம் ஆண்டில் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டேன். மன்னார் மாவட்டத்தில் அடம்பன் என்னும் கிராமத்தில் நான் பிறந்தேன்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**ஓவியத்துறையில் உங்களது பயணிப்பு பற்றிக் கூறுங்களேன்?**

பாடசாலை நாட்களில் எனக்கு ஓவியம் வரைவதில் விருப்பமிருந்தது. அனேகமாக புத்தகங்களில் வரும் ஓவியங்களை ரசித்து சேமிக்கும் பழக்கமும் இருந்தது. இயற்கைக்காட்சிகளை வெகுவாக ரசிப்பேன். இயக்கத்திற்கு வந்ததன் பின் எனது விருப்பத்திற்கு ஏற்ப ஓவியம் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. முதலில் பிரபல ஓவியர் மணியம் அவர்களின் மாணவர் கிரி அவர்களிடம் ஆரம்ப கற்கையைமேற்கொண்டேன்.
1995ஆம் ஆண்டு நடைபெற்ற 'இடிமுழக்க' சமரின்போது எனது உடலில் கால், கை, வாய் என பல இடங்களில் காயமடைந்த நிலையில் நலன் அறிவுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டேன். நலன் அறிவுக்கூடம் என்பது காயமடைந்து உடல் ஊனமுற்ற போராளிகள் தேசப்பணியாற்றவும் முடியும் அவர்கள் தளர்ந்து போகாது தொடர்ந்தும் விடுதலைப்போரில் பங்காற்ற வேண்டும் என்பதற்காகவும் தலைவர் நிறுவிய கலங்கரை விளக்கு. அங்குதான் நான் இந்த நிலைக்கு வருவதற்கான களம் அமைந்தது. ஓவியர் தயா ஆசிரியர் தான் நல்லதொரு வழிகாட்டியாக அமைந்தார். அவரிடமிருந்து நான் நல்ல ஓவியங்களை பற்றி கற்றுக்கொண்டேன்.

மக்கள் படும் அவல நிலைகளை வெளிப்படுத்தும் வண்ணமாக எனது படைப்புகள் வெளிவரவேண்டும் என்று நான் விரும்பியதற்கேற்றாற்போலவே ஆசிரியர்களும், பொறுப்பாளர்களும் எனக்கு வாய்த்தார்கள் சந்தர்ப்பங்கள்

"தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எமது போராளிகள் போராடுவதில் மட்டுமல்லாது சகலதுறைகளிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்கமைவாக நானும் ஒரு ஓவியனாக நின்று எமது போராட்டத்தின் உண்மை நிலைமைகளை வெளிஉலகிற்கு கொண்டு செல்வதோடு எமது உன்னத தியாகிகளின் சாதனைகளை வரும் தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் படைப்புகள் உதவவேண்டும் என்பதே எனது அவா."





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எல்லாம் சரியாக வந்து அமைந்தன. நான் உங்கள் முன்னிலையில் ஒரு ஓவியனாக அறியப்படுவதற்கு இவை எல்லாம் காரணமாக அமைந்திருந்தன. 2001, 2002ஆகிய ஆண்டுகளில் புலிகளின் குரல் வானொலிக் கலைநிகழ்வில் இடம்பெற்ற ஓவியப்போட்டியில் பங்குகொண்டு முதல் இடத்தைப்பெற்றுள்ளேன். தற்போது இங்கு ஓவியக் கண்காட்சி நடாத்துவதற்கு முன்பதாக லெப். கேணல் நவம் அறிவுக்கூடத்தில் நிகழ்ந்த ஓவிய காண்பிய நிகழ்விற்கு தேசியத்தலைவர் அவர்களும் வந்து பார்வையிட்டு என்னைப் பாராட்டினார்.

**இப்போது நவீன ஓவியராக இருக்கும் நீங்கள் நவீன ஓவியத்திற்கும் இயற் பண்புவாத ஓவியத்திற்கும் என்ன வேறுபாட்டைக் காட்ட விரும்புகிறீர்கள்?**

உயிர் ஓவியத்திற்கு உறுப்புக்கள் மற்றும் அளவுகள் முக்கியமானவை. ஆனால் நவீன ஓவியத்திற்கு கருத்துச்செறிவும் முக்கியம்; ரசனையும் ஆர்வமும், தேடலும் வேண்டும் என்பது எனது கருத்து.


**ஓவியம் தவிர கலைத்துறையில் வேறு எவற்றில் ஈடுபாடு காட்டி வருகிறீர்கள்?**

கிளிநொச்சி மாவட்ட சித்திர ஆசிரிய ஆலோசகர் திரு. அன்ரன்ஜோசப் அவர்களிடம் சிற்பக்கலை தொடர்பாக கற்றிருக்கிறேன். நுண்கலைக்கல்லூரியில் முறைப்படி தபேலா வித்துவான் சிவராம் அவர்களிடம் தபேலா கற்றுவருகிறேன். இதைத்தவிர கிராபிக்ஸ் கற்று வருகின்றேன்.

**நீங்கள் காயமடைந்திருப்பது உங்களது வளர்ச்சிப் பாதையில் தடைக்கற்களாக இல்லையா என கேட்டதற்கு**

நான் எப்பொழுதுமே இதை குறையாக கருதியதில்லை. இலட்சியவாதியின் பாதையில் தடைக்கற்கள் நான் அவனுக்கு படிகற்களும். எனது மண்ணுக்காக காயமடைந்ததைவிட்டு போராடுவதைவிட்டு சந்தோசப்படுவேனே தவிர ஒரு போதும் கவலை அடைபவதில்லை. என் தழும்புகளை வீரத்தின் தழும்புகளாகவே பார்க்கிறேன்.

**நீங்கள் முற்று முழுவதாக உங்கள் படங்களில் சிகப்பு, செம்மஞ்சள், மஞ்சள், கறுப்பு வர்ணங்களை பாவிப்பதற்கான காரணங்களைக் கூறுவீர்களா?**



அந்நிறங்கள் எமது விடுதலைப்போராட்டத்தோடு பின்னிப்பிணைந்தவை. எமது எழுச்சியின் குறியீடு. மக்கள் அனைவரும் ஒன்றித்து எழுச்சிகொள்ளவேண்டும் என்பதாலும் இந்நிறங்களைப் பயன்படுத்தினேன். அத்துடன் எங்கள் தேசியக்கொடியின் நிறமும் அவையே. எனவேதான் இவ்வர்ணங்களை பயன்படுத்துகிறேன்.


**இறுதியாக உங்கள் இலட்சியம் பற்றி**

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எமது போராளிகள் போராடுவதில் மட்டுமல்லாது சகலதுறைகளிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்கமைவாக நானும் ஒரு ஓவியனாக நின்று எமது போராட்டத்தின் உண்மை நிலைமைகளை வெளிக்கொண்டு செல்ல உழைப்பதாக கருதுகிறேன். எமது உன்னத தியாகிகளின் சாதனைகளை வரும் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வண்ணமாகவும் எனது படைப்புக்கள் விளங்கவேண்டும் என்பதே அவா.


எதிர்காலத் தலைமுறையினரிடம் அவர் படைப்புக்கள் பேசப்படும் காலத்தை வென்றுவாழும். அவரை அடைகாத்து நல்லதொரு ஓவியக்கலைஞராய், போராட்டக்கலைஞராய் சிறகசைக்க வைத்தமைக்கு நவம் அறிவுக்கூடத்திற்கு நன்றிகள் சொல்லவேண்டும்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# அவன்தான் உயரம்

யோ.நீலாம்பரி

அன்று வானம் சிவப்பதற்கு முன்பதாகவே எமது மண் சிவக்க ஆரம்பித்து விட்டது. அருகில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைச்சிதறல்கள் காப்பரணுக்குள் அமைக்கப்பட்டிருந்த பலகைகளில் பட்டுத்தெறிக்கின்றன. புகைமண்டலம் எழுந்து சற்றுத் தொலைவில் எழுந்த கண்ட் பற்றைகளை மறைத்துவிட்டு கணப்பொழுது முன்பே அந்த எறிகணை வீழ்ந்து வெடிக்கிறது. பழகிப் பழகிப்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



பீடசமாகிவிட்டதால் எங்கும் பரவிய கந்தகப்பொடி எங்கள் சுவாசத்தில் ஆட்படிப்பெரும் பாதிப்பை அப்போது ஏற்படுத்தவில்லை.

ஒவ்வொன்றாக அடுத்தடுத்து விழும் எறிகணைகள் வெடித்து முழங்கிப் போகும் பல்குழல் எறிகணையின் சீறலின் அறிகுறியாகவும் இருக்கலாம்; தொடக்கத்தில் அவை எங்களைச் சற்று வெருட்டியது உண்மைதான் இப்போதெல்லாம் அவற்றின் வருகையும் வெடிப்பும் வழமையான விசயங்களில் ஒன்றாகி விட்டன. ஆனால் அந்தவேளைகளில் தற்காப்பில் மட்டும் அக்கறை செலுத்திக்கொண்டு இருந்து விடமுடியாது. இந்தப் புகைமண்டலம் அடங்க தலையை நிமிர்த்திப்பார்க்கும் போது பற்றைக்குள் இருந்து ஒரு இராணுவத்தினர் பதுங்கிக்கொண்டு முன்னேறினாலும் கூடும். அப்படி நடக்கும் போதும் எங்கள் பாடு ஒருவிதமான கொண்டாட்டம் தான் எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடித்து எங்களை பற்றிவிடுமென்று பயப்பட வேண்டிய அவசியம் இருக்காது எங்களின் இப்பொழுது வெடி விளையாட்டுக்காட்டி ஓடஓட விரட்டலாம்.

நாங்கள் எதிர்பார்த்தது போலவே பல்குழல் பீரங்கிகளின் எறிகணை மழைதொடங்குகின்றது. நாங்கள் அனைவரும் தகுந்த பாதுகாப்பை எடுத்துக்கொள்ளவேண்டும். எறிகணைகள் எங்கள் முன்னாலும் எங்களைக் கடந்தும் வீழ்ந்து வெடிக்கின்றன. காதுகள் ஒரு தொடர்ச்சியான இரைமுழக்கத்தின் தாக்குதலில் கருங்குகின்றன. இன்று இராணுவத்தினர் முன்னேறக்கூடும் என்று வேவுத்தகவல்கள் ஏற்கனவே எங்களுக்கு கிடைத்திருந்த காரணத்தால் அன்று மிக அவதானமாகவே இருக்கவேண்டியிருந்தது.

எறிகணைகள் ஒருசற்று முடியும் போது புகைமண்டலத்திற்குள்ளாலேயே வேகமாக முன்னேறி, இயன்றளவு முன்னே போய் கண்டல்பத்தைகளுக்குள் நிலையெடுக்க வேண்டுமென முடிவுசெய்தேன். எறிகணை வீச்சு ஓய்ந்ததும், 'மூவ்'........ என்று கத்தியவாறே வேகமாக கண்டல்பற்றைகளை நோக்கி வேகமாக முன்னேறினர் எறிகணைகள் விழும் இடங்களில் படையினர் நிற்கமாட்டார்கள் என்பதால் அதுபற்றிய பிரச்சனைகள் இல்லாமல் முன்னேறினோம் அவர்கள் அடுத்த சுற்றுக்கு எறிகணைகளை நிரப்பி அடிக்கத்தொடங்கும் நேரத்திற்குள் கடந்துவிடவேண்டுமென்ற வேகத்துடன் நகர்ந்தோம். தனித்தனி எறிகணைகள் எங்களைக் கடந்துபோய் விழுந்துகொண்டிருந்தது. அதைப்பற்றி பெரிதாக அக்கறைப்பட வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கவில்லை.

மீண்டும் பல்குழல் பீரங்கிகள் சுக்கத் தொடங்கி விட்டன. அந்த எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததைப்பார்த்த போது நாங்கள் ஆபத்தான எல்லையை கடந்துவிட்டோம் என்பதைப் புரிந்துகொண்டோம்.

சிறுசிறுபற்றைகளையும் சிறுகிடங்குகளையும் பாதுகாப்பாக்கி நிலையெடுத்துக்கொண்டோம். ராங்கிகள் கவசவாகனங்களில் ஒலி காதில்விழ ஆரம்பித்தது. 'ஆர்.பி.ஜீ' களுக்கு அலேட் கொடுக்கின்றேன். எதிரிகள் எதிர்பார்க்காத இடத்தில் நாங்கள் தாக்குதலைத் தொடுக்க இருப்பதால் சண்டை சாதகமாக அமையும், என்று எதிர்பார்த்தேன். கட்டளைப்பீடத்திடம் தொடர்புகொண்டு எங்கள் நிலைமையை விளக்கினேன். நாங்கள் நிற்கும் இடத்திலேயே தாக்குதலை தொடங்கும் படி ஆணைவந்தது.

இராணுவ அணி மிக நெருக்கமாகவரும் வரை நாங்கள் மிக கவனமாகவே இருந்தோம். பல சமயங்களில் அருகருகே நின்று பிடிக்கும் சண்டைகள் எங்களிற்கு சாதகமாக அமைவதுண்டு அன்றும் எங்கள் எல்லோர் மனதிலும் அப்படியான எதிர்பார்ப்பே இருந்தபோதும் பலமைல் நீளத்திற்கே பல்லாயிரக்கணக்கான இராணுவத்துடன் மோதும் ஒரு பாரிய பணியில் ஒரு பகுதியை நிறைவேற்றும் பணியே எங்களுக்கு வழங்கப்படுகின்றது. என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை எங்கள் அணி பாதுகாப்பு பிரதேசங்களில் ஒரு ராங்கியையும் ஒரு கவசவாகனத்தையும் முன்னால் வர படையினர் பின்னால் குனிந்தவாறு ஓடிவந்துகொண்டிருந்தனர். அவர்கள் எங்களை அந்த இடங்களில் எதிர்பார்க்காத காரணத்தினாலோ என்னவோ அவர்களின் குறைந்த வாகனங்கள் இன்னும் தீயைக் கக்கத்தொடங்கவில்லை. அவர்கள் தங்கள் பல்குழல் எறிகணை வீச்சில் அந்தஇடங்களிற்கு கிளியர் பண்ணிவிட்டதாக நினைத்திருக்கலாம். நான் எதிர்பார்த்த எல்லைக்குள் ராங்கி வந்துசேரவே ஆர்.பி.ஜிக்கு கட்டளைகொடுக்கின்றேன். ராங்கியின் செயின் ஒருமுறை அறுந்து மேலெழுந்து கீழ் விழுகிறது. டாங்கியின் பீரங்கிகுழல் சரமாரியாக குண்டுகளை பொழிய ஆரம்பிக்கிறது. தொடர்ச்சியாக ஆர்.பி.ஜீ தாக்குதலினால் இரு வாகனங்களும் செயலிழந்து போனது. எங்களைப் பொறுத்தவரையில் டாங்கிச் சமர் என்றால் ஒரே கொண்டாட்டம்தான். இராணுவத்தினரால் ஒரு அடியும் முடியவில்லை. ஆனால் அவர்களில் பலர் செத்து விழுவதும் படுகாயமடைவதும் தெளிவாகத் தெரிகின்றன. இவையெல்லாம் மேலும் எங்களுக்கு உற்சாகம் ஊட்டவே எங்கள் தாக்குதல் மேலும் வேகமடைகின்றது. எனினும் எங்களிலும் கோபிநாத் வீரச்சாவடைகின்றார். மேலும் இருவர் காயமடைகின்றனர் கோபிநாதையும் காயமடைந்தவர்களையும் பின்னால் கொண்டுசெல்ல ஏற்பாடுசெய்துகொண்டு தாக்குதலுக்கான கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருக்கின்றேன் திடீரென வோக்கியில் ஒரு குரல்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒலிக்கிறது. 'சங்கர்' 'சங்கர்' 'சொட்டமெரு' 'சங்கர்' 'சங்கர் சொட்டமெரு' அது காதிலிருந்து கட்டளைப்பீடத்திற்கு அழைப்பு வருகிறது. என்பதில் புரிந்து கொள்கிறேன். ஆனால் சொட்டமெரு என்ற பெயரைக்கேட்டதும் அது அவளாகத்தான் இருக்குமென்று உணர்கிறேன்.

ஓ.... சொட்டமெரு சொட்டமெரு, சங்கர் சொல்லுங்கோ! கட்டளைப்பீடத்திலிருந்து பதில் வருகிறது. அவசரம் மற்றதுக்கு வாங்கோ, அதன்பிறகு அந்த உரையாடல் எனது அலைவரிசையில் வரவில்லை; எனக்கு அதைப்பற்றி அக்கறைப்பட நேரமும் இருக்கவில்லை. ஏறக்குறைய எங்கள் பக்கத்துள் முற்றாக படையினரை தடைக்கும் நிலைமைக்கு வந்துகொண்டிருந்தோம். படையினர் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் தூக்கிக்கொண்டு வேகமாக பின்வாங்கிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்துள் எனது வோக்கி அவசர அவசரமாக அழைத்தது. மதுரன் மதுரன் சங்கர் மதுரன் மதுரன் ஓமன்னை சங்கர்! சொல்லுங்கோ மற்றதுக்கு வாங்கோ நான் கட்டளைக்கு கீழ் பணிகின்றேன். அடுத்த அலைவரிசையில் குரல் ஒலிக்கிறது. மதுரன் ஓமன்னை நிலமை என்னமாதிரி 'நான் மகிழ்ச்சியுடன் பதிலளிக்கிறேன் விசயம் முடிஞ்சமாதிரி நல்லா பின்வாங்கிற்றாங்கள் ஓவர்' சரி உங்கட இடத்தை சேர்த்து 12 பார்க்கும் நீங்கள் உங்கட நிலை 14 ஓவர் விளங்கிக்கொண்டனான் ஓவர். ஒன்று நாலில் சரியாக சேரும். உடனே உதவி தேவை கெதியாப்போங்கள் ஓவர். விளங்கிச்சு போறமன்னை ஓவர். அதன்பிறகு எங்களுக்கு வேறு எதையும் பற்றி சிந்திக்க நேரமில்லை. ஒன்று நாலை நோக்கி வேகமாக நகரத்தொடங்கினோம். நாங்கள் எதிர்பார்த்தது போன்று நகர்வு அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. எங்களால் முகம்கொடுக்கப்பட்ட இராணுவ அணி முற்றாக பின்வாங்கிவிட்ட நிலையில் எறிகணை வீச்சுக்களை சரமாரியாக ஆரம்பித்துவிட்டனர். ஒன்று நாலுக்கு பின்புறமாகவும் ஒரே எறிகணை மழையாகவே இருந்தது. அதே வேளையில் வெளியப் பிரதேசத்தால நகர்தலோ சிறைப்பில் மட்டுப்படவேண்டி வரும் எப்படியோ ஒரு 15, 20 நிமிடங்களில் குறிப்பிட்ட இடத்தை நாங்கள் அடைந்து விட்டோம். நான் அங்கு சென்றபோது பூரண அமைதி நிலவியது. எங்கும் இராணுவ சடலங்கள் விதைக்கப்பட்டுக்கிடந்தன. அந்த இராணுவ அணியில் ஒருவருமே



அவளின் முகத்தை பார்த்தேன்
பின் அவளின் துப்பாக்கியை கையில்
எடுத்துக்கொண்டேன்.
போய்க்கொண்டிருந்த உயிரை
இழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு
வந்த முயற்சிப்பங்களையும்
அழித்துவிட்டு சாவைத்தழுவிய
உணர்வு என்னைச்
சிரிக்க வைத்தது.


எஞ்சவில்லை போல் இருந்தது. நாங்கள் உரிய நேரத்தில் வந்து சேராவிட்டாலும் பெண்போராளிகள் தங்கள் இலக்கை எட்டிவிட்டதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. காவலரணுக்கு அருகில் சென்றபோது சிறிய சிறிய இடைவெளிகளில் மூன்று பெண்போராளிகளின் வித்துடல்கள் கிடந்தன. இன்னும் சற்றுத்தூரத்தில் முகம் குப்புற ஒரு பெண்போராளியின் உடல் கிடந்தது. மெல்லப் புரட்டிப்பார்த்தேன்; அவள் அவளேதான் வித்துடலாகக் கிடந்தாள். அந்த சொட்டமெருவின் முகத்தில் வீரச்சாவடைந்த பின்பும் கூட ஒரு உறுதிவெளிப்பட்டுக்கொண்டிருந்தது. குனிந்து அவளுடைய துப்பாக்கியை எடுத்துப்பார்க்கிறேன். அதில் ஒரு ரவையும் எஞ்சவில்லை தீர்ந்து போயிற்று என்னால் ஒன்றைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவள் சாவை ஏற்படுத்தக்கூடிய படுகாயமடைந்த பின்பும் கூட மனம் தளராமல் வந்தவர்களுடன் மோதி கொண்டு தாக்கியிருக்கிறாள். ஒருவனைக்கூட தன் இருப்பிடத்தில் நெருங்க முடியாதவாறு சுட்டுவீழ்த்தியபின்பே வீரச்சாவடைந்திருக்கிறாள்.

அவளின் எடு இணையற்ற அர்ப்பணிப்பு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஏனோ திடீரென்று அந்த நாள் மின்னலாக ஒருமுறை மூளையில் தோன்றி பளிச்சிடுகிறது. அன்று விடியமுற்றுள் நாங்கள் அந்தக் கடல் நீர் ஏரியை கடந்தாகவேண்டும். துப்பாக்கிகள் உட்பட எங்கள் உடைமைகளை சுமந்துகொண்டு நீரேரியில் இறங்கி நடக்கின்றோம். தண்ணீர் மட்டும் மெல்லமெல்ல கூடிக்கொண்டு வந்தது. எனக்கருகில் மெருவந்து கொண்டிருந்தாள்; குறைந்த உயரம் காரணமாக கட்டை மெரு என்ற அர்த்தத்துள் அவளை சொட்டமெரு என்றே அழைப்பார்கள்; அவளும் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை; தன்பெயரை வெறும் மெருவிலிருந்து சொட்டமெருவாக்கி விட்டாள். இப்போது தண்ணீர் மெருவின் வாயளவிற்கு வந்துவிட்டது. அவள் 'அண்ணா தண்ணி என்னை தாக்கப்போகிறது. ஒரு கொஞ்சம் தூரம்தானே என்னைத் தூக்கிவிடுவீங்களோ' என்றாள் பரிதாபமாக. நான் நின்று அவளைப்பார்த்தேன். அவளும் எப்படியும் நீரைக்கடந்து ஆகவேண்டும் வேறு வழியில்லாத நிலையில் அவளை மெல்லத் தூக்கிக்கொண்டு நகர்ந்தேன். அரைவாசித்தூரம் போகும் போது சொன்னாள் இப்பதான் கட்டைமெரு இல்லை நாங்களை விட உயரத்தில் கால் பிறக்கும் நேரத்திற்குள் அவளின் பாரங்களையும் தூக்கிநடப்பது மிகச்சிரமமாகவே இருந்தது. அந்தநேரம் அவளின் பகிடி எனக்கு கோபத்தைத்தான் மூட்டியது. "உயரமும் கட்டையும் தண்ணிக்க போட்டனென்றால் தெரியும்" அவள் பெரிதாக சிரித்தாள். "போட்டால் எனக்கென்ன நான் செத்துப்போவேன். எனக்கும் சேர்த்து நீங்கள் தானே சண்டைபிடிக்கவேண்டும்" ஏனோ அந்த நினைவுகள், என் கண்கள் கலங்கின. அவளின் முகத்தை பார்த்தேன். பின் அவளின் துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டேன். போய்க்கொண்டிருந்த உயிரை இழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு வந்து முயற்சிப்பங்களையும் அழித்துவிட்டு சாவைத்தழுவிய உணர்வு என்னைச் சிரிக்க வைத்தது. "நான் உங்களை விட உயர்ந்தவள்" அன்று நீரேரியில் கேட்ட அதே குரல் மீண்டும் என்காதில் எதிரொலித்தது.

[illegible]



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# வீறு 2

## சந்தைக்கு வந்தவன்

கொழும்புத்துறையின் மேற்குக்கரையோரமாக அமைந்த சவுக்குத்தோப்பு சமண்டலை மரங்கள் வரிசையாக நட்டுவிட்டது போல் சாலையின் இரு மருங்கும் ஓங்கி உயர்ந்து அழகாக காட்சியளித்தது. பாழ் பன்னைகளுடன் எதுவித ஆரவாரமுமின்றி சாய்ந்து படர்ந்திருக்க அதன் தலைப்புறத்தே பூச்சூடியது போல் தென்னை பனை மரங்களின் மெல்லிய [illegible] தெரிய நீலம் கிடந்தது. அதன் பின்னணியில் நின்ற செங்கதிர் கடல் [illegible] ஒரு சிவப்பு ஒளி [illegible]



தமிழ்க்கவி

நீலம் தோற்றுவைத்து மாயம் புரிந்தது. மாதுளமும் அவள் கணவன் பரராசசேகரனும் அந்த மாயத்தில் மெய் மறந்து போயிருந்தார்கள். கொழும்புத்துறையின் பக்கலில் அமைந்திருந்த அந்த மாளிகையின் உப்பரிகையில் நீண்ட நேரமாக நின்று கடலையே வெறித்துக்கொண்டிருந்த மன்னன், "மாதுளம்" என்று மெல்ல அழைத்தான்.

"ம் இங்கே தான் நிற்கிறேன்"

"எங்கே பரநிருபன்?"

"அவன்... இப்போதுதான் அண்ணாவுடன் சென்றான்" இதைக்கேட்ட மன்னன் சிரித்துக் கொண்டான்.

"அப்பா முதலிக்கு அவன் மேல் பைத்தியமே பிடித்திருக்கிறது"

"இல்லையப்பா நான் தான் பைத்தியம் பிடிக்க அங்க போனேன்" என்றவாறே ஓடி வந்தான், ஒரு சிறுவன். அரச குமாரன் போல அலங்கரித்திருந்தாலும் அவன் கையில் அதற்குரிய சின்னங்கள் எதுவுமில்லை. அதில் ஒருகட்டு இலைகுழைகள் இருந்தன. அது மன்னனை வியப்புற வைத்தது.

"என்னப்பா இது என்று மகனைக் கேட்டான்

"அ - இது பூனை வணங்கி இது உத்தமாகாணி இது குன்றி இது பொடுதலை இது" . . .

"போறு! போறு! போறு!" அவனை மேலே கூற விடாமல் தடுத்த மன்னன் இலைகளைச்சுட்டி "இலையெல்லாம் என்ன பரநிருபா" என்றான் கனிவோடு.

"மூலிகைகள்... அப்பா".

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நள்ளிரவு தாண்டிய சிறு பொழுதுக்கெல்லாம் ஒரு உருவம் தல்கிருந்தினர் மாளிகையின் புறமதிற் சுவரோரம் நின்றது. எதையோ எதிர்பார்த்து தயங்கித் தயங்கிநின்ற அவ்வுருவம் இருளில் கூர்ந்து நோக்குவதும் பின் நகர்வதுமாக பற வாயிலை நெருங்கியது. அங்கும் இங்கும் பார்த்தவாறே கதவை திறப்பதற்காக கைவைத்த போது கதவு படக்கெனத் திறந்து கொண்டது. இதைச் சற்றும் எதிர்பாராத அவ்வுருவம் பொத்தென்று நிலத்தில் விழுந்தாலும் உடன் சமாளித்து எழுந்து கொண்டது. அகலத் திறந்த கதவின் வாசலில் பின்புறமான வெளியில் கரியபூதம் போல நின்ற அவ்வுருவத்தை உள்நின்ற உருவம் உள்ளே இழுத்துக் கபாடத்தையும் சாத்தியது.



எம்மண்ணில் எவ்வளவு அரிய மூலிகைகள் என்றான்.

அவற்றைத் தொகுதிவாரியாக விரித்து வைத்தான். "பரநிருபா... நீ இரண்டு நாட்களாக போர்க்கலைச்சாலைக்கு செல்லவில்லையாமே"

"அது வந்து... அப்பா நான் ஒரு வேரைத் தேடித்திரிந்ததில்"

"பரநிருபா! சற்றுக் கண்டிப்பாக சுப்பிட்டவன்"

"நீ அரசகுமாரன்.. இப்படி வைத்திய ஏடுகளைக் கட்டிக் கொண்டு திரிகிறாயே"

"அப்பா" பரநிருபன் தந்தையை கேள்வியோடு நிமிர்ந்து நோக்கினான்.

"நான் ஒரு சிறந்த வைத்தியராக வர விரும்புகிறேன் அரச வேலைகள் என்னைக் கவரவில்லை"

"ஹ ஹ் ஹ ஹ ஹ ஹ் ஹா" நல்லது மாதுமை உன் மகன் நல்ல இலட்சியத்தை தான் வரித்துள்ளான்...ம் நடக்கட்டும் நடக்கட்டும் ஆனால்..."

"ஆனால் என்ன சுவாமி"

"அம்மங்காதேவியின் மைந்தன் சிங்களாகு அரசனாகும் போது வலிமைமிக்க அவன் தம்பியர் அவனுக்கு அமைச்சர்களாக இருந்து இந்நாட்டை மேலும் சிறப்பாக ஆள வேண்டும். என்பது தான் கனவு

எங்கோ தொலைவை நோக்கி கனவில் மிதந்தது அவன் பார்வை.

சிங்களாகு, சீறும் சிங்கம்;

பத்து வருடங்களுக்கு முன் - சிங்களாகுவின் துடிப்பு அறிவு நலம் மன்னவை அவன் உள்ளத்தை கிளர்ச்சி கொள்ள வைத்தது உண்மைதான். குழந்தையாக சிங்களாகு நடப்பதும் மழலை பேசியதும் ஆசையோடு அவனைத் தழுவி இன்புற்றதும். அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தொடர்ந்து பண்டாரன் பிறந்த போது அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

அண்ணனும் தம்பியும் எவ்வளவு வீரக்கலைகளோடு திகழ்ந்தார்கள். அரசியல் குழப்பங்கள் எதுவுமின்றி அவன் குடும்ப உறவுகளில் மகிழ்ந்து கொண்டிருந்தான். இந்த நாலைந்து ஆண்டுகளில் மாதுமையும் நான்கு பிள்ளைகளைப் பெற்று விட்டாள். மூத்தவன் பரநிருபன் சிங்கன் மற்றவர்கள் பெண்கள் சற்று நேரம் ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தவன் பார்வையை துறைமுகத்தை நோக்கித் திருப்பினான். ஆம் அங்கு ஏற்பட்ட பரபரப்பே அவனைக் கவர்ந்த. இடையில் கால் சராய் அணிந்து கொத்துப் போன்ற வெளிவட்டம் அமைந்த தொப்பியும் மேலே மெல்லிய பட்டிலான சட்டை அணிந்த அம்மனிதன் அவ்வூரைச் சேர்ந்த யாரைப் போலவும் இல்லை. மாலை வெயில் அவன் முகத்தில் பட்ட போது ஒரு விநோதமான மாந்தளிர் நிறமடைந்து அவன் முகம். உடலின் மணிக்கட்டுப் மேலுள்ள கையும் தலையுமே வெளித்தெரிந்தன. ஆம் அங்க அதிகாரியின் அழைப்போடு திரும்பியவன் தொப்பியை கழற்றி கையிலெடுத்ததுடன் தலையை முன்புறம் சரித்து ஒரு தடவை குனிந்து நிமிர்ந்தான். தீக்கொழுந்துகளைப் போன்ற அவன் கேசத்தின் நிறம் அவனை ஒரு விநோதமானவனாகவே காட்டியது. தென்னிலங்கையில் வந்துள்ள ஜாதி மனிதர்களைப் பற்றி அவன் முன்னர் கேள்விப்பட்டிருந்தான்.

அவன் ஏன் இங்கு வந்தான் அதுவும் தனியாக... மன்னன் அவசரமாகப் புறப்பட்டு தன் அரண்மனையை நோக்கித் தன் தேரைச் செலுத்தினான். வாயில் காவலன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தலை வணங்கி ஒதுங்கினான். அவனை எதிர் கொண்டான் அமைச்சன் பூதன். "வணக்கம் அரசே"

"ம் ஏதாவது செய்தி..."

"இருக்கிறது..." அந்த விசாலமான மண்டபத்தின் நடுநாயகமாய் அமர்ந்திருந்து தன் செய்தியை எதிர் நோக்கினான்.

பராரசிங்கன். "அரசே பணங்காம பல்லியிலையின் மன்னர் பகுதியிலிருந்து காக்கை வன்னியன் அவர்கள் அனுமதியுடன் நமது சந்தைக்குப் பொருட்கள் கொண்டு ஒரு வெள்ளையர் வந்துள்ளார்"

"அப்படியா?

அவர் பண்டமாற்றாக எதிர்பார்ப்பது"

"யானைத்தந்தங்கள்"

"கொண்டு வந்த பொருட்கள்"

"உணவன், பாணம், கறுவா, இரத்தினம்"

"இவற்றில் ஏதாவது" எமக்குத் தேவையானவையா அமைச்சரே"

"இல்லை" பூதனின் இப்பதிலை வெட்டியது ஒருகுரல்

"ஆனால் அவர்கள் எமக்குத் தேவைப்படலாம்"
"எப்படி...." அரசன் அப்பா முதலியை நோக்கித் திரும்பினான். ஒருமுறை மிடறு விழுங்கிய அப்பா முதலி.

"அரசே... காக்கை வன்னியன் எதையும் ஆலோசிக்காமல் செய்ய மாட்டார்" "ம்..." "நட்பு நாடு வரும் உறவாக நாம் இதைக் கொள்ளலாம்"

"ஆனால் பொருட்கள் எதுவும் எமக்கு" "தேவை மன்னா"

உணவன் என்ற அந்த பானம் நீங்கள் இதுவரை சுவைத்திராத தேவபானம்"

"அப்படியா"

"மன்னிக்க வேண்டும்" சுபதிட்ட, மன்னனை நோக்கினான். மன்னன் தேர்ந்த அறிவும் ஞானியுமான சுபதிட்டாவை பணிவோடு நோக்கினான்.

"கூறுங்கள் குருவே"

"அரசே எம்மிடம் இனிமையான பணம்பானம் வேண்டியளவு கிடைக்கிறது. ஆகவே..." "ஆமாம்.... ஆமாம்"

அதுமட்டுமல்ல. இந்த வெள்ளையர்கள் தென்னிலங்கையை இப்படி வியாபாரத்துக்கு வந்துதான் கைப்பற்றி விட்டார்கள்"

"தென்னிலங்கை மன்னன் புவனேகபாகு தொன்சுவான் எனத் தன் பெயரைக் கூட மாற்றிக் கொண்டு... அவர்களுக்கு அடிமையாகக் கிடக்கிறான்"

"ஆமாம் ஆமாம்" என அவை அதை எதிரொலித்தது. "அப்படியா?"

"அரசே நமக்கு தேவையற்ற பொருட்கள் வேண்டாம். அவனுக்கு தேவையானதை அவன் இரத்தினக் கற்கள் கொடுத்துப் பெற்றுக் கொள்ளட்டும்".

"நல்ல யோசனை அவனை அழைத்துச் வாருங்கள் என்ன இருந்தாலும் வெளிநாட்டான் நன்கு உபசரித்து அனுப்புங்கள்."

அரசனின் முடிவோடு அவை கலைந்தது. அவ்வெள்ளையனின் வருகை ஒரு துன்நிமித்தமாகவே தோன்றியது பராசனுக்கு. அவன் உண்மையில் எங்கள் மண்ணைப் பற்றி அறிந்து போகவே வந்துள்ளான் என்பதில் அவனுக்கு சந்தேகமேயில்லை. படகோட்டமாக கட்டப்பட்டிருந்த அந்த மாளிகை யமுனா ஏரியின் புறத்தே அமைந்திருந்தது. நாற்புறமும் கோவில்கள் சூழ இருந்த நல்லை நகரின் அழகு அவனை மிக கொள்ளை கொள்ள அந்த வெள்ளையன் "ஆ...ஹா" வென ரசித்துக் கொண்டான். விருந்தினர் மாளிகையின் குளியல் தடாகம் நிரம்பமாக கிடந்தது அந்த நீரில் நிர்வாணமாக இறங்கி அவன் போட்ட ஆட்டத்தில் அந்த மாளிகையின் பணிப்பெண்கள் அங்கிருந்து விலகினர். குளித்து முடித்து தேவையான அளவு வாசனைகளையும் பூசிக்கொண்ட பின்னர் அவன் உதவியாளனாக காக்கைவன்னியனால் அனுப்பப்பட்ட அந்த மொழி பெயர்ப்பாளன் அவனுடைய உணவை எடுத்து வைத்தான். முழுமையாக வறுக்கப்பட்டு வைத்திருந்த கோழிகள், ரொட்டி, பழப்பாகு, சுத்தமான நெய், இவற்றுடன் வேக வைத்த அப்பைக்கிழங்கு, வாழைப்பழமும் சோறு, கறி கரண்டிகள் என அவன் அவனுடைய நாட்டுப் பாணியிலும் எமது நாட்டு உணவுகளும் கலந்து வயிறார உண்டு முடித்தான். தான் உண்டகளை நீங்க மஞ்சத்தில் வீழ்ந்து உறங்கினான் அந்த வெள்ளையன். ஒரு வர்த்தகனாக வந்து இலங்கையின் எழில்மிகும் மயங்கி தன் நோக்கத்தை கைவிட்டு யாத்திரிகனாக மாறிய பான் உள்ளம் வியந்து போற்றிய மண் இது. இதன் வளர்ச்சிப் போக்கில் இன்றுவரை காட்டிக் கொடுப்புக்களால் நேர்ந்த அவலங்களே அதிகம். நள்ளிரவு தாண்டிய சிறு பொழுதுக்கெல்லாம் ஒரு உருவம் அவ்விருந்தினர் மாளிகையின் புறமதிற் சுவரோரம் நின்றது. எதையோ எதிர்பார்த்து தயங்கித் தயங்கிநின்ற அவ்வுருவம் இருளில் கூர்ந்து நோக்குவதும் பின் நகர்வதுமாக புற வாயிலை நெருங்கியது.

அங்கும் இங்கும் பார்த்தவாறே கதவை திறப்பதற்காக கைவைத்த போது கதவு 'பக்'கெனத் திறந்து கொண்டது. இதைச் சற்றும் எதிர்பாராத அவ்வுருவம் பொத்தென்று நிலத்தில் விழுந்தாலும் உடன் சமாளித்து எழுந்து கொண்டது. அகலத் திறந்த கதவின் வாசலில் பின்புறமான வெளியில் கர்ப்பூரம் போல நின்ற அவ்வுருவத்தை உள்நின்ற உருவம் உள்ளே இழுத்துக் கபாடத்தையும் சாத்தியது.

தொடரும்



திசேரா

சென்ற இதழ் தொடர்ச்சி...

# ஏவிவிடப்பட்ட கொலையாளி

## 14

ம்மா தான்
ன்னை....ம்.....ம்மா...கடக்கி...போய்...ப்பா
க்கு சாப்பாடு...ப்போ...ஓ...ஓ

அவனால் எதையும் சொல்ல முடியவில்லை; பழைய நினைவுகள் அவனைத் தோற்கடித்துக் கொண்டே இருந்தன. ஒவ்வொரு முறையும் தன் கதையைக் கூற முனையும் போதெல்லாம் வார்த்தைகளை இடைமறித்து எவ்வளவு முயன்றும் அவனால் தோற்றுப்போய் விடுவதைத் தவிர்க்க முடியாமலே இருந்தது.

அவனுடைய கால்கள் இரண்டையும் நடக்க முடியாமல் முழங்காலின் மீது நிலைத்துக்கட்டப்பட்டிருந்தது. நெற்றியிலும் கூட, அவை தூக்கி மின்சாரக் கம்பத்துடன் அடித்த போது நெற்றியும் முழங்காலும் மோதுண்டு நெற்றியின் வலது கண்ணுக்கு நேரே நெற்றி பலமாக தாக்கப்பட்டதுடன் வலது முழங்கால் சில்லு உடைபட்டது. இதனால் நிலை குலைந்த அவனின் கைகளில் இருந்து நழுவுண்ட அப்பா நீரினுள் அமிழ்ந்து போனார். இரண்டாம் நாளில் அவனுடைய அப்பா, அம்மா, தங்கை மூவரது பிணங்களும் வைத்தியசாலை சவக்கிடங்கில் கிடத்தப்பட்டிருந்தன.

இரண்டு மாதங்களாக கடுமையான நோய்க்கு ஆட்பட்டிருந்தவர் ஒருவார போராட்டத்தின் பின் கட்டிலுடன் நாட்களை கடத்திக் கொண்டிருந்தார். ஒவ்வொரு தினத்திலும் மெத்தை விரிப்பு மாற்றப்படும். பத்து நிமிடங்கள் வரை சாய்மனை கதிரையில் கிடந்து பின்னர் கட்டிலுடன் சங்கமாகி விடுவார். அவரை அறியா வண்ணமே மலமும், சலமும் போய்க் கொண்டிருந்ததால் நாற்றமெடுக்கும் மெத்தை விரிப்பையும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு ஒரு முறை மெத்தையையும் மாற்ற வேண்டி இருந்தது. ஆனாலும் அவரை காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கை இருந்து கொண்டே இருந்தது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அலை கரைக்குள் வருவது குறித்து தகவல் கிடைத்த போது இவன் அப்பாவிற்கு இடியப்பம் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்தான் பணத்தைக் கொடுத்து இடியப்பத்தை வாங்கிக் கொள்ளாமலேயே ஓட்டமெடுத்தவன் அம்மாவையும் தங்கையையும் முன்னே ஓடச் சொல்லிவிட்டு அப்பாவை தோளில் கிடத்திக் கொண்டு ஓட்டமெடுத்தான்.

'ஐயோ அம்மா நான் உன்னையாவது கூட்டிக் கொண்டு ஓடியிருந்தால் காப்பாற்றி இருப்பேனே... ஐயோ... ஐயோ...'

'உன்னைப்போல ஒருத்தரை இனி என்னால் காண முடியுமா?'

'ஏன் என்னைத் மட்டும் விட்டுத்து எல்லோரும் போனீங்க'

'நானும் வாறன் என்னையும் கூட்டித்து போங்கோ'

இப்படியே தான் அவனது புலம்பல் நீடித்திருந்தது. இரு கைகளையும் அடித்துக் கொள்ளும்போது மணிக்கட்டின் கீழ்ப்பகுதி ஒன்றுடன் ஒன்று தைபட்டு கீறும் தலையில் அடிபட்டதன் விளைவாய் அவனுக்கு பித்தம் கலங்கி விட்டதாக அதிகமானோர் கருதினர்.

இடுப்பு வரை நிறைந்த வெள்ளலை அப்பாவை தொடாமல் இரு கைகளையும் அப்பாவின் தலைக்கு மேலால் உயர்த்தி நீரைக் கிழித்து நடக்கும் போது தான் ஆணலை அவனைத் தூக்கி கம்பத்துடன் மோதியது. மறுநாள் அந்தி சாயும் வேளையில் நினைவு திரும்பியவன் அதற்கடுத்த நாள் மூவரையும் பிணமாய் கண்டதிலிருந்து வார்த்தைகள் எதுவும் சரியாய் எழாமல் தேற்றுப்போய் புலம்பல் வாயுடன் மட்டும் இருந்தான்.

அவன் பழைய நினைவுகளுடன் இயல்புக்கு திரும்பி விடுவான் என்பதில் பலருக்கு நம்பிக்கை இருக்க வில்லை. இன்று நாளை - அல்லது நாளை மறுதினத்திலாவது எப்படியும் ஒருவாரத்துள் எலிப்பூச்சி மருந்து என எதையாவது குடித்தோ, தூக்கில் தொங்கியோ இறந்து போய்விடுவான் என எண்ணிக் கொண்டிருந்தார்கள் சிலர் அவன் கடலில் மூழ்கி தன்னை சாகடித்துக் கொள்வான் என நம்பிக்கை கொண்டிருந்தார்கள். பழைய நினைவுகளில் மூழ்கிப் போன பலர் அப்படித்தான் கடலில் மிதந்தார்கள்.

## 15

மூன்றாம் நாளில் ஒளி மங்கிக் கொண்டிருந்த பொழுதில் என நினைக்கிறேன் தொண்டர்கள் அதிகமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். மரங்களிலும் - புதருக்குள் சிக்குண்டும் வாவி ஓரங்களிலும் கிடந்த பிணங்களையும் இடிபாட்டுள் மாட்டி இருந்தவற்றையும் மீட்டுக்கொண்டிருந்தார்கள். அதன் போது காயப்படும் அவர்களுக்கு உடனடியாக மருந்து கட்டிவிட அவர்களிடம் முதலுதவிப் பெட்டிகள் இருந்தன. தொற்று நோய் ஏற்பட்டு விடலாம் என்ற பயம் எல்லோரிடமும் இருந்தன.



மார்பின் இடது புறத்தில் இரத்தக் கறைகளுடன் வேகமாக வந்து கொண்டிருந்த இருவரை கண்டு கொண்ட தொண்டர்கள் காயங்களுக்கான மருந்தை வழங்க அவர்களை அழைத்தபோது இன்னும் பயம் கொண்டவர்களாய் ஓட்டமெடுத்தார்கள். எல்லோருக்கும் அவசரம் தலைக்கு மேல் இருந்தது. முக்காலுக்கு அதிகமான பங்கினர் வேகமாக பயணித்துக் கொண்டிருந்தார்கள். இரத்தக்கறையுடன் ஓடுபவர்களிடம் ஆபத்துக்கான அவசரத்தை கண்ட தொண்டர்கள் தொடர்ந்த போது முன்னே ஓடிக்கொண்டிருந்த இருவரில் ஒருவனிடமிருந்து விரலொன்று கீழே விழுந்தது. அதை எடுத்த ஒரு தொண்டன் விரல் விழுந்ததை ஏனையவர்களுக்கும் சத்தமிட்டான். வேகத்தை கூட்டி இடைவெளியில் குறைத்துக் கொண்டிருந்தபோது திசையில் பத்தவர்களுக்கு சைகை காட்டி இருவரையும் வளைத்துக் கொண்டார்கள்.

அவ்வளவரது கால்களிலும் விழுந்து மன்னிப்புக் கேட்டார்கள் தங்கள் வீடு விழுந்து - பொருட்களெல்லாம் போய்

குழந்தைகளுடன் சாப்பாட்டுக்கு சிரமப்படுவதாகவும் அதனால் தான் இப்படியான தொரு களவில் ஈடுபட்டதாகவும் இதற்கு அருகில் இருந்தவன் தான் யோசனை சொன்னதாகவும் ஒருவன் கூறிய போது இருவரும் அடித்துக் கொள்ள தொடங்கினர். தான் இன்று மட்டும் தான் வந்ததாகவும் நேற்றைய இரவில் தான் மற்றவன் தனது இப்படியான திருட்டு முறையை விபரித்ததாகவும் அவனின் பதினொரு வயதும் ஆறுவயதுமான இரு பெண் பிள்ளைகளுக்காக தன்னை மன்னிக்கும் படி கேட்டான். அதற்காகத்தான் இதற்கு ஒப்புக்கொண்டதாக கூறினான் தாயை இழந்தவர்கள் தவித்துக் கொண்டிருப்பார்கள் இருட்டும் வேளையில் தான் எப்படியும் அங்கு சென்று விட வேண்டும் இல்லாவிட்டால் அவர்கள் கவலை பன்மடங்காகி விடும் என்று மன்றாடிக் கொண்டே மேற்சட்டை, கால்சட்டை பைகளில் இருந்த விரல்களையும், காதுகளையும் அள்ளி வெளியில் போட்டான்.

சிறியதும் பெரியதுமாக எட்டு விரல்களும் நான்கு ஐந்து வயதுக்குரிய காதுகள் மூன்று உட்பட பதினொரு காதுகளும் சிதறிக் கிடந்தன எல்லாவற்றிலும் பல்வேறு நிறக் கற்கள் பதித்த மோதிரங்களும், பல வடிவுடைய காதணிகளும் தங்கத்தால் அணியப்பட்டிருந்தன.

கூட்டத்தில் நின்ற ஒருவன் மற்றையவனின் பைகளுள் இருந்தவற்றையும் அள்ளிப்போட பணித்தான் உணர்வற்ற நிலையில் எதையுமே கேட்க முடியாமல் பதினொரு காதுகளும் பத்து விரல்களும் விறைத்துப் போய்க் கிடந்தன இரண்டு கைச் சங்கிலிகளுக்கும் கூட...

முன்னவனிடம் இருந்த சோடிகள் இவனிடம் இருந்தன மொத்தமாக பதினொரு பேரின் இருபத்திரண்டு காதுகளும் கிடந்தன ஆருக்கோ காதாக வெட்டி எடுத்திருக்கிறார்கள். ஒன்று இரண்டில் தான் இரத்தம் கசிந்து இருந்தது அதுவும் பெரிதாக இல்லை மற்றவை எல்லாம் வெள்ளையாக சதைப் பிண்டமாக கிடந்தன.

இருவரையும் சுற்றியும் கூட்டம் அதிகமாக விட்டிருந்தது சிலர் மூக்குகளை பொத்திக் கொண்டு நின்றார்கள். சிலர் அவர்களை அடித்தார்கள் பாவிகள் கொலைகாரர்கள்



- இரக்கமில்லாதவர் போன்ற வார்த்தைகள் எல்லார் வாய்களிலும் இருந்து வந்தது. யாருமே மௌனமாய் இருந்ததாய்த் தெரியவில்லை காதுகளும் விரல்களும் அவர்களுக்கு கோபத்தை தந்தது.

மீட்புப் பணிக்காக ஓடித்திரிந்த வாகனம் இருவரை ஏற்றிக் கொண்டு சென்று விசாரணைக்காக கையளித்த போது அங்கும் முன்னம் பேசியவள் மட்டுமே பேசிக் கொண்டிருந்தாளாம்.

ஒரு பிணத்தில் நகைகள் இருப்பதைக் கண்டால் அந்த உடலின் பாலுக்கும் வயதுக்கும் ஏற்றதான ஒரு உறவு முறையைக் கூறிக் கட்டியணைத்து அழுது இருவருமாக தூக்கிச் சென்று மறைவான இடத்தில் வைத்து நகையை கழற்றிக் கொள்ள அவகாசம் போதாமல் போகும் போதும் நிறைய நகைகளை சேர்த்துக் கொள்ள வேண்டியும் அந்தப் பகுதியை வெட்டி விடுவார்களாம். அதற்காக கூரிய விரித்து மடக்க கூடிய கத்திகளை வைத்திருந்தார்களாம். காலை ஏழு மணி தொடக்கம் இது தான் இருவரது வேலையாக இருந்ததை கூறினாள்.

ஆனால் மற்றையவள் நேற்று தொடக்கம் இதைத்தான் வேலையாக கொண்டு நிறைய நகைகளை சேர்த்து விட்டதாகவும் நேற்று மட்டும் பத்துப்பவுணுக்கு அதிகமான நகைகளை சேகரித்து விட்டதன் ஆசையை காட்டியே இன்று என்னை கூட்டி வந்தாள் என்றாள்.

'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்பது அவளுக்கு தெரிந்திருக்கவில்லை கூட்டத்தில் ஒருவன் கூறியது எனக்கு ஞாபகத்துள் எட்டியது.

## 16

இலைகள் மாதிரியே பாவப்பட்டதும் சோகப்பட்டதுமான கதைகள் நிறையவே இருந்தன. ஊர் முழுதும் அலைகள் உலாவி வந்ததும் ஊர்களையும் நாடுகளையும் அவல நிரப்பி சர்வதேசமயமான சோகத்தை உண்டு பண்ணியதும் உங்களுக்கும் தெரியும். அதில் உங்களின் கதையும் ஒன்றாக காதுகளில் பட்டு மனதை கரைத்ததாக இருக்கும்.

இப்போது நீங்கள் அதை எங்களுக்கு கூறலாம். விருந்த கதைகளுடனும் கவனத்துடனும் அதைக் கேட்டுக் கொண்டே இருப்போம்.

## 17

அன்று எட்டாம் நாள்

கடல் - வெளி நேர் கோட்டுத்தளப்பிரிப்பில் கிரணங்கள் பெருக்கெடுத்த வேளையில் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்தது கொள்ளத் தொடங்கியது.

தூக்கப்பட்டிருந்த மலர்கள் மேலும் கீழும் ஆடிக் கொண்டு அந்தரித்தன. அலைகள் கடலுக்கானதாக ஒருபோதும் இராது. உப்பு நீரில் மூச்சைக் கரைத்து உருண்டுத்து போனவர்களுக்குத் தான் உன் நீர் நாக்குகளை நீட்டி இழுத்தெடுத்து ஊதப்போட்டு சதைப்பிண்டத்தை சப்புக் கொட்டியவள் நீ

பிரபஞ்சத்தின் பாதிக்கு மேலாய் நின்று எங்கும் பரந்திருக்கும் அங்காரம் லட்சத்துக்கு மேலாய் வாழ வைப்பதால் லட்சங்களை அழிக்க அதிகாரங்கள் கையளிக்கப்பட்டது. பாதகனே - வற்றி - சுருங்கி புள்ளியாய் போகையில் உன் நாவுக்கு சுவையூட்டி மலக்குழிக்குள் போவாய்.

பெண்களை சுகித்துப் புசிக்க
குழந்தை உடல் புக குடும்பம் கலைக்க
அத்தனை வேட்கை கொண்டவளே
பாசத்தை கொஞ்சமே நுகர முடியுமா
அல்லது நுகர்ந்து தான் இருக்கின்றாயா?

கனவுகளைத் தின்னும் கைங்கரியம் தெரிந்து உடப்பிட்டு சுவையூட்டி நக்கி வாழ்வை சூன்யப்படுத்தி போன உன்னில் கருவாடு மட்டும் மிதக்கும்.

அம்மா அப்பா தாத்தா பாட்டி
சித்தி சித்தப்பா பெரியப்பா பெரியம்மா
அக்கா அண்ணா தம்பி தங்கை
நண்பி நண்பன் காதலன் காதலி
மனைவி கணவன் மகன் மகள்
மாமா மாமி மச்சான் மச்சாள்
அண்ணி அத்தான் பேரன் பேத்தி

ஒருவரை அல்லது பலரை தின்றதற்காய் சபிக்கப்பட்டு கொண்டே இருந்தது.

தகிக்கும் ஒளிப்புலத்தை கடலில் மேய விட்டு ஆவியாக்கி பரப்பி விட கண் சிவந்து பழுத்த கடலை வெறித்த வண்ணம்.

மணற்பருக்கைகளால் கடலை நிரப்பி சுருக்கி நிலப் பரப்பை கூட்டி விட இரு கைகளாலும் மணலை கிளறி எறிந்து கொண்டும் கைகளில் அள்ளி கடலில் வீசியும் சிறுபிள்ளைகள் விளையாட்டில் பலர் மூழ்கி இருந்தார்கள் அவர்கள் அவர்களாய் இராமல் மரித்துப்போன உறவுகளுள் மூழ்கி இருந்தார்கள். தங்கள் எண்ணப்படி யாருமே செயற்பட்டுக் கொள்ளவில்லை.

லட்சம் மக்களை புதைத்து சலனமற்று இயல்பாய் ஆண் பெண்ணை நுரைத்தள்ளி விளையாட விட்டு சயனித்திருந்த கடலில் காறி உமிழ்ந்த நுரையும் கரைபேறி வந்தது. - போனது வருவதும் போவதுமாய் அலைந்து கடல்மேலேயே கிடந்தது - இது வெட்கமில்லாக் கடல்.

பருக்கைகளுள் விழுந்து - திரண்டு ஒழுகிக்கொண்டிருந்த கண் வழித்த உப்பு நீரும் கடலால் உறிஞ்சப்பட்டது. எதுவுமே



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனக்கில்லை யென்பதாய் விரிந்து கிடந்த கடல் பிண்டங்களையும், பூக்களையும், தேங்காய்ப்பாதி - பழம்- அரிசி வாழையிலை என எல்லாவற்றையும் சுமந்த வண்ணம் மூடப்படும் கருங்கிவிடும் புள்ளியாய் போகும் எச்சில் சுமக்கும் கண்ணீர்விடும் சாபத்துடன் இறந்து போன ஆத்மாக்களை தேடிக் கொண்டு சென்றது.

அன்றைய நாள் முடிவுறும்போதும் கடைசிக் கணம்வரை கடல் கலங்கடித்து பட்டுக் கொண்டே இருந்தது.

கிரணங்கள் உள்ளிழுக்கப்பட்டு வேறுதேசம் தேடி சூரியன் ஓடும் வரை தங்கள் உறவுகளை திருப்பித் தரும்படி அடம்பிடித்தவர்களும், சனத்துக்கு மோட்சம் வேண்டி பிரார்த்தித்தவர்களும், நினைவுகள் ஆழ்ந்து தொலைத்தவர்களும் தங்கள் தங்கள் காட்சிப் படிமங்களை நேரிடையாக கடலுக்கு காட்டி இரங்க வேண்டினார்கள்.

## 18

மன்னிப்பீர்
உங்கள் கருத்துக்களைப் போலவோ
எண்ணங்களைப் போலோ

நான் குற்றவாளியா
இல்லை உங்கள் தேசத்துள் நான்
ஏவி விடப்பட்டேன்

அதிகாரங்கள்
இன்றி அலையை விட எந்தக் கணமும்
நான் எண்ணியிருக்கவில்லை.

முழுவதுமாய்
எனை அடக்கிக் கொள்ள முனைந்தும்
பயனற்றுப் போனது

உங்கள் உறவுகளுடன்
நானும் தொலைத்து போனேன்
இயல்பு அழகு குலைந்து போனேன்.
எனக்குள் எனை அடக்காமை பற்றிய
வெட்கத்தில்
தலை குனிந்து கொண்டே இருக்கிறேன்.

உடலங்களை படிமங்களாக்கி
ஆழ் பகுதியில் அடக்கிக் கொண்டே
நொந்து வாழ்கிறேன்.

அன்றைய
அதிகாலைப் பகுதியில் உங்களைப்
போலவே ஆழ்துயிலில் இருந்து
கொண்டிருக்கையில்

படுக்கையின் கீழிருந்த தட்டுகள் விலகி
நான் உள்ளிழுக்கப்பட்ட கணத்திலேயே
வெளியே
தள்ளி எனது இடத்தைப் பிடித்து
ஒன்றுக் கொன்று மேலாக ஏறிக்
கொண்டன
அந்த அதிர்வு பேரதிர்வு அது நான்
அங்கிருந்து எனைத் துரத்தியது.
உங்களை நோக்கி ஏவி விட்டது.
கொலையாளி ஆக்கியது.

முழுவதும் கறுப்பாக்கப்பட்ட நான்
உங்கள் வீடுகளை உடைத்தேன்

உங்கள்
நிழலைக் கூட நனைக்காத நான்

நீங்கள்- அல்லது உறவுகள்
அமிழ்கையில்
மேலே தூக்கித்தள்ளி
மிதக்கப்பண்ணினேன்- மரங்களை
அண்மித்து பிடித்துக்கொள்ளச்
சொன்னேன்.
இது விநோதமாய் நடந்தது

கணப்பொழுதில் எல்லாமும்
நடந்து முடிந்தது நானே
ஓய்ந்து அமரும் போது
மனதுவலி கொண்டு தவித்துப்போனேன்
மன்னிப்பீர்! போற்று வார்
போற்றட்டும் மனம் வாரி
தூற்றுவார் தூற்றட்டும்

மறு நாள் காலையில் காலைக் கடன் முடிக்க சுற்றி அலைய என ஏற்கோ கடலின் பக்கம் சென்றிருந்தவன் நுரைகளால் செதுக்கப்பட்டு மீற்றா கணக்கில் நீண்டு கிடந்த எழுத்துக்கோர்வையைப் படித்து விட்டு காற்றில் கலைந்து விட்டான்.

சுழன்றடித்த காற்றுக் கூட்டம் சேர்த்து விநோதங் காட்டி கருத்துப் பகிர்வு செய்து ஓயும் போது காலடிகளும் அதிலிருந்து தெறித்து வீழ்ந்த பருக்கைகளும் நுரை குடித்து கடலில் குளித்து மயங்கி கிடந்தன. காற்று எந்தச் சலனமுமின்றி வெறுமையாக அலைந்து திரிந்தது நிர்வாணமாக.

## 19

முரட்டுத்தனமான நாட்கள் கனங்களாலும் நிமிடங்களாலும் நிரப்பப்பட்டு கூட்டங்களாலும் மாநாடுகளாலும் உருவாகிக் கொண்டே இருந்தன.

காற்றைக் கிழித்து வந்திறங்கி அலுமினியப் பறவைகளில் இருந்து இறங்கிய அந்நிய தேசத்து வெள்ளைநிற மனிதர்களால் தக்கென பிழைத்து வாழ்வதற்காக முதலைகளுக்கான மாநாடுகள் கூட்டப்பட்டன.

இரகசியம் நிறைந்த பெட்டகங்கள் அவர்களுக்கு கையளிக்கப்பட்டன அதைத்திறப்பதற்கும் பேணுவதற்குமான அறிவுறுத்தலடங்கிய வழிகாட்டல் நூல்களும் வகுப்புக்களும் நடத்தப்பட்டன.

எல்லோரும் ஒன்றாயே கூட்டமாக இருக்கையில் - உணவுகளுக்காக ஒருவரை ஒருவர் தாங்களே மாறி மாறிக் கிழித்துக் கொள்ள நேரும். அதோடு ஆபத்தின் முன் கிழிக்கப்பட்ட முகத்தை ஒழித்துக் கொள்ளவும் தப்பித்தலும் சிக்கலை அளிக்கும் சிறு கூட்டமாகி வெவ்வேறு பகுதிகளை ஆளுமை செய்வது பற்றி கருவளக்கலும் நடத்து கொண்டிருந்தன.

கூர்மையற்றதாக தென்படும் பற்களும், கலங்கிய கண்களும் நெகிழும் மனமும் சாந்த முகமும் அவசியமாக தேவைப்பட்ட ஆயுதங்களெனவும் கண்களை திறந்து கொண்டு மிதந்து நகரும் பழக்கமும் பயிற்றப்பட்டன.

முதலைகளெல்லாம் பதுங்கி தங்கள் நிழலை தாங்களே தின்று கரைந்துள் நகரத் தொடங்கின.

இது எழுதி முடிக்கையில் வயிறும் கண்ணும் பருத்து இறக்கை முளைத்து பறந்து திரிந்த முதலைகள் மட்டும் தான் தென்பட்டன.

பிற் குறிப்பு:

இரகசியம் பேணுக

இப்போது குழந்தை - முதலைகள் பிறக்கும் போதே இறக்கையுடன் பிறக்கிறன.

முதலையாய் பிறக்க வரம் வேண்டி
உடம்பெல்லாம் முந்நூறு நாள்கள் நுனி விரலில்
நின்று தவம் புரிந்துகொண்டிருந்தனர்.
அவைகளுக்கு சகல தகைமை பதவிகளையும்
ஒப்படைப்பதென ஆலோசனை
நடத்தப்பட்டன இவ்வாறே கனா பேசிக்
கொண்டது

முற்றும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# வாழ்ந்தவர்

தேவபானு

கதிரவன் கூட ஆத்திரமாகத் தான் எரித்துக்கொண்டு இருந்தான். பல மைல்கள் சைக்கிளில் பயணம் செய்த களைப்பு அவரது முகத்தில் நனித்துளியாய் அரும்பியிருந்தது. வீட்டின் பூ மரங்களும் அதன் அழகும் அவரைக் கை நீட்டி அழைக்க, மாமரத்தின் கீழிருந்த கூடைக்கதிரையில் புத்தகத்தை எடுத்துவிட்டு அமர்ந்தவாறே புரட்டியபோது.... அந்த அலைக்குரல் காட்டுத் தீயை விட வேகமாகப் பரவியது ஊரெல்லாம் அவரைப்பற்றித்தான் ஒரே பேச்சு! ஏனோ தெரியாது, நேற்று எப்படியிருந்தவர் இன்று "என்ன நடந்தது திடீரென்று எவ்வளவு அன்பாகக் கதைப்பார், எவ்வளவு பண்பாகப் பழகுவார்" அவர் என்றால் எத்தனை சின்னஞ்சிறுசுகள் "தாத்தா.. தாத்தா" எனக் கூப்பிட்டிருக்கும். எத்தனை பேர் அவருக்குப் பின்னால்... "தன்னம்பிக்கையோடு நல்ல பாவி" என்றால் எல்லோருடைய வாயும் "ஐயாட்டப் பென்சியோ" என்றுதான் சொல்லும்.

பால்க்கார ஐயா, என்றால் அந்த ஊரில் தெரியாதவர்களே இருக்க முடியாது. அவர் மாடுகளை காலையில் மேய்ச்சலுக்கு கொண்டு போவதும், மாலையில் வீட்டுக்கு அழைத்து வருவதுமாக இருப்பார். ஒவ்வொரு பசுவிற்கும் 'இலட்சுமி, பார்வதி' எனப் பெயர்களை வைத்து அவைகளுடன் பேசுவார். வயதுக் கேற்ற தோற்றம் அவரை அணுக அவர்விரும்பாவிட்டாலும் தானாகவே முதுமை அவரை அணுகிக்கொண்டது. மருத்துவக் மாணவர்கள் இவரைக் கண்டால் நிச்சயமாக பகுதி பகுதியாகப் பிரித்துப் படிக்க வேண்டிய தேவையின்றி முழு மனிதனாக நிறுத்திப் படிக்கக்கூடிய தோற்றம். உடல் மெலிந்திருந்தாலும் அவர் உள்ளம் மட்டும் பெருங்கடலாகவே பரந்து நிறைந்தது.

ஆங்கிலம், சிங்களம் போன்ற பிற மொழிகளில் சரளமாகக் கதைப்பார். உண்மையாகக் கோபப்பட்டால் கூட, அவர் மனம் மற்றவர்களை ஏசுவதற்கு அனுமதிக்காது. சிறு பிரச்சனையென்றாலும் அதற்குத் தீர்வு காணவேண்டும் என்பது அவரிடம் ஆழப்பதிந்த ஒன்று. தன்னுடைய பொழுதை ஒரு நிமிடங்கூட வீணாகக் கழிக்க மாட்டார். என்றைக்கும் தான் கற்றதை பிறருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்றுதுடிக்கும் அவர் மனம். நான் இவ்வுலகில் அடைகின்ற பயனை மற்றவர்களும் அடையவேண்டுமென நினைப்பவர். சின்னப்பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக்கொடுக்கும் அழகை பார்ப்பவனை, தானும் ஒன் சின்னப்பிள்ளையாக இருந்திருக்க கூடாது என எண்ணி பொறாமைப்பட வைக்கும். வீட்டில் என்ன வேலையிருந்தாலும் "ஐயா", இந்த வேலையை முடிக்க



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



ஒளிப்படம்: நெதல்

முடித்துத்தரவேண்டும்" என்று யார் கேட்டாலும் முதன் முதலாக வெளிக்கிடுகின்ற மனிதர்களில் ஊரில் முன்னுக்கு நிற்பவர் இவர் தான். இவரைப் பார்த்துச் சில சுய நலமான கண்டபேச்சுகள்' பொறாமைப்படுவதுமுண்டு. ஆனால், இப்படியான பொறாமை என்னென்ன செய்யப்போகிறது என்று துணிந்து செயற்படுகின்ற ஒரு மனிதர் தான் அவர். மக்களுக்காகத் தினமும் பாடுபடும் மனிதனை யார்தான் என்ன செய்ய முடியும் இடையிடையே இப்படியான தடங்கலை நேரடியாகச் சந்தித்தாலும் இவர் பின் நிற்பதில்லை. ஒரு வேலையாக வெளியே போனவர் வீடு திரும்ப நீண்ட நேரமாகியிருந்தது. மக்களுக்காகத் தினமும் பாடுபடும் மனிதனை யார் தான் என்ன செய்ய முடியும்? இடையிடையே இப்படியான தடங்கல்களை நேரடியாகச்சந்தித்தாலும் இவர் பின்நிற்பதில்லை. தமக்கென்றொரு தனியான கௌரவம், தமக்கென்றொரு இடத்தை ஊர்மக்களிடம் கல்லெட்டாகப் பொறித்திருந்தார்கள். அவர் மனைவி, 'மதியம் சாப்பிடக்கூட வராமல் அவருக்கு என்ன ஊர் உத்தியோகம் வேண்டிக்கிடக்குது இவருக்கு ஒண்டென்றா யார் வருவாங்களாம்; ஊருல உள்ள மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை அவருக்கு எங்கிருந்து தான் வந்ததோ தெரியாது' என்று சலித்தவாறு சோற்றுப் பானைக்குள் நீரை ஊற்றியவள், கலைந்த தனது கேசத்தைப்பிடித்து ஒரு உருட்டு உருட்டி உச்சந்தலையில் அமர்த்திவிட்டு, மூத்த பெத்தியானுவை தூக்கிக்கொண்டு போய் படுக்கையில் சரிந்தாள்.

கடும் இருள் மரங்களெல்லாம் பூதங்கள் பெரிதாகக் கைவீசுப்பது போல் கிளைகளைக் காற்றில் தலைவிட்டவாறு நின்றன. இடையிடையே இருளைக்கிழிக்கும் ஒலிகள், திடீரெனப் பறவை கீச்சிடும் சத்தம், வண்டுகளின் இரைச்சல், தவளைகளின் இடைவிடாத சத்தம். மின்னல் இடையிடையே பல்லாவிளுடாக வந்து போனது. மழைத்துளிகள் பெரிதாகச் சிறுங்கத் தொடங்கின. மழையோ வேகம் பெய்யத்தொடங்கியது. இடிமுழக்கம் சுவரைப் பிய்த்துவிடுமாறு போல முழங்கியது" தன்னை நிதானப்படுத்தி காதைக் கூர்மையாக்கி குரல் வந்த திசையைநோக்கினார்.

"பால்கார ஐயா, ஒடி வாங்கோ என்ர பிள்ளையைக் காப்பாற்றுங்கோ" அலைமையூரான் துன்னிவெழுந்தவள், விளக்கை ஏற்றவும் அவர் மனைவி கண்விழிக்கவும் சரியாகவிருந்தது.

அப்போது தான், தான் எப்போதோ நித்திரையாகிவிட்டேன் என்பதைப் புரிந்து கொண்டான். வெளியே சென்றவர், திரும்பி வந்த வேகத்திலேயே அவருக்குப் பிடித்த மென் நீலநிற அரைக்கை சேட்டை எடுத்தவாறு "ராமுவின்ர மூத்தவளுக்கு ஏதோ வயிற்றில் கடுமையான வருத்தமாம் என்று கத்துறாணம். அவளைப்பொருக்கா உமா டொக்டரிட்டக் கொண்டு போய்க் காட்டிப்போட்டு வாறன், நீ கவனமாயிரு" என்றவாறு, அவளைப்போ, அவரது பதிலைப்போ எதிர்பாராது விரைந்தார். அப்போது அவன் ஆத்திரப்படவில்லை.

"எவ்வளவு படிச்ச பெண், இவருக்கென்றெண்டால்.. அந்த மனுசன் கஷ்டப்பட்டுப் படிப்பிச்சது வீணாகிப் போயிடுமோ அதுவும் அவங்களிண்ர பள்ளிக்கூடத்தால முதன்முதலாக மகளாண மட்டத்தில் விளையாடுறதுக்குத் தெரிவு செய்திருக்கிறாங்கள், கடவுளே காப்பாற்றிவிடு, அவருக்கு ஒன்றும் நடக்கக்கூடாது' என இறைவனை வேண்டியவளை "போய்விட்டு வாங்கோ" என்கடிதினாள்.


பொழுது புலர்ந்து விட்டது. முற்றத்து மல்லிகையின் மணம் அவளது நாசியைத் தாக்க, கண்விழித்தவள் திரும்பிப்பார்த்தாள். அருகே கணவனைக் காணவில்லை. இன்னும் வரவில்லை நினைத்துக்கொண்டு எழுந்து முகத்தைக் கழுவியவள், பால்கறக்க செம்பையும், தண்ணீர் வாளியையும் தூக்கியவாறு பட்டியை நோக்கி நடந்தாள். தற்செயலாக வண்டில் கொட்டிலை எட்டிப்பார்த்தவள், சுதந்திரமாக வண்டிலில் படுத்துக் கிடந்தவரைக் கண்டு, களைப்பு, வேலைகளின் கனம் இவற்றின் மிகுதியால் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டாள். அவரை மெதுவாகத்தொட்டு அசைத்த போது, மீண்டும் புரண்டு படுத்துக்கொண்டார். பாலை பானைகளில் ஊற்றிவைத்துவிட்டு பாலுவைப் பார்க்க வீட்டினுள் நுழைந்தாள். கால்மேல் காலைப்போட்டு இரு கைவிரல்களையும் கிடுகு போன்று பின்னி வைத்து ஏதோ பெரிய ஆராய்ச்சியில் இருக்கும் விஞ்ஞானியைப்போல் படுத்திருந்தவனின் அழகை எவ்வளவு நேரந்தான் இரசித்தவாறு நின்றுகொண்டிருந்தாளோ.

"ஐயா.... ஐயா", என்ற குரல் என்றுமில்லாதவாறு பலமாக அவள்காது படலையில் ஒலித்தது. அக்குரலில் அதிகாரமோ, அன்போ கலந்திருக்கவில்லை. பாலில் நீர் கலந்திருப்பது போன்று ஏக்கத்துடன் கூடிய அவலம் நிறைந்ததாகவே ஒலித்தது. இவ்வொலியை மீறியது 'நாயின் குரல்'. இவனது குரல் காதை அடைக்க "யப்பா இந்த நாய்குரைக்கிறதெண்டு தெரியாது சத்தம் போடாதே" என்றவாறு படலையை நோக்கி நடந்த அவளது கால்கள் ஏனோ தட்டுத்தடுமாறின. நடக்க மறுத்தன. நரம்புகளெல்லாம் ஏதோ ஒர் உணர்வு ஏற்படுவது போன்ற தன்மை. அவளது அகத்தை உறுதிசெய்யக்கூடியவாறே கலைந்த கேசம், கண்ணீர் வடித்து கொண்டிருக்கும் முகம், எதுவோ இருந்து விட்டோம் என்கூறும் கண்கள், வாய்விட்டு அழமுடியாத வேதனையில் வாயைப்பொத்தியவாறு நின்ற ராமுவைப்பார்த்தும் அவளது மூளை மின்னலையில் வேகமாகத் தொழிற்பட்டது.

* முருகேசர் எழும்புங்கோவன் நீங்கள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



போய் அவனை கதையுங்கோ. அவனைப் பார்த்தா ஏதோ நடந்திட்டது போலக்கிடக்கு" என்றவனை, முறைத்துவிட்டு, "இப்ப என்ன? நீயே இவ்வளவு அவசரமாய் ஊர் வேலைக்கு அனுப்பித்துறுக்கிறாய்" என வெளிப்பூச்சாகக் கேட்டவர் வெளியே வர, ராமு அழைக்கப்படுவாறு கதறத் தொடங்கினான். தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டவர், "நடந்தது நடந்திட்டுது. நீயே இப்படி அழுதுகொண்டிருந்தால் வீட்டுக்காரரை எப்படிச் சமாதானப்படுத்த முடியும்" என்றவாறு, தனது கைகளால் அவனது கண்களைத் துடைத்தவாறே சேர்த்தணைப்பும் சரிசெய்துவிட்டு, அவனுடன் அவனது வீட்டை நோக்கிப் புறப்பட்டார். என்னால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. அரைமணித்தியாலம் முந்திக்கொண்டு போயிருந்தாலும் இன்றைக்கு உயிரோட இருந்திருப்பான் என்னால் ஒரு உயிரை வாழவைக்க முடியவில்லையே நல்ல நல்ல பண்பான பிள்ளையைப் பறிகொடுத்திட்டோமே என அங்கலாய்த்துக்கொண்டே சென்றது. "வல்லண்ணை... எனக்கு ஏதோ சொல்லிப்போட்டு நீங்க யோசிக்கிறியள். எப்ப உங்களிர சொல்லைக் கேட்டேனோ அப்பவே ஏராவுக்குத் திடப்படுத்திப்போட்டன். இல்லாட்டி நானும் போய் ஒரு மூலையில குந்திவால். ஏதுவுமே அங்க நடக்காது. என்னென்டாலும் வீட்டில நான்தான் வேணும். நானில்லாட்டி ஒன்றும் ஒழுங்காக முடியாது" என்றபோது, அவனுக்கும் தனக்குமான கௌரவ இடைவெளி நீண்டிருந்ததை உணர்ந்து கொண்டார். "என்ன வருத்தமாம் அவனுக்கு?"

"அது... புற்றுநோயாம்"

வீட்டை அடைந்தவர் அவர்களுடன் சேர்ந்து ஏதோ கிடைத்ததைக் கொண்டு கிரிகைகளை ஒப்பேற்றி, தனது கடமையை முடித்த மனநிறைவுடன் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். அப்போது வழியில் வந்த நண்பர், "என்ன... ராமு வீட்டை போயிட்டுப் போறியள் போலக் கிடக்கு" "ஓம்" என்றவாறு நடுவை பார்த்தவரை விடாது "இவன் செத்ததை நினைச்சாத்தான் கவலையாயிருக்கு" என நீண்ட பெருமூச்சுடன், "சரி அண்ணை" என மிருதுவாய் விழுங்கியவாறு புறப்பட்டார். சந்தியைக் கடந்து ஆலமர நிழலை அடைந்திருப்பார் சில இளைஞர்களது கேலிப்பேச்சு அவரது காதுகளைத் தாக்கின.

"இப்ப ஐயா வீட்டுக் கிணற்றில தண்ணி இல்லையாம்"

"ஏன்ரா"

"பல் யாபாரம் எல்லோ செய்யிறார்"

என்றதுதான் தாமதம், கண்கள் கொவ்வைப் பழம் போன்று மாறின. இரத்த ஓட்டம் முன்னைவிட வேகமாகியது. உதடுகள் துடித்தன. உறுத்தும் விழியைத் திருப்பியது தான், அந்த இடம் இளைஞர்களால் விரைவாகக் காலி செய்யப்பட்டிருந்தது. "ஏதோ போறதுபோகட்டும்; நான் நல்லவனுக்கு நல்லவன் கெட்டவனுக்கும் நல்லவன்" என்றவாறே பக்கத்து வளவிற்குள் காய்த்துக் குலுங்கிய மாமரத்தைப் பார்த்தவாறு வீட்டை அடைந்து, தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு, அமர்ந்தவர் மீண்டும் எழுந்து 'அக்கினிச் சிறகுகள்' புத்தகத்தை எடுத்து அதனோடு மூழ்கிவிட்டார். பொழுது மறைந்தும் புத்தகத்திலிருந்து விடுபட அவரால் முடியவில்லை. தற்செயலாகத் திரும்ப தேநீர் கோப்பை கண்ணில்பட்டது. எப்போதோ தேநீர் வைத்துவிட்டுப்போனது. அப்போதுதான் ஞாபகம் வர எடுத்து ஒரே இழுவையாக இழுத்துவிட்டு நிமிர்ந்தார். கோயில் வேலை செய்தவர்களுக்கு இன்னும் முடிக்கவில்லையென்பது அருகில் தொங்கிய புத்தகப்பையைக் கண்ட போதுதான் நினைவுக்கு வந்தது. கணக்கு வேலையை எடுத்துப்போட்டுக் கொண்டு தொடங்கினார். ஓடிவந்த பாறு அவரது தோள்களைப் பற்றியவாறு "எங்க அப்பா? போனீங்கள்... நான்வீட்ட நிக்கிறன் என்னோட கதைக்காம அவ்வளவு வேலை, உங்களுக்கு இப்ப வேலை கூடிற்று. அப்பம்மாவோட போய் சண்டையுங்கோ" என்றவாறு முத்தமிட்டவன், அவரது பேனாவை எடுத்துக்கொண்டு ஓட முற்பட, எட்டிப் பாய்ந்து பிடித்துக்கொண்டார். தனது மழலைச்சிரிப்பைப் பணயமாக வைத்துவிட்டு பேனாவை மெதுவாக வாங்கிக்கொண்டு அப்பம்மாவிடம் ஓடினான்.

சோர்வு மேலிட, இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு பாறுவைத் தூக்கிக்கொண்டு படுக்கைக்குப் போனார். இரவு வெகு நேரமாகியும் அவரால் வழமைபோல் உறங்க முடியவில்லை. கண்கள் மூடினால் இருட்டாக இருக்கிறதே தவிர அங்கே தூக்கத்தைக் காணமுடியவில்லை. அது எங்கோ தற்காலிகமாக ஓடி ஒழிந்திருந்தது. முன்னைய நாள் அவசரமாகப் போனதிலிருந்து இரவு படுக்கை வரை அவரது மனம் அலைமோதிக்கொண்டிருந்தது. பிள்ளைகளின் அன்பு கலந்த கண்டிப்பு, "ஒரு வேலையும் செய்ய வேண்டாம். சாப்பிட்டுப்போட்டு" பிள்ளைகளுக்காக நான் வாழ்ந்தேன், இப்போ எனக்காகப் பிள்ளைகள் வாழ்கின்றார்கள். நான் அவர்களுக்காக வாழவேண்டும் எனக்கண்களை மூடினார்.

காலைத் தேநீருடன் சென்ற போது அவளுக்கு உண்மை தெரிந்தது. நேரடியாகவே தன் கண்களால் கண்டுகொண்டவர்களுக்கு அவளது கண்களையே நம்பமுடியவில்லை. என்றுமில்லாதவாறு படுக்கையிலிருந்து விலகி வெறும் நிலத்தில் சோர்வாகப் படுத்திருந்தார். என்ன ஒரு நாளும் இல்லாதபடிக்கு, இப்படிப் படுத்திருந்ததை என்ர வாழ்க்கையில் காணவில்லையே வேலை அலுப்போ பாயை விட்டு விலகினது கூடத் தெரியா அந்தளவு நித்திரை அவருக்கு என நினைத்தவள் கையை அவர் தோளில் வைக்க, அவர் உடல் சூடிழந்து வெகுநேரமாகியிருந்ததை உணர்ந்து கொண்டாள்.

சித்தா என பாறு அழைக்க, தனது கையிலிருந்த தந்தையினுடைய ஓராண்டு நினைவு மலர்மீது படிந்திருந்த பார்வையைத் திருப்பி அவனைத்தூக்கி முத்தமிட்டவாறே

"அம்மா என்னடா செய்யிறா"

"அவ சமைக்கிறா சாப்பிட்டுப் போகட்டாம்"

"அம்மாக்கு என்னென்டு தெரியும், நான் வந்தது"

"நீங்க புத்தகம் படிச்சுக்கொண்டிருந்ததைக் கண்டவாவாம். அது நான் சொல்லி விட்டனே இது என்ன சித்தா பாப்பம்" எனவேண்டிப் புரட்டியவன்,

"எங்களின்ர அப்பா" எனக் கூறித்தனது கன்னங்களுடன் அணைக்க, அவளால் அவனது கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

■



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# கனதி

அங்கே ஒரு பாடை
ஆடியாடிப் போகிறது.

கனத்துப் பாடல்
கருமையாய் மூடியுடையும்,
சத்தக்கோடு சரவெடிகள்
சடசடத்துக் கொள்ளவும்
கட்டைக் கொள்ளியும்
கனத்த மட்டுமாய்
கனமானது தோள்தாங்கி நகர.
கனவுகளின் வெற்றிடமென்று
கடப்படி கடக்கிறது.

கற்பனை நான்கும்
கடர் படர்ந்த பின்னர்
பட்டெனப் பறந்து போயின
...களில்...

நீ
கட்டிய கூட்டில்
அலைந்து திரிந்த காலடித்தடங்கள்
கதைபேசிக் கொண்டன.

பொழுதுகளில் தனித்துப் போன - என்
ஆன்மாவின் பாடல்களாய்...
ஏதேதோ எண்ணக்கருக்கள்
உன் காலம் பற்றியதாய்..

சுழலும் பூகோளப்பந்தின்
உருளும் சக்கரமாய் உன் பயணங்கள்.

தேவைகளில் பூர்த்திகள்
எதிர்பார்ப்புகளற்ற தன்னிறைவுகள்

ஒரு கூடலை நீ...
ஓய்ந்து போய்விட்டால்
ஒடுங்கிப் போய்விடுகிறது
கூட்டின் எல்லாமும்.

பலகூடலை பார்த்திருக்கின்றேன்
அர்த்தப்படுக்கைகள் கூட
பச்சுவப்படுகின்றன - உன்
பாச இருப்புக்கள் கண்டு

சந்தை மசலிற்கிடையில்
தர்க்கங்கள் தீர்க்கும்
சமாதான மூலகம்

ஆக்கிப்போடுதல் மட்டுமா
உனது இலக்கு - தன்
ஆசைகளை அடைவு வைத்த
அதிசயப் பிறவி

அவைத்து ஆசிக்கும்
அர்த்தம் கற்பிக்கும்
ஆதிமூலபாத்திரம்.

ஆசை அனுபவங்களிலும் சிக்கும்
அபூர்வ சித்திரம்

வேலிக்கிளுவையிலிருந்து
ஏதோ சொல்லிக் கரைந்து விட்டுப் போகிறது
அடிக்கடி வந்து பழகிப் போன
அந்தக் காகம்

அறுபது அகவையில்
தன் அறுவடைகள் தலைக் கூந்து
அந்தப்பாடை
ஆடியாடிப் போகின்றது.

நா.தானகன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"வணக்கம்" சொல்லிவிட்டு தன் அலுவல்களில் கவனம் செலுத்தினார் வைத்தியலிங்கம். அவர்மேல் வைத்த பார்வையை அகற்றாமல் "என்னைத் தெரியவில்லையா" என்று கேட்டு புன்னகைத்தார் பொன்னம்பலம்.

அந்தக் கேள்வியில் வியப்புற்று எழுந்து நின்று அவருடைய முகத்தை கூர்ந்து பார்த்து வைத்தியலிங்கம் ஓ... ஓ... தெரியுது நீ... நீ... பொன்னம்பலம். நான் முதலில் கவனிக்கவேயில்லை, "மன்னிக்கவும். இருங்கோ தயவுசெய்து" என்றவாறு எதிரே கிடந்த கதிரையைச் சுட்டினார்.
"எப்படிச்சுகம்... நீங்கள் இங்கேதான் வேலைசெய்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதே. வந்திருப்பது பொன்னம்பலம் என்று தெரியாது இன்றைக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் வருகின்றார் என்று மேலாளர் சொல்லியிருந்தார். அது நீங்கள் தான் என்று குறிப்புணராது வரவேற்றேன் ஆனால் வந்திருப்பவர் முன்னரே எனக்குத் தெரிந்தவர் என்பதில் எவ்வளவு மகிழ்ச்சி. எத்தனையாண்டுகளுக்கு பிறகு சந்திக்கின்றோம், எப்படி நலமாய் இருக்கின்றீர்களா?" வைத்தியலிங்கம் ஒருவித பாசஉணர்வோடு பொன்னம்பலத்தைப் பார்த்தார்.

போன நூற்றாண்டில் பிரிந்தோம். இந்த நூற்றாண்டில் சந்திக்கின்றோம். 30, 35 ஆண்டுகளுக்குப் பிறகு இடையில் எத்தனை மேடுபள்ளங்களைக் கடந்திருப்போம்; ஆனாலும் இப்போதிருக்கும் நிலையில் நலம் என்றுதான் சொல்லுவேன். அந்த இளமை நாட்கள் எவ்வளவு துடிப்பானவை.. ஆங்கிலம் படியாத சுயபாஷை சிங்கள ஊழியருடன் அரைகுறை சிங்களத்தில் தமிழர் உரிமை பற்றிப்பேசி சண்டையிட்டுத்த காலம் அது வழமையாக வெள்ளைக் கலிசான் சேட் அணிந்து அலுவலகம் வரும் அரசபணியாளர்கள் நடுவில் 'தமிழன்' என்று தன்னை இனம்காட்டி வேட்டி சட்டை, சால்வையுடன் விறுநடையில் வந்த அவரும் பொன்னம்பலமா இன்று சற்றே கூனலும் களைத்த முகமும் நரையும் மீசையுமாய் கண்ணெதிரே இருக்கின்றார் என்று வியந்த வைத்தியலிங்கம் "உங்களுக்கு இப்போதைக்கு 70 இருக்குமா?" என்று கேட்டார்.

"72"

"என்னைவிட இளமை, எனக்கு 74; இருவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டல்லவா... இருவருமே "பண்டாரநாயக்கா புகழ்" சிங்களம் மட்டும் பொறியில் அகப்பட்டவர்கள், ஆனால், நீங்கள் என்னைவிடத் திறமைசாலி முதற்தடவையிலேயே வகுப்பு இரண்டுப் பரீட்சையில் சித்தியடைந்தும் கூட, பதவி உயர்வுக்கு சிங்களத் தகுதிதேவை என்ற எழுதப்படாத சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால், அது தமிழ்ப்பணியாளரின் உயர்வைத் தடுக்கும் சதித்திட்டம் என்று அதிகாரிகளுக்கு உணர்த்தவே அலுவலகத்தில் பலரும் வியப்புடன் பார்த்திருக்க அந்த பதவியை விட்டு விலகும் கடிதத்தை தமிழில் எழுதிக்கொடுத்து விட்டு வெளியேறியவர் அல்லவா?

"வைத்தி போதும் புகழ்ச்சி"
"சொல்லுங்கோ வேலை இழந்த பிறகு நீங்களென்ன செய்தீர்கள்!"
"கதைச்செய்திருப்பேன்" பெட்டியைத் தூக்கிக்கொண்டு யாழ்தேவியில் வீட்டுக்குத் திரும்பினேன், சில நாள் ஓய்வெடுத்தபின்பு தனியார் கம்பனிகளிற்கு விண்ணப்பித்தேன். எங்கிருந்தும் பதிலில்லை, 'பட்டகாலிலே படும் கெட்ட குடியேகெடும்' என்பதுபோல நகைகளை விற்று சாப்பிட்டும், சிலவேளை பட்டினிகிடந்தும் படாதபாடுபட்டேன்; சோதனையான காலம். இரண்டு வருடம் கழிந்த பிறகு ஒருவிதமாய் ஒளிக்கீற்று ஒரு பத்திரிகை வடிவில் தெரிந்தது. 'தமிழ் உலகம்' பத்திரிகையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஒரு கம்பனி முதலாளி அதை ஆரம்பித்தார். என்படைப்புகள் பிரசுரமான பத்திரிகை நறுக்குகளை எடுத்துக் கொண்டு அவரைப்பார்க்கப் போனேன், நான் ஒரு எழுத்தாளன் என்று உங்களுக்கு தெரியுமா என்ன?

"ஓ. தெரியும். பத்திரிகைகளில் வரும் உங்களின் கதை, கட்டுரைகள் கண்ணில் பட்டால் தவறாது படிப்பேன்; நாவலர் மண்டபத்தில் உங்கள் புத்தக வெளியீட்டு விழா என்று பத்திரிகைகளில் பார்த்தேன். வரவிரும்பியும் எதிர்பாராத ஓர் அலுவலால் வரமுடியாமல் போயிற்று அந்தப்புத்தகம் இருந்தால் ஒன்று நான் வாங்குகிறேன்"

"நன்றி"

"பிறகு உங்கள் எழுத்துக்களை பார்த்த முதலாளி என்ன சொன்னார்"

"பார்த்துவிட்டு வேறு கேள்வியில்லை ஆசிரியர் குழுவில் நீங்களும் ஒருவர் என்றார். பத்திரிகை வளர்ச்சிக்கு உழைப்பது உங்கள் பொறுப்பு என்றார். ஆறுமாதம்போக இப்பொழுது தரும் சம்பளம் இரட்டிப்பாகும் என்றார். அவர் சொல்லை நம்பி நாளும் கூடுதல் நேரம் உழைத்தேன்; ஒருவருடம் ஆச்சு சம்பள உயர்வைப்பற்றிக் கதைத்தால், விற்பனை கூடவில்லை விற்பனை உயரட்டும் பார்க்கலாம் என்பார்; என்னைப்போலவே இன்னும் சிலர் சம்பளமின்றியாக வெறுப்படைந்த நிலையில் இருந்தனர், அந்நாளில் மற்றொரு நாளிதழ் வரஇருப்பதாக சுவரொட்டிகள் தெரிவித்தன. நாங்கள் சிலர் சேர்ந்து 'தமிழ் ஒளி' என்ற பெயரில் வெளிவரவிருந்த அந்தப்பத்திரிகையின்

# தன்மானம்

எஸ்.பி.கிருஷ்ணன்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆசிரியரைச் சந்தித்தோம். அவர் எங்களை மகிழ்வுடன் வரவேற்றார். எனக்கு அங்கே உதவி ஆசிரியர் பதவி கிடைத்தது. நல்ல சம்பளம். ஈழத்துப் படைப்புக்களும் தமிழ் ஒளி வாரமலரை அலங்கரித்தன. அங்கே வேலைசெய்து கொண்டிருந்த காலத்தில் இந்தியப் படைவந்து அச்சியந்திரத்திற்கு குண்டுவைத்தது. 150பேர்வரை வேலை இழந்தோம். அடுத்த சிலமாதங்கள் உழைப்பில்லாமல் அலைந்து கொண்டிருக்க *'திசை'* என்ற வாரஇதழ் என்னை ஏற்றுக்கொண்டது. ஆறுமாதத்தின் பின்னர் வெளிவந்த புதிய தேசிய நாளிதழுடன் இணைந்தேன். அங்கே இருந்த போதுதான் மொழிபெயர்ப்புத் துறைக்கு என்னை அழைத்தார்கள். இரண்டு வருடத்திற்கு பின்னர் மாற்றம் நாடி நிர்வாக சேவையில் சேர்ந்து நிர்வாக உதவியாளராக பணியாற்றினேன். அங்கே இருக்கும் போதுதான் அந்த ஒக்ரோபர் 10 வரலாறு இடப்பெயர்வு நடந்தது. அலுவலகம் பூட்டப்பட்டது. தென்மராட்சிக்கு வந்து சேர்ந்தோம். அடுத்த ஏப்ரல் 19 இல் எதிரி சாவகச்சேரிக்கு கிட்டவந்து விட்டான். கச்சாய் நோக்கி நடந்தோம். கிளாலிக்கடலை ஒரு இரவே கடந்து கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தோம். ஆக இன்று வரை இங்கேயே இருக்கிறேன்.

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?"

எனக்கு நான்கு பெண்கள் இரண்டுபேர் போராளிகள், மற்றைய இருவரும் கல்யாணம் செய்து வெளிநாட்டில் இருக்கினம். பொன்னம்பலம் சற்று நிலைகுழம்பியதாக தோன்றினாலும் "நீங்கள் நிதானிதான் என்றார்".

அம்மாவும் நானும் இங்கே கிளிநொச்சியில் இருக்கிறோம் என்றார் வைத்தியலிங்கம். பொன்னம்பலம் ஒரு கணம் தலைகுனிந்தார். பிறகு நிமிர்ந்து மௌனமாக இருந்தார். அவருடைய வரலாற்றை அறிய விரும்பிய வைத்தியலிங்கம் ஒரு கப்பல் கம்பனி நிர்வாகியாக போயிருக்கிறார் பொன்னம்பலம் என்றல்லவா அந்நாளில் நண்பர்கள் பேசிக்கொண்டார்கள். அப்படியொரு கப்பல் ஓடியதாக நான் கேள்விப்படவில்லையே என்ன நடந்தது சொல்லுங்கோ என்று கேட்டார்.

"கப்பல் வாங்கும் முன்பே கடலில் மூழ்கிப்போச்சே" என்று சொல்லி சிரித்தார்.

"நீங்கள் தப்பிப்பிழைத்தது பெரிது"

உங்களுக்குத் தெரியும் துரைராசா முன்னாள் சிவில் சேவன்ற் அவரும் இன்னும் இரண்டு தமிழ்முதலாளிமாரும் சேர்ந்து தொடங்கிய கம்பனி கப்பல் வாங்குமுன்பே அவர்களிடையே சச்சரவு வந்து பிரிந்து போனார்கள்.

"பணம்படைத்த தமிழன் எங்கள் மண்ணில் உருப்படியாக எதைத்தான்





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



செய்து வந்தான்." எல்லாரும் தலைநகரிலே முதலீடு செய்தார்கள் தெற்கு வரை நம் மண் பொருளாதாரமின்றி வரண்டு கிடக்கின்றது.

சரி பிறகு.

கொழும்பில் ஒரு எக்ஸ்போட் கம்பனியில் என்னைத் துரைராசா சேர்த்துவிட்டார்; எக்கவுண்டனாக அங்கே தொடர்ந்து 30 ஆண்டுகள் வேலை செய்தேன்.

தேனீர் வந்தது. அதே நேரம் மேலாளர் கையில் இணையத்தளத்திலிருந்து எடுத்த செய்தித்தாள்களுடன் வந்து எழுதுங்கோ என்று கொடுத்தார். இருவரும் சந்தோசமாய் பேசிக்கொண்டிருந்ததை அவதானித்தார் போலும்.

"ஐயாவை முன்னரே தெரியுமா?..." என்று கேட்டார்.

"தெரியும்.. கொழும்பில் ஒரே திணைக்களத்தில் சில காலம்வேலை செய்தனாங்கள்"

"அப்படியா, எந்த ஆண்டு"

"1965-1970ற்கு இடையில்"

ஓ.. பிரிந்தவர் கூடினால் பேசக்களைக்க இருக்கும் என்று சிரித்தவர் ஐயாவுக்கு அந்த மேசை என்று அடுத்த அறையைக் காட்டிவிட்டுப் போனார். தேனீரைப் பருகிய படி இருவரும் அடுத்த அறைக்கு நகர்ந்தனர். அறைவசதியாய் இருக்கா பாருங்கோ. கொஞ்சம் வெப்பமாய் இருக்கு. இல்லையா. இருட்டாய் இருக்கு, யன்னல் இல்லையா"

"இதெல்லாம் ஏசி அறைகள், யன்னல் இல்லை; புசிக்கு கரண்ட் இல்லை; மசல் பற்றாக்குறையாம்; 3.00மணிக்குத் தான் கரண்ட் வரும் வேண்டுமானால் கொஞ்சம் காற்று வர சிறுமாற்றம் செய்யலாம்." திரைச்சீலையை இழுத்து ஒதுக்கிவிட்டு சட்டமிட்ட கறுப்புக்கண்ணாடியை சற்று விலக்கித் தள்ளிவிட்டார் வைத்தியலிங்கம்; காற்று ஓரேவீச்சில் உள் திரும்பியது. "ஏசி எதற்கு இரண்டு யன்னல்கள் வைத்தால் போதுமே" என்றார் பொன்னம்பலம் மதிய உணவுவேளை பொதுமேசைகளில் புதியவர்களும் இளைஞர்களும் அமர்ந்து சாப்பிட்டனர்; பொன்னரும் வைத்தியரும் அருகருகே அமைதியாய் இருந்து சாப்பிட்ட பின்பு வெளியில் நிற்கும் மாமரத்து நிழலுக்கு வந்தனர். மேகத்தை மறைத்து கூடலாய் செழித்திருந்த கிளைகளை தலைநிமிர்த்திப் பார்த்த பொன்னம்பலம் "ஒரே நேரத்தில் பூவும் பிஞ்சும் முத்திக் கருத்தகாயும் இருப்பது ஆச்சரியம் என்றார். கைக்கெட்டிய மாங்காய்களை தன் விரல்களால் வருடிய படி என் மூத்த மகளின் பெயரும் மலர்தான் பொன்னம்பலம் பி.எஸ்.சி படித்தவள்; கொழும்பில் தமிழ் மங்கையர் கல்லூரியில் படிப்பித்துக்கொண்டிருந்த போது கலியாணமாகி இப்ப அவுஸ்ரேலியாவில் இருக்கிறாள். மற்றவள் மதிவதனி பி.ஏ. கலியாணமாகி ஜேர்மனியில் இருக்கிறாள். பொன்காந்தன் எக்கவுண்டன் - சி கனடாவில் இருக்கிறான் அவ்வளவுதான்"

"அக்கா"

"அவவும் கனடாவில்"

"என்னசிக்கல் நீங்கள் ஏன் ஒரு பிள்ளையுடனும் போய் இருக்காமல் தனியாய் வன்னியில் இந்த வாடிடம் தங்கியிருக்கிறீர்கள்"

"இன்று நேற்று அல்ல நான் 30வருடமாய் தனியாகத் தான் இருக்கிறேன் வைத்தி"

"அவ கனடாவுக்கு போகும் முன்பே பிரிந்திருந்தீங்க....."

"அத்தோடு நிறுத்தி வேறேதும் பேசுவோமே"

ஏன் பிரிந்தீர்கள்? என்று கேட்க இடமளிக்காமல் கண்டிப்புடன் தவிர்த்துக்கொண்டாரே.

"இப்ப இங்கே எங்கே தங்கியிருக்கிறீர்கள். அதோ அந்த மூன்றாவது அறையில் தங்கியிருக்கிறேன். இன்று தொடக்கம்"

"அது போராளியள் தங்கும் அறைகள் அல்லவா".

"அதில் ஒன்று எனக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்".

"உங்கள் எதிர்காலம் பற்றி?" கேள்விபாதியில் நிறுத்தி அதுவும் பொன்னருக்குப்பிடிக்காதோ என்று எண்ணினார். வைத்தியலிங்கம் அவரைப்புரிந்து கொண்டு பின்பக்கமாக யாதும்ஊரே யாவரும் கேளிர். வன்னியும் என்னுடைய ஊர்தான்; நீ இங்கே இருக்கவேண்டாம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்; என்னை சூழ இருப்பவர்கள், இங்கு இருப்பவர்கள் எல்லாரும் சகோதர சகோதரிகளே, நான் தனிமையை உணரவில்லை. எதிர்காலம் பற்றியும் சிந்திக்கவில்லை. கொழும்பில் இருந்த காலத்தில் வன்னியில் இருந்து வரும் செய்திகள் எனக்கு வியப்பூட்டன. இங்கே நடைமுறையில் இருக்கும் தமிழீழ நீதிமன்றம், காவல்துறை போன்ற துறைகள் பற்றி அங்கே கேலியும் கிண்டலும் பேசுவார்கள். சட்டவிரோத செயல்கள் என்பார்கள். அதே நேரம் அந்நிய நாட்டு அறிஞர்கள் தமிழீழத்தில் இயங்கும் நிர்வாக அமைப்புக்களை பாராட்டும் செய்திகளை பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் வன்னியை ஒருநாள் நேரில் போய்ப் பார்க்கத்தான் வேண்டும் என்ற கனவு கண்டேன். அது இன்று நனவாகி இருக்கிறது. இங்கே சில இடங்களை சுற்றிப்பார்த்தேன் திட்டமிட்டு பலதுறைகளையும் ஜனநாயகமுறையில் நடைமுறைப்படுத்துகிறார்கள். தனித்தமிழீழ அரசு அமையும் போது அது உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டான ஒரு சனநாயக அரசாக விளங்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தமிழ்தேசம் அடுத்தாண்டில் முழுமையாக விடுதலையடையும் என்று நான் கனவுகாண்கிறேன். அடுத்துவரும் தைத்திங்களில் தமிழீழத்தின் சுதந்திரதினம் கொண்டாடப்படும். அந்த விழாவைப்பார்க்க பலதேசத்தவரும் வந்திருந்து கூடுவார்கள். அந்த நாளில் நான்மட்டும் இங்கே இருக்காமல் அந்நிய மண்ணில் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்

---

(பெயர்கள் கற்பனை)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# முகமூடி

வகுப்பறையில் அவளுடைய நண்பர்களுடன்
ஆபிரிக்கர்களுடைய முகமூடிகளைச்
செய்துகொண்டிருந்த எனது மகள்
அதில் ஒன்றை வீட்டிற்கும் எடுத்து வந்திருந்தாள்
'அம்மா! இது அழகாக இருக்கிறதா'? என்று கேட்டாள்.
அவளோ,
'வெருளி! கண்ணூறுபடாமல் வைக்கிறது'.
தலைமுடிக்காக வைக்கோலையும்
காதுக்குண்டலங்களுக்காக தகரத் துண்டுகளையும்
கண்களுக்காக தேய்ந்து கிழிந்த
சப்பாத்துத் தோலையும் பொருத்தியிருந்தாள்.
நுகர்ந்து கழித்தவைகளைக் கொண்டு உருவாக்கப்படும்
இந்த ஓயாத கலையின் தத்துவம் பற்றி
எதுவும் புரிந்ததாயில்லை அவளுக்கும்.
அவனால் அவளுக்கோ அவளுடைய நாட்டிற்கோ
உதவாமல் போகிறதை
உருவாக்கிக் காண்பிக்கிற ஒரு சிற்பாசிரியனாய்
என் சின்னவள் நின்றாள்.
என் வாடகை வீட்டுச் சுவரில் வெருளியாய்
சிற்பமாய்
நான் அன்றாடம் அணியும் முகமாய் அது
தொங்கியபடி என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது.

தா.பாலகணேசன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

02

# ஒரு ஆத்மாவின் தேடல்



கலைச்செல்வி



உயிருக்கு உயிராக நேசித்த கார்த்திகா மாத்திரம் அவனுக்குக் கிடைத்துவிட்டால் இந்தத் துன்பங்கள் எல்லாம் அவனுக்குத் தூசாகிவிடும். கார்த்திகா நீ எங்கே இருக்கிறாய். கார்த்திகா உன் கவிதைகள் எங்கே? அவனுக்குள் இரத்தம் சூடேறியது. அடக்கி அடக்கி வைத்திருந்த உணர்வுப் பிரவாகம் மெல்ல உடைப்பு எடுக்க முயற்சித்தது. கார்த்திகாவின் நினைவுகளுக்கு விவேகத்தைச் செயலிழக்கச் செய்யும் பலம் உண்டு. விழிகளில் நீர் நிறைந்து விட்டது. நெஞ்சம் விம்மியது தலைக்குள் ஏதோ செய்தது. ஓடிக் கொண்டிருக்கும் சைக்கிள் பாதையில் தடுமாறுவது போல அவனுக்குத் தெரிந்து பல்லைக் கடித்துக் கொண்டு கார்த்திகாவின் நினைவுகளைக் கட்டினான். பொக்கற்றுக்குள் கைவிட்டு கைக்குட்டையை எடுத்து அதன் மடிப்பு குலையாமலேயே விழிகளை ஒற்றித் துடைத்தான். மீண்டும் மீண்டும் கார்த்திகாவின் நினைவுகள் பேய்க்கோலம் கட்டி ருத்திரத் தாண்டவம் ஆடியது. அந்த நினைவுகள் வேகமாக புயலாக அவனை ஆட்டிப் படைக்கும் போது அவனுக்குள் அலைபடும் சித்திரவதைகளை அவனால் மாத்திரமே உணரமுடியும். தான் ஒரு பைத்தியமாய் வீதிகளிலே திரியக்கூடாது என்பதற்காகத்தான் தனக்குத் தானே கட்டளைகள் என்ற கடிவாளங்களைப் போட்டிருக்கிறான். நித்திரைக்குச் செல்லும் நேரத்தில் மாத்திரம் அவள் நினைவுகள் தென்றலாய் வந்து சாமரம் வீசும். சில வேளைகளில் அவனையும் பேனா எடுத்துக் கவிதை எழுத வைக்கும். பல வேளைகளில் அவன் கண்ணீரையே தானமாகக் கேட்கும் வரையும் அவனையும் அறியாமல் கார்த்திகாவின் ஞாபகங்கள் அவனுக்குள் நிழலாடும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கார்த்திகா வறுமை பற்றி மிக அற்புதமாக ஓர் கவிதை எழுதியிருந்தாள். வறுமைக்கு அவள் கொடுத்திருந்த விளக்கம் வினோதனுக்கு மிகவும் பிடித்திருந்தது. கார்த்திகா கனேசன் என்ற அவள் பெயரையும் முகவரியையும் குறித்து வைத்திருந்தான் தினசரிப் பத்திரிகை ஒன்றிலும் அவள் கவிதைகள் வெளியானதைப் பார்த்தவுடன் அவளைப் பாராட்ட வேண்டும் என்ற உந்தலில் ஓர் கடிதத்தை எழுதிப்போட்டான். ஒரு மாதத்தின்பின் நன்றிகள் கடிதம்போன்ற வடிவில் அவனது கடிதத்திற்கு. ஒரு நன்றிக் கடிதம் பதில் வந்தது. அதன் பிறகு அவளுடைய கவிதைகள் எங்கு பிரசுரமானாலும் உடனே வேண்டிப் படிப்பான். அவளுடைய சொல்லீர்க்க அவளை மிகவும் கவர்ந்திருந்தது. ஒரு நாள் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற கவியரங்குக்கு அவனது நண்பன் ராகுலனோடு வினோதன் சென்றிருந்தான். கவியரங்குக்கு தலைமை தாங்கிய ஓர் பழுத்த கவிஞர் புதிய கவிஞர்களை அறிமுகம் செய்து வைத்தார். மூன்றாவது இருக்கையில் அமர்ந்திருந்த உயர்தர மாணவி ஒருவரை அவர் அழைத்த போது

'காரிருளில் வெளிச்சம் போல
கார்த்திகா என்ற சுடர்
தமிழ் குழைத்து தரம் சேர்த்து
நற்கவிதோர் கவி சுமந்து வருவாள்'

என்றவுடன் இருக்கையில் அமர்ந்திருந்த வினோதன் லேசாக அதிர்ந்தான். அவன் உதடுகள் அவனை அறியாமலேயே அவளை உச்சரித்தன. "மச்சான் உவளை எனக்குத் தெரியுமடா" நண்பனிடம் உற்சாகமாகக் கூறினான். ஐந்து அடி உயரம் இருப்பாள். ஒடிந்து விடுவது போன்ற மெல்லிய உடல்வாகு, வட்டமுகம், மின்னு கூறும் கண்கள், சிரிப்பது போன்ற உதடுகள், நெற்றியின் நெருக்கமான புருவங்களுக்கிடையில் சின்னஞ்சிறிய கறுப்பு ஸ்டிக்கர் பொட்டு. வெள்ளையில் நீலவுள் கோடு விழுந்த செக் பிளவுஸ். காலை முக்கால்வாசி மூடியிருக்கும் நீலவுள் நிறத்திலான பாவாடை. அவளுக்கு பதினொறு, பதினெட்டு வயது இருக்கலாம். தனக்குப் பிடித்த கவிதை எழுதுபவள், இத்தனை சின்னவளா என நினைத்தபோது உண்மையான சந்தோசத்தில் குதித்தான் வினோதன்.

நிகழ்ச்சி முடிந்ததுடன் அவளிடம் நேரில்சென்று பாராட்ட வேண்டும் என நினைத்தான். ஏதோ ஓர் உணர்வு தடுத்து வைத்தது. வீட்டுக்கு வந்தவுடன் அவன் முகவரிக்கு ஓர் கடிதத்தை எழுதிச் சேர்த்தான். உடனேயே தாமதமின்றிப் பதிலும் வந்தது தாய்மையான நட்பின் அடையாளமாகவே அவளின் கடிதங்கள் அவனைச் சென்றடைந்தன. நிறைந்த மனுசத் தன்மை, மனிதாபிமானம் மிகவும் பலவீனமான ஓர் வரையறைக்குட்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்த அவள் கடிதங்களை அவனும் வரவேற்றான்; மதித்தான்; பதிலளித்தான் குடும்பங்களின் நலன் விசாரிப்புக்களிலிருந்து, நாட்டு நிலைமைகள் அரசியல், இலக்கியம் கல்வி என்று பலதரப்பட்ட கருத்துக்களும் பரிமாறப்பட்டது. கார்த்திகா தன் அக்காவின் திருமணத்திற்கு வினோதனுக்கு அழைப்பும் விடுத்திருந்தாள். வழக்கத்துக்கு மாறாக அவன் பல தடவை கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். அவன் கொடுத்திருந்த முகவரியின் படி அவளை வீடு கண்டு பிடிப்பது பெரிய சிரமமாக இருக்கவில்லை. கார்த்திகா அவனுக்காகவே காத்திருந்தவள் போன்று உபசரித்தாள். அவன் சந்தோசத்தின் உச்சிக்கே சென்றிருந்தான்.

தொடர்ந்து கொஞ்சக் காலமாக என்னமோ தேவை வந்தால் தான் அவர்கள் நேரிலே பேசிக் கொண்டார்கள், மற்றைய நேரமெல்லாம் கடிதங்களே பரிமாறப்பட்டன. பரிசுத்தமான நட்பின் எதிரொலியாகவே கடிதங்கள் அமைந்தன. ஏதாவது தவறுதலாக எழுதிவிடுவேனோ எங்கே நூக்கி எறிந்துவிடுவாளோ என்ற பயம்வினோதனுக்கு. அவளுடைய ஒழுக்கத்திற்கும் சீரிய சிந்தனைகளுக்கும் தலை வணங்கினான். இந்நிலையில் நாட்டு நிலைமையும் மோசமடைய ஆரம்பித்தது செல்வீச்சுக்கள் விமானக் குண்டுவீச்சுக்கள் யாழ்மண்ணைத் துளைபோட ஆரம்பித்த வேளை மக்கள் இடப் பெயர்வுகளும் ஆங்காங்கே இடம் பெற்றது. பாடசாலைகளும் சீராக இயங்கவில்லை அவள் தன்னை ஒரு தடவை நேரிலே சந்திக்கும்படி அவனுக்கு கடிதம் எழுதியிருந்தாள். நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்கு முன்னதாக அவன் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான். நாட்டின் நெருக்கடியான சூழல் எங்கேயும் யாருக்கும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. அவள் மிகவும் சோகமாக இருந்தாள். ஒரு கிழமை முன்பாக அவளுடைய சித்தப்பாவின் குழந்தை படுக்கையில் இருந்த போது செல்விழுந்து இறந்துவிட்டதாக கூறினாள். "நாங்களும் இடம்பெயர வேண்டி வந்தால் என்ன செய்கிறது!" என ஆதங்கத்துடன் கேட்டாள் கார்த்திகா. "எப்பவும் எதுவும் வரலாம் ஏதோ கடவுளோடு ஒத்தது" என்றான்.

"பிறகு எங்கட தொடர்புகள் துண்டிக்கப்பட்டா...." அவனை நேரே பார்த்துக் கேட்டாள். "ஐயோ அப்படி மாத்திரம் சொல்லாதையும்." அவன் சிரித்தான். ஏதோ நட்பாக கடிதம் எழுதினோம் தொடர்ந்து எழுத வேணும் என்டு விதியா அப்படித் தொடர்ந்து எழுதுறதுக்கு உங்களுக்கு நான் யார்...? வார்த்தைகளால் நெஞ்சிலே நேரில் சுட்டாள். "உங்கட கடிதங்கள் எனக்கு ஒரு டொனிக் மாதிரி அது இல்லாமல் என்னால இயங்க ஏலாது". "என்னுடைய கடிதங்கள் உங்களுக்கு டொனிக் மாதிரி என்டால் எனக்கு உங்கட கடிதங்கள் வருத்தத்திற்கு மருந்து மாதிரி ஆக. டொனிக் இல்லாமல் உயிர் வாழலாம் மருந்து இல்லாட்டி நோய் முத்தி சாக வேண்டியது தான்..." அவள் மீண்டும் சிரித்தாள். திடீரென அவன் தலை விமானம் ஒன்று வட்டமிட்டது "ஓ...கடவுளே! அம்மா என்னைக் காணவில்லையென்டு நெஞ்சில கையை வைத்துக் கொண்டு நிப்பா நான் வரப்போறன் அப்படி இடம் பெயரவேண்டி வந்தால் எப்பிடியும் அறிவிக்கிறன்..."

அவள் போய்விட்டாள் வாக்கு தெய்வவாக்குப் போல இரண்டு மூன்று தினங்களுக்குள்ளேயே யாழ் மண்ணைவிட்டு லட்சோப லட்சம் மக்கள் வெளியேற வேண்டிய துன்பநிலை ஏற்பட்டது. அந்த அவலங்களை ஜென்ம ஜென்மமாய் மறக்கமுடியாது. எல்லோரும் கைக்கு கிடைத்ததை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். அவன் எதை எடுப்பது எங்கே போவது என்பதை விட அவளை எங்கே எப்படிச் சந்திப்பது என்கின்ற யோசனை.

'எல்லோரும் ஒண்டாப் போகல்' ஏதாவது நடந்தாலும் எல்லோருக்கும் ஒண்டாய் நடக்கட்டும். சனம் எல்லாம் கிளாலிக்குப் போய்க் கொண்டிருக்கு. வாங்க நாமளும் தாமதிக்காமல் போவம்' அப்பா கூறிக் கொண்டே புறப்பட்டார். வேறு வழியின்றி வினோதனும் பின் தொடர்ந்தான். ஊரைவிட்டு உறவுகளைப் பிரிந்து அனாதைகளாக புறப்பட்ட அந்த நாள் கார்த்திகாவைச் சந்திக்க முடியாமல் தவித்த தவிப்பு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வினோதனுக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. கிளாலிக் கடற்கரை மனதுக்குள் வந்தது..... கைகள் நடுங்கின. அவனுடைய சைக்கிளை எதிரே வரும் மோட்டார் சைக்கிளுடன் மோதப் போவது தெரிந்தும் அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

இருட்டு விலகி லேசாக நிலா தன்னொளியைப் பூமிக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. ரமா நிலத்திலே பாய்விரித்து லாம்பு வெளிச்சத்தில் குப்புறப்படுத்தபடியே படித்துக் கொண்டிருக்கிறாள். புனிதா இன்று நேரத்தோடு படுத்து விட்டாள். ரமா புரண்டு சரிந்து கிடந்து படிப்பதைப் பார்க்க கமலாவுக்கு கவலையாக இருந்தது.

தன் மாணவப் பருவத்தில் தான் கதிரை மேசையில் இருந்து படித்தது நல்ல ஞாபகம். சமையலறையில் கூட கமலாவுக்கு கீழே உட்கார்ந்து சாப்பிட்டது தெரியாது. அப்போது யாழ்ப்பாணத்தில் எல்லாச் சுதந்திரமும் வசதிகளும் இருந்தது. அவளுடைய அண்ணா தருமலிங்கம் அவள் தாயில்லாத பிள்ளையென்று ஒரு குறையும் வைக்கவில்லை.

திருமணமானவுடனேயே அவள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இளமையில் அனுபவித்த வாழ்க்கையிலும்விட அவள் அருணாசலத்திற்காக பல சுகங்களை இழந்தாள். தான் முன்பு இளமையில் வாழ்ந்த செல்லாக்குச் செருக்கில் ஒரு பகுதியைக் கூட தன் பிள்ளைகள் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என கமலா அடிக்கடி அங்கலாய்ப்பாள். எல்லாவற்றிற்கும் இடப் பெயர்வும் பொருளாதார நெருக்கடியும் தான் முக்கிய காரணம் என அவளுக்குப் புரியாமல் இல்லை.

"ரமாக்குட்டி என்ன நேரமனை?" ரமா கையிலே மணிக்கூட்டைக் கட்டிக் கொண்டு நேரம் பார்த்து கணக்குப் பாடம் செய்து கொண்டிருந்தாள்.

"இப்ப சரியா ஒன்பது முப்பத்தி ஐந்து என்றாள்."

"என்னது ஒன்பது முப்பத்தைஞ்சோ?"
"ஓம் இன்னும் அண்ணா வரவில்லையோ?" கேட்டாள் ரமா.

தன் மாணவப் பருவத்தில் தான் கதிரை மேசையில் இருந்து படித்தது நல்ல ஞாபகம். சமையலறையில் கூட கமலாவுக்கு கீழே உட்கார்ந்து சாப்பிட்டது தெரியாது. அப்போது யாழ்ப்பாணத்தில் எல்லாச் சுதந்திரமும் வசதிகளும் இருந்தது.

"ஓமடி பிள்ள அண்ணையைக் காணேல்ல ஏன் கணங்கிறானோ தெரியேல்ல.. கமலா பதட்டமாக. "அரவிந்தன் மாஸ்ரற்ற பிள்ளைக்கு பேர்டே என்று சொன்னவர் அங்க தான் வெளிக்கிட்டுறா போல..' என்று விட்டு மீண்டும் படிக்கத் தொடங்கினாள் ரமா. கமலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கதைச்சு சிரிக்க வீணாக நேரத்தை கழிக்கும் சுபாவம் வினோதனுக்கு இல்லை. மாலை ஆறுமணிக்கு வகுப்புக்களை முடித்துக் கொண்டு பிறந்த நாளுக்கும் போய்விட்டு மீண்டும் எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிவரை போஸ்மாஸ்டரின் மகளுக்கு வீட்டுக்குச் சென்று பிரத்தியேக வகுப்பு எடுத்துவிட்டு வருவதாகக் கூறியவன் ஒன்பதரையாகியும் ஏன் வரவில்லை. வீட்டுக்கும் படலைக்கும் நான்கு ஐந்து தடவை நடந்து களைத்தாள் கமலா. கடைசியாக முற்றத்திலே அவள் வந்து உட்காரவும் படலையடியில் ஒரு சைக்கிளில் இருவர் வந்து இறங்குவது தெரிந்தது.

வினோதன் தானாக நடந்து வருவதைக் கண்டு ஏதோ நடக்கக்கூடாதது நடந்து விட்டது என நெஞ்சுக்குள் பதறியபடியே கமலா எழுந்தாள். நிலா வெளிச்சத்தில் வினோதனின் தலையில் கட்டுப் போட்டிருப்பது அவளுக்குத் துல்லியமாக தெரிந்தது.

'ஐயோ என்ன ராசா நடந்தது......'
துடித்துப் போனாள் கமலா. அவள் போட்ட சுக்குரலில் அயலவர்களும் விழித்துக் கொண்டார்கள். "சத்தம் போடாதேங்கோம்மா.... எனக்கு ஒண்டுமில்லை........' என்றபடி வீட்டுக்குள் சென்று அந்தக் காட்டுத்தடியிலான கட்டிலில் உட்கார்ந்தான்.

"வாங்க மாஸ்ரர் உட்படி இருங்கோ" என்று நிரஞ்சன் மாஸ்ரரை தன்னுடன் இருக்கக் கூறினான். புனிதா திடுக்குற்றவளாக படுக்கையில் இருந்து ஓடி வந்தாள். ரமா படபென்று புத்தகத்தை போட்டுவிட்டு பதட்டமாக நின்றாள்.

"அண்ணாவுக்கு என்ன சேர் நடந்தது" ரமா நிரஞ்சன் மாஸ்ரரைப் பார்த்து அழுதபடியே கேட்டாள். புனிதா "அண்ணா"..... என்று லேசாக விம்மி அழுதாள். "பெரிசாய் ஒண்டுமில்லை கடவுள் காப்பாத்திப் போட்டார்... சைக்கிளில் வேகமாக மோட்டார் சைக்கிள் ஒன்றோடு அடிபட்டு விழுந்திட்டார். அந்த நேரம் பெரிய வாகனம் ஏதாவது வந்திருந்தால் கதை வேறு... கனக்க யோசியாதீங்கோ. மன்னி றோட்டில கல்லுத்தானே கிடக்குது கல்லுக்குத்தித்தான் மாஸ்ரருக்கு மண்டையில காயம்... கொஞ்சம் இரத்தம் போட்டுது... மூண்டு இழை பிடிச்சிருக்கிறாங்கள்....' என்றார் நிரஞ்சன் மாஸ்ரர். 'நீங்களும் வழியில வரப் போய் என்ர பிள்ளையை நேரத்தோட ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் மருந்து கட்டிக் கொண்டு விட்டிருக்கிறியள்... உங்களுக்குத்தான் நாங்கள் நன்றி சொல்ல வேணும்...' என்றாள் கமலா நிரஞ்சனைப் பார்த்து. புனிதா வினோதனின் சேட்டப்புளைத் திறந்து சேட்டைக் கழற்றிவிட்டாள் பின் பக்கமாக கையை எடுக்கின்றபோது நெஞ்சில் வின்னென்று வலித்தது வினோதனுக்கு. 'ரமா..... மாஸ்ரருக்கு ரீ போட்டுக் கொண்டு வா...' என்றான் வினோதன். ரமா சட்டென்று குசினிப்பக்கமாய் ஓடிப் போனாள். 'உந்த நெஞ்சுப் பக்கம் கொஞ்சம் வீக்கமாய் தெரியுது சேர் இதை நாளைக்கொருக்கா டொக்டரிட்ட கொண்டு போய் காட்டுங்கோ...' என்று நிரஞ்சன் மாஸ்டர் கூறவே கமலா பதறியபடியே அவன் நெஞ்சைத் தொட்டுப்பார்த்தாள்.

'ஐயோ கடவுளே பெரிசாய் வீக்கம்கிடக்கு விழுந்ததில அடிபட்டுப் போச்சுது...' மீண்டும் அழுதாள் கமலா. 'என்ன அம்மா நான் என்ன செத்தா போகப் போறன் ஒப்பாரி வைக்கிறியள். சும்மா போய் இருங்கோ அவர் அட்டம் நித்திரை கொள்ள விடுங்கோ...' வினோதன் கோபமாகக் கூறினான். கமலா அதன் பிறகு வாய்திறந்து



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எதையும் பேசவில்லை. ரமா வினோதனுக்கும் நிரஞ்சனுக்குமாய் டீ கொண்டு வந்து கொடுத்தாள். 'உங்களுக்கு இரண்டு தங்கச்சி மாரே சேர்...' நிரஞ்சன் கேட்டான். ஆம் என்று தலையாட்டினான் வினோதன். 'நான்வரப் போறன் நாளைக்கு லீவு போட்டுட்டு நெல்ல படுங்கோ...' கூறிக் கொண்டே எழுந்தான் நிரஞ்சன். அவனை நன்றியோடு வழி அனுப்புவதற்காக புவிதாவும் கமலாவும் ரமாவும் வெளியே வந்தார்கள். கட்டிலை விட்டெழுந்தான் வினோதன் தலை சுற்றியது.

'நீங்கள் இருங்கோ மாஸ்ரர் நான் போட்டு வாறன் ஏதாவது உதவி தேவையென்டால் சொல்லுங்கோ வாறன்...' அவன் போய்விட்டான். மோட்டார் சைக்கிளுடன் மோதி வீழ்ந்திருந்தது மாத்திரம் தான் வினோதனுக்குத் தெரியும். விழித்துப் பார்த்த போது ஆஸ்பத்திரியில் கட்டிலில் படுத்திருப்பதுதெரிந்தது எதிரே நிரஞ்சன் மாஸ்டர் நின்றிருந்தார். சமயத்தில் நிரஞ்சன் செய்த உதவிக்கு மனதுக்குள் நன்றி கூறினான் வினோதன். அம்மா அவசரமாக வந்து சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு வந்தாள். புவிதா வினோதனுக்குப் பக்கத்திலே வந்து உட்கார்ந்தாள். ரமாவும் வினோதனைப் பார்த்தபடியே நின்றிருந்தாள். இரண்டு பேரையும் மாறிமாறிப் பார்த்தான் வினோதன். ஒரு காலமும் தங்கையார் இருவரும் அண்ணாவுடே இப்படிச் சோர வில்லை. குமரனும் வீட்டை விட்டுப் போனபின் காலங்கள் ஓட ஓட கவலைகளும் கஷ்டங்களும் அதிகரிக்க... கார்த்திகாவின் பிரிவும் ஒரு புறம் வாட்டியெடுக்க இதனால் தேவையற்ற காரணங்களுக்கெல்லாம் அடிக்கடி தன் தாயோடும் தங்கையோடும் கோபிக்க ஆரம்பித்தான் வினோதன். அவனுடைய கண்டிப்பையும் கோபத்தையும் புரிந்து கொண்டு கமலாவும் புவிதாவும் செயற்படுவார்கள். ஆனால் ரமாவோ அவனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் தெரியாது பல தடவைகள் அவனிடம் வேண்டிக் கட்டிக் கொள்வாள். இதனால் அண்ணா என்றால் ஓர் பயம் கலந்த பாசம் அவளிடம் குடிகொண்டிருந்தது. இயல்பையாகவே படித்த ரமாவும் உடன் புவிதா நேரே நின்று கதைப்பது குறைவு.

சாப்பாட்டைப் பிசைந்து வாய்க்குள் கொண்டு போவதற்கு கையைத் தூக்கும் போது நெஞ்சு கனி என்று வலித்தது. ஆனாலும் அவன் அவர்கள் பயந்து விடுவார்களோ என்று காட்டிக் கொள்ளவில்லை. 'புவி..... ரமா..... போய்ப் படியுங்கோ...' என்றான் ஏதாவது செய்யதானண்ணா..... உனக்கு ஒன்டு நடந்திருந்தா நாங்கள் அனாதைகளாகியிருப்பம்..... அண்ணா எங்களுக்கு ஆர் இருக்கினம்...' சொல்லி முடிக்கு முன்னே பொல பொலவென கண்ணீர் விட்டாள் புவிதா. 'எங்களுக்கு அவரிக் கொட்டை. நான் தஞ்சம்' என்றாள் ரமா குறுக்கிட்டு. அவனுக்கு உள்ளம் கரைந்து விட்டது. 'கடவுள் அந்தளவுக்கு துரோகம் செய்யமாட்டார். உங்களுக்காகத்தானே நான் உயிர் வாழ்றன்... ஒன்டுக்கும் யோசியாதீங்கோ போய்ப்படுங்கோ...' என்றான். அந்தக் கணத்தில் புரிந்தும் போனார்கள். ரமாவும் புவிதாவும் கமலாவின் வயிறும் குளிர்ந்தது.



ஒரு துன்பம் வரும் போது தான் பாசத்தின் கனக்கீடும் புரிகிறது.

இடைவழியான குளிர்மையான வார்த்தைகளை வினோதனிடமிருந்து கேட்டிருக்கவே மாட்டார்கள் கார்த்திகாவுக்காக தன் சந்தோசத்தையெல்லாம் தொலைத்துவிட்டிருக்கும் அவன் தாய்க்காக தங்கைக்காக ஒரு முறையேனும் சந்தோசமாக அன்பாக அமைவானவினால் என்ன. கூடப் பிறந்தவர்கள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு அவன் நிழலே தஞ்சமென்று இருக்கும் போது தன்னை ஒரு புற நிலைக்குத் தள்ளி தனியே உட்கார்ந்து யோசிப்பது கடமைக்காக வாழ்வது போன்ற ஓர் சுயநலமனப்பான்மையே காட்டுகின்றது.

சாப்பிட்டு முடியவில்லை. மாறாகப் பெரிய அவஸ்தையாக இருந்தது. கையைக் கழுவிக் கொண்டு தண்ணீரைக் குடித்துவிட்டு வெளியே வந்தான். அவனுக்காக படுக்கை போட்டிருந்தாள் அம்மா. படுக்கையில் உட்கார்ந்த போதும் தலை சுற்றுவது போன்று இருந்தது. மெதுவாக ஒருக்களித்து படுத்துக் கொண்டான். புவிதாவும் ரமாவும் ஒரு பாயில் படுத்து உறங்கிவிட்டது தெரிந்தது. முதன் முதலாக அவர்களைப் பார்ப்பது போன்று பார்த்தான்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



'பாவங்கள் ஒரு கள்ளமும் அறியாததுகள். என்ர உயிருக்கு ஆபத்து வந்தால் இவர்கள் என்ன செய்வார்கள்... என்னுடைய கவனக்குறைவு... நான் நிதானமாய் இருந்திருந்தால் உப்பிடி அடிபட்டிருக்கமாட்டன். என்னிலதான் பிழை...' தன்னைக் கடிந்து கொண்டான்.

கார்த்திகா நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் தன்னை இனம் காட்டிக் கொள்ள முடியும். ஆறு வருடங்களாய் அவன் வன்னியில் கார்த்திகாவை தேடாத இடமில்லை. ஏன் அவள் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஒரு வேளை அவள் என்னை மறந்திருப்பாளோ? அல்லது அவளுடைய உயிருக்கு ஏதேனும் ஆபத்து நடந்திருக்குமோ? ஏதேதோ நினைவுகள் சூழ உறங்கிப் போனான்.

விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து அவசர அவசரமாகப் புறப்படும் அவன் ஏழு மணிக்குத்தான் கண்ணை விழித்துப் பார்த்தான். வன்னிக்கு வந்து விட்டகாலங்களில் ஒரு நாளும் இப்படித் தாமதித்து எழும்பியதில்லை. உடம்பு வலித்தது. நபா பற்பொடிப் பைக்கற்றை கையிலே கொண்டு வந்து கொடுத்தாள். வெளியில் ஒரு மரக்குற்றியில் உட்கார்ந்து பற்களைத் தீட்டினான். புனிதா பக்கத்தில் அமைந்துள்ள குழாய்க்கிணற்றில் ஒரு வாளியில் தண்ணீர் கொண்டுவந்து வைத்திருந்தாள். வினோதன் இரவு போட்டிருந்த ஜீன்ஸ் செட் கைக்குட்டை எல்லாவற்றையுமே நேரத்தோடு எழுந்து புனிதா தோய்த்து காயவிட்டிருந்தாள்.

வாயைக் கொப்பளித்து முகத்தைக் கழுவிக் கொண்டு அம்மா கொடுத்த முட்டைக் கோப்பியை வேண்டிக் குடித்துவிட்டு, ஒரு பழைய சோடா போத்தலில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு, வீட்டின் பின்புறமாய் சுமார் இருநூறு மீற்றர் தள்ளி இருக்கும் அடர்ந்த பற்றைகள் நிரம்பிய காட்டுப் பகுதிக்குச் சென்று வந்தான். இடப்பெயர்வு தந்த இன்னுமொரு அனுபவம் இது. மீண்டும் திரும்பி வந்து புனிதா அள்ளி வைத்திருந்த தண்ணீரில் உடம்பை கழுவிக்கொண்டு பாடசாலைக்குப் புறப்படத் தயாராகினான்.

"தம்பி பள்ளிக்கூடம் போகப்போறியோ. உந்த ஏலாப்போட போய் என்னெண்டு படிப்பிக்கப் போறாய். இண்டைக்கு லீவு போட்டால் என்ன...? கமலா தான் கேட்டாள். 'எனக்கு ஒரு ஏலாப்பும் இல்ல. சிட்டி வகுப்புகள் இண்டைக்கு கட்டணம்ப் போட்டன். நிவாரணம் கிடைச்ச கோதுமை நான் தானே நான் பள்ளிக்கூடத்துக்குப் போட்டு வாறன்".

"என்னமோ நாங்கள் சொன்னால் கேட்கவா போறாய்... சரி சாப்பிட்டுட்டுப் போ..... இந்தா இடியப்பம்" இறக்கப்போறன்.. கமலா குசினியைப் பார்த்துப் போனாள்.

வாசலில் பெல் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான் வினோதன். நிரஞ்சன் மாஸ்ரரும் கூடவே சில மாணவர்களும் நின்றிருந்தார்கள். 'வாருங்கோ...' அந்தச் சிறிய கொட்டில் வீட்டுக்குள் அத்தனைப் பேரையும் எப்படி உட்கார வைப்பது என ஒரு கணத்தில் நினைந்து போனான். 'என்ன நிரஞ்சன் மாஸ்ரர் ஒரு குட்டிப்படை திரட்டிக் கொண்டு வாறார்...' மெல்ல சிரித்தபடி கூறினான். பதிலுக்கு எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள். புனிதா இரண்டு நபர் பாய்களைக் கொண்டு வந்து விரித்தாள். அதிலே எல்லோரும் சந்தோஷமாக உட்கார்ந்தது கொண்டார்கள். கமலா குசினிக்குள் நின்று எட்டிப் பார்த்தாள்.

"என்ன மாஸ்ரர் ஸ்கூலுக்கு வெளிக்கிடுறியளோ..." "ஓம் சேர் நான் வராட்டால் எங்கட வீட்டில இன்னும் உப்பிடிப்பல படையள் இறங்கும் அதையும் விட எல்லாரையும் நானே போய் பார்த்திட்டால்.... வீட்டிலும் இருக்க பெரிய விசராக்கிடக்கு." என்றான் சிரித்துக் கொண்டு. வெளியில் உள்ள சீனி வந்திருப்பவர்கள் அத்தனை பேருக்கும் தேனீர் வைப்பது போதுமானதாக இருக்கவில்லை. கமலா ஓடோடிச் சென்று பக்கத்தில் உள்ள வழமையாக கடன் வேண்டும் குமாரின் கடையில் சீனி வேண்டி வந்து தேனீர் வைத்துப் பரிமாறுவதற்கிடையில் களைத்துப் போனாள்.

"சேர் இண்டைக்கு ஓய் வெடுங்கோ..." என்றான் ஒரு மாணவன். 'எனக்கு ஒரு பிரச்சினையுமில்லை.. வீணாக ஏன் பள்ளிக்கூடத்தைக் கட்பண்ணுவான்..."

"சேர் உங்கட சைக்கிள் கொண்டு வந்திருக்கிறம்... நீங் சரியாப் நெளிஞ்சு போச்சு என்னட்ட ஒரு நிம்மும் ரயர் பிழுப்பம் எல்லாமாக கிடந்தது அதைத்தான் போட்டுக்கொண்டு வந்தனாங்கள்..."

"ஐயோ ஏன் சேர் உங்களுக்கு வீண் சிரமம்.."என்றான் வினோதன்.

அவசரமாக நிரஞ்சன் மாஸ்ரர் தன்னுடைய சைக்கிளில் இரவு வினோதனைக் கொண்டு வந்துவிட்டது இப்போது தான் ஞாபகத்துக்கு வந்தது. பாடசாலையில் சக ஆசிரியர் என்ற முறையில் வெறுமனே அந்நியமாய் பழகிய நிரஞ்சன் மாஸ்ரர் திடீரென வினோதனின் உள்ளத்தைத் தொட்டு நிற்பதை ஒரு கணம் யோசித்து வியந்தான்.

"உங்களுக்கு சைக்கிள் முக்கியமெண்டு எனக்குத் தெரியும்... இப்ப பாடசாலை சாமான் எல்லாம் வாத்திலைத்தானே...." என்றார் நிரஞ்சன் மாஸ்ரர்.

"அப்ப நாங்கள் வரப் போறம்"... எல்லோரும் ஒருமித்து எழுந்து கொண்டார்கள் வினோதனும் சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டான். வினோதன் பாடசாலை முடிந்து மத்தியானம் சாப்பிட வந்து உட்கார்ந்த போது தான் கமலாவுக்கு நேற்று அவள் அண்ணன் வந்து போன விடயம் ஞாபகத்துக்கு வந்தது. மெல்ல ஆறுதலாக ஒன்றுவிடாமல் வினோதனுக்குக் கூறினாள். வினோதனுக்கு பேராச ஆச்சரியம். ஆனாலும் மாமாவுக்கு புனிதா கூறிய பதிலே வினோதனுக்கும் சரியெனப்பட்டது. தன்னுடைய வெளிப்படையான எந்தவொரு அபிப்பிராயத்தையும் அவன் அம்மாவிடம் கூறவில்லை. சாப்பிட்டுவிட்டு மௌனமாகவே எழுந்து சென்றான்.

நாட்கள் மெதுவாக நகர்ந்தன. மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு வினோதனின்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நண்பன் ராகுலனின் கடிதம் கனடாவில் இருந்து வந்திருந்தது. அவனின் உள்ளக்கிடக்கை அனைத்தையும் புரிந்து கொண்டவன் ராகுலன் ஒருவனே. கார்த்திகாவின் விடயமும் அவனுக்குத் தான் ஒழிவு மறைவு இன்றி வினோதன் கூறி வைத்திருக்கிறான். தொண்ணூற்றைந்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த போது வினோதன் குடும்பத்தோடு ராகுலன் குடும்பமும் ஒன்று சேர்ந்து தான் வன்னிக்கு வந்தார்கள். கார்த்திகாவைக் காணவில்லை எனத் தவித்த போதும் தோளோடு தோள் நின்று உதவி செய்தான். ஆறுதல் கூறினான் ராகுலன். வன்னியில் வந்தும் ஒரு வருடமாக ராகுலன் குடும்பத்தவர் கிளிநொச்சியில் இருந்தார்கள். அந்த நேரங்களிலும் கார்த்திகாவைத் தேடும் முயற்சியில் மிகக் கடுமையாகப் பாடுபட்டவன் ராகுலன். ஆனால் பலன் தான் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் தங்கள் உறவுக்காரரிடம் கார்த்திகாவின் விலாசத்தைக் கொடுத்து விசாரித்தான். கார்த்திகாவின் அக்காவின் குடும்பம் வெளிநாடு போய்விட்டதாகவும் அவன் தேடல் முயற்சியில் கடைசியாக கிடைத்த தகவலென்பது கார்த்திகா வன்னி யுத்தத்தாக கிளாலியில் தன் குடும்பத்தாருடன் நின்றதாக மாத்திரம் தகவல் கிடைத்தது.

அதன் பிறகு ராகுலன் குடும்பமும் கனடா போய்விட்டது. இருந்த போதும் வினோதனை மறக்காமல் அடிக்கடி கடிதம் போடுவான். முன்பு என்றால் பதிலுக்கு பதில் கார்த்திகாவைப் பற்றி தகவல் கிடைத்ததா எனக் கேட்டு எழுதுவான. காலப்போக்கில் வினோதனுக்கு ஆறுதல் கூறி மாத்திரம் எழுதுவான் இன்று என்ன எழுதியிருப்பான் வழக்கமான நலன் விசாரிப்புகள், தனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருப்பதாகவும் தாயகள் எமப் பெயரிட்டு இருப்பதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தை சரிவந்தால் நாட்டுக்கு முதல் வந்து இறங்குவது தானதான் எனவும் எழுதியிருந்தான். கடைசியாக அவனால் எழுதப்பட்ட வாசகங்கள் வினோதனின் மூளையில் பொறிதட்டியது.

"வினோதன் இங்கு நான் கார்த்திகாவின் தூரத்து உறவுக்காரர் ஒருவரை தற்செயலாகச் சந்தித்தேன். கிளாலியில் தன் குடும்பத்தை கொண்டு வந்து விட்டுவிட்டு கார்த்திகாவின் அப்பா வயதான பாட்டியை ஏற்றி வருவதற்கு

வாயைக் கொப்பளித்து முகத்தைக் கழுவிக் கொண்டு அம்மா கொடுத்த முட்டைக் கோப்பியை வேண்டிக் குடித்துவிட்டு ஒரு பழைய சோடா போத்தலில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வீட்டின் பின்புறமாய் சுமார் இருநூறு மீற்றர் தள்ளி இருக்கும் அடர்ந்த பற்றைகள் நிரம்பிய காட்டுப் பகுதிக்குச் சென்று வந்தான் இடப்பெயர்வு தந்த இன்னுமொரு அனுபவம் இது.

சென்றவராம் திரும்பி வரவில்லையாம். பின்பு அவர்கள் உறவினர் ஒருவர் அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களை அழைத்து வந்தாராம் இப்பொழுது அவர்கள் வன்னியில் தான் என்பதை அந்த நண்பன் உறுதியாக கூறினார். கார்த்திகாவின் அண்ணன் சவூதியில் இருப்பதாகவும் கார்த்திகாவின் அக்கா கனடாவில் இருப்பதாகவும் தான் கேள்விப்பட்டதைக் கூறினார். யாழ்நகரில் இருந்து வன்னி நோக்கிய இடப்பெயர்வில் நீ மாத்திரம் மல்லமச்சான் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு விதமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகள் பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோர்கள். நண்பர்களை, சகோதரர்களை வேண்டியவர்களை உற்றார் உறவினர்களை பிரிந்தவர்கள்... ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு விதமான சோகங்கள், பார்க்கப் போனால் இங்கு சந்தோசமாக இருப்பவர்கள் மிகவும் குறைவு அங்க உள்ள தங்கள் உறவுகளை நினைத்து இங்கு இரத்தக் கண்ணீர் வடிப்பவர்கள் தான் அதிகம். சிலர் மன்றுகளுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் எழும்புக் கூடுகளாகவும் சொந்தங்களைச் தரிசிக்கிறார்கள். இந்த அவலங்களும் கொடுமைகளும் எமக்குச் சொந்தமாய் போய்விட்டது நீ மாத்திரம் கவலைப்பட்டு என்ன செய்யப்

போகிறாய்? எங்க இருந்தாலும் கார்த்திகா உன்னைச் சந்திக்க விதியிருந்தால் சந்திப்பாள். அதற்காக நீ உன்னை வருத்திக் கொள்ளாதே. மனதைப் பக்குவப்படுத்து இது தான் உன் விதி என்றால் அதை நீ ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். எல்லோருடைய தலையெழுத்தும் ஒரு மாதிரி அமைவதில்லையே. இனியேனும் கவலைப்படவேண்டாம். அம்மாவையும் தங்கைமார்களையும் கேட்டதாகச் சொல்லு." என எழுதியிருந்தான் ராகுலன்.

இந்த ஆறு ஆண்டுகளுக்கு பின்னால் ஓர் உருப்படியான பதில் ராகுலன் மூலம் கிடைத்திருக்கிறது. பாவம் கார்த்திகாவின் அப்பாவுக்கு என்ன நடந்திருக்குமோ? குடும்பத்தினர் எப்படித் தவித்திருப்பார்களோ? வினோதனின் அப்பா போக தாங்கள் பட்ட துயரம் தான் மனதில் வந்தது.

அண்ணன் சவூதியில் அக்கா கனடாவில் ஏதோ கொஞ்சம் வசதியாக இருப்பார்கள், வன்னியில் வெளிவரும் பத்திரிகை, சஞ்சிகையிலிருந்து கொழும்பு பத்திரிகை, சஞ்சிகை வரை வினோதன் பார்க்கத் தவறுவதில்லை. எங்கேயாவது ஓர் மூலையில் கார்த்திகாவின் கவிதை வராதா என்ற ஆதங்கம்.

ஒரு வேளை இவர்களும் வன்னியில் சில காலம் இருந்துவிட்டு வவுனியா கொழும்பு என்று போய்விட்டார்களோ.... அப்படிப் போனாலும் கார்த்திகா தன் கவிதைகளையும் ஒரு இடத்தில் கட்டிப் போட்டுவிட்டாளோ சிந்தனை தடம் இன்றி நீண்டு கொண்டே போனது.

ராகுலனின் கடிதத்தைப் பக்குவமாக மடித்து தன் சூட்கேசுக்குள் வைத்தான். வாசலில் ரமா மிக அவசரமாக வந்து இறங்கினாள் சேர்க்க விரும்பிருக்க 'அம்மா' என அவள் போட்ட சத்தத்தில் குளித்துக் கொண்டு நின்ற சுமதி எரிச்சலோடு ஓடி வந்தாள். "என்னடி ரமா ஏன் கத்துறாய்..." என்ற படி வெளியே வந்தான் வினோதன். "அண்ணை பின்ன... என்னண்டு சொல்லன்" என்றான் சுமதி மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க.

"நான்... நான்... சின்னண்ணாவைக் கண்டனான்..." என்றாள் "என்னது...! சின்னண்ணாவைக் கண்டனியோ... எங்க கண்டனி..." ●●●

(தொடரும்)



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காலத்தை வெல்லும் மனிதராகுங்கள்

■ விஜேந்திரன் (சண்) முகாமைத்துவசிந்தனையாளர்



பிரபஞ்சத்திலே நிகழும் அனைத்து மாற்றங்களையும் மில்லி செக்கனில் கணிக்கிடும் அளவிற்கு இன்று நோக்கிற்குள் வளர்ந்திருப்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். நேரத்திற்குத் தோற்றமும் இல்லை முடிவும் இல்லை. நேரம் ஒரு சித்தாந்த தன்மை கொண்டது. பிரபஞ்சத்தின் இயக்கமே நேர ஒழுங்கின் படியே நிகழ்கின்றது. ஒரு மனிதன் கருவில் இருந்து கல்லறைபோகும் வரை அவனது வாழ்நாட்கள் நேரத்தினாலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. நேரத்தை யாராவது வெல்லமுடியுமா? நேரத்தின் பிரதான அடையாளமே மாற்றம் தான். நேரம் என்பது அனைத்தையும் தாண்டியது. மாற்றம் என்பதே அதன் அடையாளம். மாற்றம் என்பதே அதன் அழியாத மச்சம். அது காலம் போலும் கைபோலப்படும், இவை நேரத்தின் தனித்துவங்களாகும்.

இந்தவகையில் உலகில் காணப்படும் அனைத்து சமூகங்களுக்கும் இன, மத, புவியியல் வேறுபாடுகளின்றி அனைத்து மனிதருக்கும் சம அளவில் பக்கச்சார்பின்றி இயற்கையாகவே வழங்கப்பட்ட பொதுவான வளம் நேரம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மனித பரிணாம வளர்ச்சியில் படி மனிதன் நேர ஒழுங்கை உணர்ந்ததை (முழுமையாக) பெற்ற பின்பு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தான் நவநாகரிக வெளிச்சமும் அனைத்துத் துறைகளிலும் வேகமான முன்னேற்றம் மனித சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது. இன்று சர்வதேச ரீதியாக எந்த சமூகம் நேர உணர்வினைப் புரிந்துகொண்டு சரியான முறையில் கடைப்பிடிக்கின்றதோ அந்தச் சமூகமே உலக அரங்கிலே அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தி அடைந்திருப்பதை அவதானிக்க முடியும். உலகில் பின்தங்கிய சமூகங்கள் அனைத்திலும் காணப்படும் பொதுவான ஒற்றுமை என்னவென்றால் நேரத்தை உணர்ந்து பொருத்தமான முறையில் திட்டமிடத் தெரியாத அறியாமையே ஆகும். இதற்கு நமது சமூகத்தினரும் விதிவிலக்கல்ல. இதனை அடிப்படையாகக் கொண்டு நமது சமூகத்தின் நேரக் கொள்கையினை வரலாற்று ரீதியாக நோக்குவோமாயின் தமிழர்களாகிய நாம் ஒரு குழந்தை பிறந்தவுடன் பிறந்த நேரத்தினை பஞ்சாங்கத்துடன் தொடர்புபடுத்தி கோள்களின் திசை அறிந்து குறிப்பெழுதுவதுடன் நின்றுவிட்டோம். இங்கு நேரத்தினைப் பிறப்பு உரிமைக்கோட்பாட்டுக்குள் நின்று சிந்தித்து அதை முழுவாழ்க்கைக்குமே கொண்டு வரவில்லை என்பது உண்மையாகிவிட்டது.



தமிழர்களாகிய
எமக்கு முன்னே ஒவ்வொரு
மணித்துளிகளிலும் புதிய புதிய
சவால்கள் காத்துக்கிடக்கின்றன
என்பதை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்து
செயற்பட வேண்டியது காலத்தின்
கடமையாக உள்ளது

கால நேரம் கண்டு தமிழர்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து விட்டது. இதற்கு உதாரணமாக நம்மவர்கள் வாழ்க்கையில் காலம் கடந்து நிகழும் திருமணங்களைக் குறிப்பிடமுடியும். சாதாரண கலைச்சன் எந்நாளும் கூட பொறுமையாகத்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் தான் நட்சத்திரம் பார்த்து வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் இன்றும் உள்ளனர். தமிழர்களிடையே நேர உணர்வின்றி செயற்படுவது நிரந்தரக் கொள்கையாகிவிட்டது. 'நேரம் இல்லை' என்று கூறுவது நமது உறவுகளுக்கு தேசிய வார்த்தையாகிவிட்டது. இன்று இளைஞர்கள் சிலர் 'சும்மா இருக்கின்றேன்' என்ற புதுத் தொழிலை ஆரம்பித்திருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் பூமியிலே தங்கி விடுவோம் என்ற நம்பிக்கையிலேயே வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். சர்வதேச ரீதியாக உலகில் உள்ள அபிவிருத்தி அடைந்த சமூகங்கள் அனைத்தும் நேர உணர்வுடன் செயற்படுவதை அவதானிக்கமுடியும். காலமே காசு என்பது அமெரிக்கர்களின் வாதம். அமெரிக்கா பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டாலும் குறுகிய காலப்பகுதிக்குள் அனைத்துத் துறைகளிலும் முதன்மை வல்லரசாக வளர்ந்து ஒட்டுமொத்த உலகத் தலைமைத்துவத்தினையும் தமது தேவைக்கேற்ற முறையில் மாற்றும் சக்தியாக உருவெடுத்து அல்ல. வெளியிலும் தனது சாம்ராஜ்யத்தினை நிலைநாட்டும் வாய்ப்பும் விருட்சமாக விளங்குவதற்கு அமெரிக்க மக்களின் நேரக் கொள்கையும் ஓர் அடிப்படைக் காரணமாகும்.

முன்னாள் அமெரிக்க சனாதிபதி கெனடி ஆட்சியிலிருந்தபோது 'பத்து ஆண்டுகளிலே சந்திரனிலே முதல் மனிதனாக அமெரிக்கர் ஒருவரை கால் பதிக்கச் செய்வோம்' என்ற அவரது இலட்சியம் காலத்தை மதிப்புமிக்கதாகத் திட்டமிட்டதனால் 10 ஆண்டுகளில் நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடிபதித்தது உலக சாதனையாக மாறியது. அனைவரையும் சிந்திக்க வைத்தது. இந்தக் காலப்பகுதியிலேதான் நாங்கள் சூரியனை இலக்கியத்துக்குள் நின்றுகொண்டு சந்திரனை குழந்தைகளுக்கு 'மாமா' முறை சொல்லிக் கொடுத்து பாடுவேறு கட்டிக்கொண்டிருந்தோம். உலகப் பணக்காரரான பில்கேட்ஸ் ஒரு அமெரிக்கர். இன்று உலகம் முழுவதும் பில்கேட்ஸ் விற்ற டொலர் வலையில் சிக்குண்டு சின்னாபின்னமாக வேண்டியது காலத்தின் தேவையாகிவிட்டது. இங்கு பில்கேட்ஸின் நேர முகாமைத்துவச் சிந்தனைக்குப் பின்னால் பலகோடி மனித மணித்தியாலங்கள் அணி திரண்டிருக்கிறது. அமெரிக்கர் ஒருவரின் உயர்ந்த பட்ச நேர முகாமைத்துவச் சிந்தனைக்கு அடிப்படையாக கருத முடியும். அமெரிக்கர்களின் அணுகுண்டுப் பரீட்சையில் சாம்பலாகிப் போன ஜப்பான் உலகத் தொழில்நுட்ப நாட்டத்திலும் முதன்மை நாடாகத் திகழ்வதற்கு ஜப்பானிய மக்கள் ஒவ்வொருவரினதும் நேர உணர்வே அடிப்படையாக விளங்குகிறது. ஜப்பானிலே தயாரிக்கப்பட்ட பெறுமதி மிக்க கடிகாரங்களைப் பயன்படுத்தத் தெரிந்த நம்மவர்களுக்கு காலத்தின் அருமை புரியவில்லை என்றால் கடிகாரம் நமக்கு அலங்காரச் சின்னமாகிவிடும். தமிழர்களாகிய நாங்கள் வாழ்க்கையை ஒரு பயணமாக நினைப்பதில்லை. மேலைத்தேசக் கலாச்சாரத்தில் வாழ்க்கையை ஒரு பயணமாகவே கருதுகின்றனர். நம்முன்னோர்கள் காலத்தின் அருமையை உணர்ந்தவர்கள். காலத்தைச் சரியாகத் திட்டமிட்டு வாழ்ந்தவர்கள் என்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியமும் காலம் பற்றி கருத்துரைக்கும் திருக்குறளும் சான்றாக உள்ளது. மேலும் உலகில் உள்ள எந்தவொரு சமூகத்தினரும் தமது அறிவியல் வளர்ச்சியின் ஊடாக நேரத்தின் அளவில் மாற்றத்தினை மேற்கொள்ள முடியாது காலம் என்பது இருக்கின்றது. அது எந்தச் சமூகத்தினருக்காகவும் காத்திருக்காது. இந்த வகையில் உலகில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினரும் தேசிய பாதுகாப்பிற்கான விரிவான அடித்தளங்களை ஒவ்வொரு மில்லி செக்கனிலும் விரிவுபடுத்துவதற்கான தந்திரோபாயமான விழுமியங்களை வகுக்க வேண்டியது உலகப் பொதுத் தன்மையாகி விட்டது.

தமிழர்களாகிய எமக்கு முன்னே ஒவ்வொரு மணித்துளிகளிலும் புதிய புதிய சவால்கள் காத்துக்கிடக்கின்றன என்பதை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் கடமையாக உள்ளது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தொலை அஞ்சல்

தமிழ்க்கவி



"வெறுவாய்க்கில கெடுபாச்
கம்பளைகள் போனைத்த பாதையை
மூடித்தானெல்லோ பாதுகாப்புத்
தேடுறாதுகள்" உடன் என்னடி
செய்கிறாள் ஒருக்கால்போய்
தொலைபேசிக்கோவில்
சம்பந்திக்கிறதோண்டு பாத்துக்கொண்டு
வரச்சொல்லு காத்தால
கூடக்கதைத்துகிறாள். ஆருவாகதில
விழுத்துதுகளோ, எடி பெடியன்
யோசிக்கப் போறானடி நாங்கள் சுகமா
இருக்கிறமெண்டு ஒரு நாலுவார்த்தை
ரெலிபோனில சொல்லி விடுங்கோடி. ம...
பதுங்கா பாதையை அடைச்சுப் போட்டு
கிளிநொச்சிக்குள்ள கொண்டு வந்தெல்லே
சனத்துக்கு குண்டெறியிறாங்கள்."

"சேய் கொஞ்சம் பேசாமகிடவன்
விடியத்துவங்கினதோ வாயோயுதோ..."

"என்னடி என்ன? காலோலை
விழுக்குருத்தோலை சிரிக்குதாம்.
எனை எங்களுக்கொண்டும்
தெரியாதெண்டே
நினைக்கிறியள்".

"கடவுளே இந்த மனிசியின்ர
வாய அடைக்கிறதுக்கு
இல்லையெண்டா என்ர காதைச்
செவிடாக்கு!"

இறுதி வார்த்தையை யார் சொல்வது இதுதான் இப்ப பிரச்சனை தாயா? தாரமா? சந்திரன் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான், எப்போதாவது தனக்கும் தாய்க்கும் ஏற்படும் தாக்கம் தான் என்றாலும் அவன் யாருடைய பக்கமும் சாராமல் நடுநிலை வகுத்து விடுவான். ஆனால் இன்று அப்படி இருக்க முடியவில்லை. சரி, சரி கதையுங்கோ நான் போய்க் கதைக்கிறன் என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்தான். இருந்த சில்லறைக் காசுகளைச் சேர்த்துக் கொண்டு புறப்பட்டான்.

"மோனை அம்மா சுகமெண்டு சொல்லு தஞ்சா என்னெயிறானெண்டு கேள் நாலுமொருக்காக் கதைச்சிருக்கலாம் இந்த ரெலிபோன் லைனையும் வெட்டிப் போட்டாங்கள்."

சின்னாச்சியக்கை புறுபுறுக்கிறதை ஒருத்தரும் கவனிக்கவில்லை. திருமால் யேர்மனிக்குப் போய் அங்கேயே திருமணம் செய்து கொண்டு விட்டான். திருமணத்திற்குக் கூட பெற்றோர் போகவில்லை. இப்ப ஒரு பேத்தி பிறந்திருக்கிறாள் போட்டோவில பார்த்துத்தான் தஞ்சா என்டு பேர் வைச்சிருக்கிறனெண்டு மருமோள் கடிதம் போட்டிருந்தாள். கேட்ட உடன் சின்னாச்சியக்கைக்குச் சிரிப்புத்தான்.

தாங்கள் தான் போய் அந்நிய நாட்டில் தஞ்சமடைஞ்சிருக்கின மெண்டால் பிள்ளைக்கு மேல்லே தஞ்சாவெண்டு பேர் வச்சிருக்கிறான். நல்ல வேளை எழுத்து இலக்கமெண்டு கஞ்சாவெண்டு பேர் வைக்காமல் விட்டான். இப்பயிப்ப வெளிநாட்டால வாற பிள்ளைகளுக்குத் தமிழ் துண்டு துண்டாத்தான் பேசவரும் சிலதுக்கு துண்டா வராது. திருமாலின்ர பொடிச்சியும் என்ன மாதிரியோ தெரியாது. சின்னாச்சியக்கை அந்தநாளையில தமிழ்மொழி தமிழராக என்டு நல்லாப்பாடு பட்ட மனிசி என்ன இடப்பத்தயில் பொன்டுகள் போல வீதியில இறங்கிக் கோசம் போட்ட மனிசிதான், கனிரெண்ட குரல்ல பாடுவ அவைக்கு மேடையிலயே பாட இடம்கொடுத்தவர்கள் தமிழரசுக் கட்சிக் கொடியை வைத்துக்கொண்டு

"கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோணலற்ற கொள்கைகள்
கொடிபறக்குது பாரடா"

என்று மனிசி பாடுற பாட்டு கேட்கச் சிலிர்க்கும். அரசியல் பேசுறதும் அப்படித்தான். உடுக்கெல்லாம் வீரகத்தியார் ஒன்றும் பறையார். வீரகத்தியார் சின்னாச்சி அக்கையை கலியாணம் கட்டினதே ஒரு பெரிய கதை. சின்னாச்சியக்கையின்ர வளர்த்த கடா ஒரு நாள் அவிட்டுப் போட்டுது சின்னாச்சி அக்கையும் ஏனுவட்டும் அலைந்தாள். கிளித்தட்டு மறிக்கப் பார்த்துக் களைச்சுப் போனா, அப்பதான் மட்டை வெட்ட கத்தியோட வளவுக்கு வந்த வீரகத்தியார் கடாவெண்டு படலையைக் கட்டிப்போட்டு எதிர்கப் பார்த்து கிடாயை விழுத்தினதோட சின்னாச்சி அக்கையின்ர மனசிலும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விழுந்திட்டார். ஏற்கனவே ஊருக்கை சின்னாச்சி அக்கை வேற ஆம்பிளையளை இவ்வளவு நெருக்கமாக கண்டதுமில்லை; விரகத்தியும் சின்னாச்சி அக்கையைப் பார்த்தார்; அந்தக் கிடாயோடை ஓடினதிலை அவிண்டு கிடந்த தலைமயிரை விசுக்கென்டு கோதி அள்ளிச் செருகின சின்னாச்சி அக்கை விரகத்தியின்ரை மனசையும் சேர்த்துக் கோதியிருக்கின்றா என்பதை விரகத்தி மட்டுமல்ல வெட்டாமலே படலையை அடக்கேக்கைதான் அறிஞ்சா; அவற்றை மனம் அவிட்டயில்லை.

ஒரு நடைபிணமாயில்லை, விசரன் போல வீட்ட வந்த விரகத்தியத் தாய்மாமன் பாத்த உடன சொல்லிப் போட்டார் பேயன் எங்கேயோ பள்ளத்தில விழுந்திட்டுது என்டு; பிறகு அங்கின இங்கின உசாவிசத்திசதில விசயம் அம்பலத்திற்கு வந்து சின்னாச்சியக்கை விரகத்தி ரெண்டுபேருக்கும் சோறு குடுப்பிச்சு சேர்த்து விட்டினம். ம்... சின்னாச்சிக்கும் இப்ப எழுவது வயசுக்கு மேலாகி விட்டுது. விரகத்தியர் இன்னும் பழைய மிடுக்கோட தான் இருக்கிறார். அஞ்சு பிள்ளையள். இளக்கொடுமைகளுக்காக ரெண்டு மாண்டு போக அந்தச் சூட்டோட வெளியில போனவன்தான திருமால். சின்னவன் சந்திரனோட சின்னாச்சியக்கை இருக்க நடுவிலாள் தேன்மொழியோட விரகத்தியார் போயிற்றார்.

என்ன செய்யிற அதுகளும் ஆணும் பெண்ணும் வேலைக்குப் போறதுகள். பேரப்பிள்ளைகளைப் பாக்கக் கொள்ள ஆள் வேணுமே. சுட்டுக்குடுப்பமாயிருந்து சின்னாச்சியக்கை தலையன் மாக்கண்டு தங்கச்சி முத்துமாச்சி பிள்ளை குட்டியள் முறைய மாறி மாமாவை சின்னாச்சியக்கையின்ரை பிள்ளையள் குருசியப்பு வென்டு தான் கூப்பிடுவாங்கள். மாக்கண்டுவைப்பார்த்து சின்னாச்சிய அக்கைபெண்டு தான் திருமால் கூப்பிடுவான். ஒரு நல்ல நாள் பெரியநாள் வந்தாக்கட எப்பவுக் கலகலப்பா இருக்கிற வீடு சன்னை. சச்சரவுகள் வராமலில்ல முரண்பாடுகள் வந்தா கச்சபு முச்சபு பெண்டு கத்திப் பேசி நீயோ நானோ வன்டு முடிச்சிட்டு ரெண்டு நாளைக்கு முகச்சயத் திருப்பிக் கொண்டிருப்பினம். அந்தப்பிள்ளையால சன்னை வந்திச்சோ அந்தப் பிள்ளையள் சேர்ந்து விளையாடுங்கள். அதோட இவையும் தங்கட அரட்டுத்தனத்தை நெருந்து கொண்டு கதைப்பினம்.

மனதில சமையா முரண்பாடுகளை மறைச்சு வைச்சுக் கொண்டு கத்திச் சண்டை பிடிச்சா நாகரீகமில்லை பெண்டு பிள்ளையள் தனிக்குடித்தனம் போனதால சின்னாச்சியக்கை ஒரு வீடு விரகத்தியன் ஒரு வீடாப் போச்சு. மனசுக்குள்ள பெரிய மாறாங்கல்லைப் போட்ட மாதிரியிருக்கு விரகத்தியாருக்கு. சின்னாச்சியக்கையின்ர கையால சமைச்சாத்தான் திருப்தி. இதுக்காகவே மொத்தச்சமையலையும் சின்னாச்சிதான் செய்யிறது. இப்ப மனிசன் எப்படி இருக்குதோ.

இந்தப் பொடியன் இன்னும் காணேல்ல. ரெலிபோன் எடுத்ததோ என்னவோ யாழ்ப்பாணமெல்லாம் பாதை மூடாம நல்ல இருக்குதாம். கடவுளே! சின்னாச்சியக்கை தவிச்சுக் கொண்டிருக்க சந்திரன் வாறான். என்னவாமடா சுகமாமே?

"ரெலிபோன் எடுக்கேலாமல பதிவுக போட்டு வாறன் எழுவத்து நாலு நம்பர் மந்திமாணம் போல போகச்சிலைக வரும்"

யாழ்ப்பாணம் எடுக்கேலேயே? எல்லாம் மந்திமாணம் தான் எடுக்கலாம்; சின்னாச்சியக்கைக்கு வெப்பியாரம் தாங்க முடியேல்ல.. பிள்ளையள் இருக்குங்கள் விரகத்தி. விரகத்தி சுகமாயிருக்கிறாரோடா? கொப்பரப்பற்றி ஒருக்கா. தொன்னைக்க வந்த சொல்லு தொண்டைக்கேயே நிற்குது கடைசிக் காலத்திற்கு கண்ணில முழிக்காமல் போயிடுவனோ.. எண்டதவிப்பு சின்னாச்சியக்கைக்கு வந்திட்டுது மனிசியின்ர புழுழுத்தவாய் அடங்கிக்கிடக்கு.

மந்திமாணம் சந்திரன் வந்து சொல்லப் போற செய்தியில தான் எல்லாம்.. மந்திமாணம் சந்திரன் போறான்.

சின்னாச்சிக்கும் விரகத்திக்கும் கலியாண எழுத்துமில்லை தாலியும் கட்டயில்லை; சோறு குடுப்பிச்சுத்தான் விட்டது. சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி ஒருத்தில ஒருத்தர் வச்ச அன்பு குறையாமக் கூடாம சமமாத்தான் இருக்கு எப்பவாகிலும் தேன்மொழி அவர் சுகமாயிருக்கிறார் என்டு சொல்லுற சொல்லிலதான் தங்கியிருக்கிறா சின்னாச்சியக்கை.. ம்.

சந்திரன் வாறான்; சந்திரன் பெண்டில் முன்னுக்கு நிற்கிறான்; என்னவாம் அண்ணைக்கு எடுத்த நீங்களே மச்சான் என்னவாம் நாங்கள் சுகமா இருக்கிறமென்டு சொன்னியளா? அலாக்கா என்னவாம் வேறுகோராறுக்கு எடுத்தியளே? கதா கதைச்சவளோ வாறதிருப்பாள்.

அப்பவாறுத்தானப்பா அஞ்சு நிமிசந்தான் கதைச்சது. இனி நாளைக்குத்தான்.. சச, என்ன சனம்..

தம்பி, சின்னாச்சியக்கை எட்டிப்பார்க்கிறா. சந்திரன் குழந்தையைத் தூக்கி மடியில வச்சு செல்லங்கொஞ்சிறான். விரகத்தியும் இப்படித்தான் சந்திரனை வைச்சுக் கொண்டு விளையாட்டுக் காட்டுவர். சட்டென்று சின்னாச்சியக்கைக்கு கண்கள் நிரம்பினாலும் முந்தானையில் அதைத்துடைத்தபடி "கொப்பர் சுகமோவென்டு கேட்டனியே பொடியா"? அந்தக் கேள்வியை கேட்டே விட்டாள்.

"ஓமப் சுகமில்லையாட்டு அறிவிப்பினம்தானே அஞ்சு நிமிசத்துக்க எத்தினையைக் கதைக்கிற".

"என்னவென்டு அறிவிப்பினம்? யாழ்ப்பாணத்துத் தகவல் வருமே எடுக்கிற ரெலிபோனில கேட்டாத்தானே" அவை எடுக்க உன்ர தொடர்பிருக்குமே "என்னடா உன்ர கதை" சின்னாச்சியக்கை புறுபுறுத்தவாறே உள்ளுக்குத் திரும்பினா கண்களை நீர் திரையிட முன்னே கிடந்த கதிரையில முட்டுக்கீழ விழுந்தாள்.

அம்மா...! அம்மா...! சந்திரன் வந்து தூக்கி விட்டான். சின்னாச்சியக்கை தன்ர பாயில படுத்திட்டா. இப்ப அவவின்ர மனதுழி அஞ்சல்ல விரகத்தியருக்கு செய்தியனுப்பிக் கொண்டிருக்கிறா. காதலப்பத்தி உதுகளுக்கு என்ன தெரியும்; நாறுவயசுத்தில் கோட்டுக்குப் போற காதல்தான் இப்ப அது அறுபது வயசில் நீங்களும் நானும் சேர்ந்து உங்களக் கண்டுதான் என்ர உயிர் போகும் உடன புறப்பட்டு வாங்கோ..

●



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கான வீரவணக்க நிகழ்வு




கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பதினைந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு




போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 5ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற 'பொறுமையின் விளிம்பில்' நிகழ்வு




போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 5ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற தீப்பந்தப் பேரணி நிகழ்வு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# எரிமலை
# ERIMALAI

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

Tel: 01 43 58 11 42

Fax: (33) 1 43 58 11 91

e.mail: info@erimalai.info

ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrénées, 75020 Paris, FRANCE

www.erimalai.info

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எரிமலை
ERIMALAI

2007



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive